ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவாலயங்விமூரவே நம:

அத்யமே ச்லோகார்த்த நிர்ணயம்

என்கிற

தத்வப்ரதிஷ்டா விமர்சம்

27 AUG 1937
MADRAS

இயற்றியவர்

V. S. ஸ்ரீநிவாஸய்யங்கார், B. A.,

3/0

PUBLISHED BY

K. A. NARAYANA IYENGAR.

July 1937.

ஸ்ரீவசனபூஷண வ்யாக்யானம்

[விலை ரூபா 1—12—0]

ஸ்ரீவசனபூஷண ப்ரமாணத்திரட்டு

(ஸம்ஸ்க்ருத ஶ்லோக தமிழ் பாசுரங்களுக்குப்
பதவுரை அகராதிகள் உள்பட). [விலை ரூபா 1—4—0]

ஸ்ரீவசனபூஷண வ்யாக்யானம்

(ப்ரமாணத்திரட்டு ஸஹிதம்)

அகராதிகளுடன் கூடியது. [விலை ரூபா 2—8—0]

கிடைக்குமிடம் : —

ஸ்ரீமத் காஞ்சீமுனி நூற்பதிப்புக் கழகம்,
3/4, நல்லண்ணமுதலி தெரு,
சௌகார்பேட்டை, சென்னை.

ஸ்ரீ:

ஸ்ரீ மதே ராமாநுஜாய நம:

பரசமயக்கோளரி

ஸ்ரீமான் - முடிச்சூர் அப்பாரிய ஸ்வாமிகள்.

(இப்பரம காருணிகரே பிராம்மணேதர வர்ணஸ்தர்களான நம்மவர்க்கு இச்சத் சம்பிரதாயத்தை முதன் முதல் உபகரித்தவரும், நாலாயிர திவ்விய பிரபந்தத்தை அச்சில் கொண்டு வந்தவரும்.)

ஸ்ரீ மதே ராமாநுஜாய நம:.

ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்தக லகு லேகனங்கள்.

உபயஸம்ப்ரதாயஸ்தர்களாலும் திவ்யதேசங்களிலும் திருமாளிகைகளிலும் "ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்தாம்" என்கிற ஸ்லோகமானது பிரதிதினமும் அநுசந்திக்கப்படுகிறது அந்த திவ்யாஜ்ஞாபிவிர்த்தியார்த்தம் ஒவ்வொருவரும் தங்கள் சக்தியாநுசாரம் கைங்கர்யங்களுஞ் செய்துக்கொண்டே யிருக்கிறார்கள்.

அடியேனும் "ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்தக லகு லேகனங்கள்" என்கிற பிரசுரங்கள் மூலமாய் ஆசார்யர்கள் மற்ம் பெரியோர்கள் திருவடிகள் நிழலை யாஸ்ரயித்து அங்கு அமர்ந்து ட்ட ஸம்ப்ரதாய விசேஷார்த்தங்களை வெளியிட்டு கைங்கர்யம் ண 'சலமிலா வணிலம்போலே' ஆசைப்பட்டுள்ளேன். ஆசையை சகல அன்பர்களும் தலைக்கட்டி வைக்கும்படியாய் ானு ரூபமாக பிரார்த்திக்கின்றேன்.

துவரையில் வெளிவந்திருக்கின்ற லேகனங்கள். அவற்றின் ுவைகள் கிடைக்குமிடம், அச்சிலிருக்கிற மற்றவைகள், இவை அடியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. தொடர்ச்சியாய் பிரசுரங்களும் வரும். ஒன்றின் வரவைக்கொண்டு மற்றொன்று வெளியிட, காகிதம், அச்சிக்கூலி, பிரசுரச்செலவு இவைகளுக்கு வேண்டிய பொருள் மாத்திரமே இந்தப் பிரசுரங்களுக்கு விலையாக மதித்திருக்கிறது ஆனதால் ஒவ்வொருவரும் இவைகளை விலைக்கேபெற்று கைங்கர்யத்திற்கு ஸககாரிகள் ஆகவேண்டும். ஸம்ப்ரதாயாபிவிர்த்தியில் நோக்குள்ள சகல ஸ்ரீவைஷ்ணவ சங்கத்தார்களும், சபையார்களும், இன்னும் சாரிடியார்களும் இவைகளை நூற்றுக்கணக்காய் வாங்கி பாகவதர்களுக்கு விநியோகம் பண்ணவேண்டும். கிரந்தங்கள் வேண்டுபவர்கள் முன்பணம் அனுப்பியே பெற்றுக்கொள்ளவேண்டும்.

அஞ்சும் - மூணும்	... ...	0	2	0
குஹப்பெருமாள்	... ...	0	1	0
ராஜ ரத்ந சரமங்கள்	... ...	0	4	0

அச்சிலிருக்கின்றவை

ஸ்ரீ க்ருஷ்ண சௌலப்யம், ஸ்ரீ க்ருஷ்ண க்ருஷி, சைதந்யம்.

இப்படிக்கு அடியேன்,

அறிவொன்று மில்லாத மஹாபராதி.

கிடைக்குமிடம்---கோ. கோவிந்தராஜ பிள்ளை,
(*Retired Auditor, Accountant General's Office*)
1/39, சோலையப்பன் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

மதிப்புரை.

ஸ்ரீமத்வேதமார்க ப்ரதிஷ்டாபநாசார்யோபய வேதாந்த
ப்ரவர்த்தகாசார்ய ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யே
த்யாதி பிருதாங்கிதா: ஸ்ரீயதுகிரி யதிராஜ ஸம்பத்குமார
ராமாநுஜ ஸம்யமீவரா:- ஸ்ரீபாஷ்ய கார்யஸம்பவம் வித்வத்வர
ஸ்ரீநிவாஸாசார்யதேவாசிஷா ஸம்பாவயந்தி:—

நாநாந்யாயசதஸ்பூர்த்திஸ்ப்ருதிவேதோ நிவர்த்தமுகவர்த்மக்ருத்
ப்ராப்யப்ராபகபரிஷ்க்ருத்யர்த்தவாதவீதோத்யந்தீஸ்ப்ருயா
யமுநாசார்யவிஷ்ட தூஷிதகூடதோஷஹாநம் நாராயணஸ்ய [ஸூத்ரே
ஸ்லோகஸேநாஞ்ச ஸந்தோஷ்டாயர் விவ்ருதிஸ்ஸ்ரீ ஸ்ரீநிவாஸோ [தி தா
இதி.

சதுஸ்ஸாஹஸ்ரிகசேவம் சயந்ப்ரீதஷஹி
ஸ்ரீராமாநுஜநத்வம் ஸர்வஷயா கணர்ளஸந்த்தம்ஸநாக
ஸாகல்பதஸ்ர த்வகத்வ நகவ்யாஹம்மீஹிரம்மாநுவி
ஸ்வாதிந்ந விகல்காகல்ஸ்ஸ்ஹமயநு பல்பதஸ்யச வத்வவ:
காக: க்ரூங்காராதே விதாயர்யதிதஞ்ஜாதம் கிசேதாவதா.
சவரஞ்ச [மத:
கீணேர்மோந நவாவதாரிதசவாகக்ஷேளரூரூவேகோ
ஸ்வாநம்பல்பதிநிசாவிமேஷரஸநங்காமங்கிராதாஸ்த்யா:
நஷேர்தக்ஷிர்தமாயதீமயாவரிஷ்யம்தொமிஹிம்தஸ்வரநு
ஹகோயொகர்வார க்ஷ்யதஸ்ஸ மநஸாம்நாஸீரமாஸீததி
ஸ்ரீராமாநுஜ:

சாலிவாஹந சகாப்த 1859
ஸம்வத்ஸரே தக்ஷிணாயநே
கர்கடரவி: 16. யாத்ரா
ஹஸ்திகிர்யாதாரண்ய க்ஷேத்ரம்
31 - 7 - 1937.

இந்த விமர்ச க்ரந்தத்துக்கு முகவுரை எழுதுவதனால் நிச்சய மாயவதரிக்கப் போகிற புரோஹாமிதிக்ஷணங்களை த்ருணீகரித்து எல் லோருக்கும் பொதுவான ஓர் இராமாயண ச்லோக விஷயமான இந்த க்ரந்தத்தைப்பற்றிச் சிறிது விக்ஞாபிக்கிறேன். இராமயணம் தோன்றிய காலம்முதல் எல்லா வ்யாக்யாதாக்களாலும் ஆஸேது ஹிமாசலம் எல்லாப் பெரியோராலும் ஏககண்டமா யுரைக்கப்பட் டும் ஆதரிக்கப்பட்டும் வரும் பொருளுக்கும் பாடத்திற்கும் விரோத மாக ஸ்வகபோல கல்பிதமாய் ஓர் விபரீதப்பொருளையும் பாடத் தையும் மஹதாஸம்ப்ரமேண வற்புறுத்தி ருஷிக்கும் ராமனுக்கும் பயங்கரரான ஸ்ரீ அண்ணங்கராசாரியர் எழுதிப் பிரசுரித்த "தத் வப்ரதிஷ்டா பரிசிஷ்டாதி" க்ரந்தங்களிலுள்ள விஷயங்களை ஒவ் வொன்ருக எடுத்து இந்த விமர்சத்தில் பதில் கூறப்பட்டுள்ளது. இந்த விஷயத்தில் லேகப்ரதிலேகங்கள் பலப்ரசுரிக்கப்பட்டுள. ஸ்ரீ அண்ணஸ்வாமியாலும் அவர் சிஷ்யர்களாலும் எழுதப்பட்ட க்ரந் தங்களில் சொல்லப்பட்ட ஒவ்வொன்றையும் பதில் க்ரந்தங்களில் பதில் கூறப்பட்டிருந்தும் அந்த பதில் க்ரந்தங்களிலுள்ள யுக்திகளை எடுத்து ஒவ்வொன்றுக்கும் பதில் கூறவேண்டிய ருஜுவான சாஸ் த்ரக்ஞஸரணியை இதுவரையில் ஸ்ரீ அண்ணஸ்வாமி ப்ரப்ருதிகள் அனுசரிக்கவில்லை. தாஸன் எழுதியுள்ள பல விமர்சங்களில் காட்டப்பட்டிருக்கும் விஷயங்களுக்கு ஒருபதிலையும் காணேம். யுக்தி களை உபேக்ஷிக்க யத்தனப்படாமல், அதற்குச் சக்தியில்லாமல், க்ரந்த கர்த்ருவ்யக்திகளை நிஷ்காரணமாக உபேக்ஷிப்பதைத்தான் இவர்கள் பதில் க்ரந்தங்களில் காண்கிறோம். 'பரித்ராணத்திற்கு' ஏதோ ஸம்ஸ்க்ருத பாஷையில் பதில் எழுதப்பட்டு வருவதாகப் பேசப் படுகிறது. சாஸ்த்ர ஸரணியில் ஸ்ரீ அண்ணஸ்வாமி பதில் க்ரந்த மெழுதுவதாகச் சொல்லுவது யதார்த்தமாயிருக்க வேண்டுமென்று நிரம்பவும் ஆசையாயிருக்கிறது. சாஸ்த்ர விசாரத்தில் இறங்க இறங்க அவருடைய சாஸ்த்ர பரிச்ரமம் எத்தகையதென்று நன்கு விளங்கும். பிறருடைய கண்டன க்ரந்தங்களின் அபேக்ஷையில் லாமலேயே இவர் க்ரந்தங்களே ஸுந்தோபஸுந்த நியாயேன பரஸ் பரவ்யாகாதகமாயும் இவருடைய ஒரோர் க்ரந்தத்திலேயே சில பா கங்கள் மற்ற பாகங்களுக்கு வ்யாகாதகமாயுமிருப்பதை இந்த விமர்ச க்ரந்தத்தில் நன்கு விளக்கியுள்ளது. மரணதரணங்களை யதாச்ருதக்ரமத்தில்தான் பொருள் கொள்ளவேணும், கோவிந்த ராஜர் தப்பாக க்ரமத்தைமாற்றி யுரைசெய்தார் என்று ப்ரதிஷ்டை உபக்ரமத்தில் முதல் பாராவிலும் உபஸம்ஹாரத்திலும் உத்கோ ஷித்துவிட்டு, பாரா 62-ல் தரணத்தை முதல்கோடியாகவும் மர ணத்தைத்விதீய கோடியாகவும் கொள்வதே விவக்ஷிதம் என்று அவதாரணத்துடன் ஸித்தாந்தம் செய்தது. கோவிந்தராஜரை ப்ரதிகூலரென்று பல வருஷங்களாகப் பல க்ரந்தங்களில் இதே

விஷயத்தில் தூஷித்துவிட்டு ஓர் ஸ்வப்னம் கண்டதாகச் சொல்லிக்கொண்டு அவர் வ்யாக்யானத்திற்குத் தப்பர்த்தம் சொல்லப்படுகிறது. கோவிந்தராஜர் இவர்க்கு அநுகூலரென்று இவர் கனாதான் காணவேண்டுமென்று இந்த விமர்சத்தில் அழகாக நிரூபிக்கப்பட்டுள்ளது. "நான் மாள்வேன்" என்று தற்கொலை செய்துகொள்ள ஸங்கல்பித்ததாக தர்மவடிவான இராகவன் விஷயத்தில் நினைக்க முடியுமா என்றும் அழகாக இந்த விமர்சத்தில் காட்டப்பட்டுள்ளது. ஊாஸன் விமர்சங்களில் இங்கே சரணாகதியின் அனுஷ்டானமில்லையென்று காட்டியிருப்பதற்கு அனுகுணமாக இந்த விமர்சக்ரந்தத்தில் பல யுக்திகள் பரக்கக்காட்டப்பட்டு அழகாக நிரூபிக்கப்பட்டுள்ளது. 'இற்றை' என்று பேசுவது தமிழுக்கொவ்வாதென்று இங்கே விஸ்தாரமாகக் காட்டியிருக்கும் விஷயத்தில் தமிழ் வித்வான்கள் பிரமாணம். அதைத் தமிழ்வல்லார் விசாரித்து நிஷ்கர்ஷை செய்யவேண்டும். 'இற்றை' என்பது அஸாதுவானால் ஸ்ரீ அண்ணாகக்ஷிக்கு ஸஹ்யோமரணமே. இராமாயண ச்லோகத்தின் பாடம் ஓர் பழைய அச்சுப்புத்தகத்தில் மேதரணம் என்றிருப்பதை ஆதரிக்க யாதொரு தடையுமில்லை. இந்த விவாதம் கிளம்புவதற்கு பஹுகாலத்திற்கு முந்திய அச்சுப்பாடம் ஸ்வரஸமாயிருப்பதை என் ஆதரிக்கக்கூடாது. இந்த ச்லோகப்பொருளின் சர்ச்சைக்கு இந்த விமர்சக்ரந்தம் மிக்க உபகாரகமென்பது திண்ணமென்று அறுதியிடலாம்.

இப்படிக்கு,

A. V. கோபாலாசாரியார், M. A., B. L.,

அட்வொகேட், திருச்சி. (20—7—37)

பெருக்காறு பலதலைக்குமாப்போல் "அத்யமே" ச்லோகார்த்தம் இவ்வளவு விவாதவிமர்சங்களுக்கு இடங்கொடுக்குமென்று கனவிலும் கருதிலேன். சில காலத்திற்கு முன் வேதாந்ததீபிகையில் அடியேன் அபிப்ராயத்தை "இத்தை முடித்தல் கடத்தல்" என்கிற தலைப்பின் கீழ் விண்ணப்பித்துக்கொண்டேன்' யுக்திவாதங்களால் ஒரு கக்ஷிக்குப்பலகோடிகள் கட்டலாம். சொல்வன்மையினால் பொய்யும் மெய்யாகக்காட்டலாம். அடியேன் மனப்பட்டதொன்றே. அதாவது ஈட்டுப்பங்க்தி "இத்தை முடித்தல் கடத்தல்" ஆனால் பெருமாள் மரணம் என்கிற பொருளைவிட்டொழிக்கவேண்டும். "இற்றை முடிதல் கடத்தல்" ஆனால் சமுத்ரமரணம் என்கிற அர்த்தத்தை மறப்பதே நலம். பூர்வாசாரியர்களைப் பின்பற்றுவதே நம்பணி. சுமார் 300-வருஷகாலமாய் "இத்தை முடித்தல் கடத்தல்" என்கிறபாடம் அரும்பதக்காரர்கள் எல்லாராலும் ஆளப்பட்டு வருகிறது. "இற்றை முடிதல் கடத்தல்" என்கிற பாடத்துக்கு ஒரு ப்ரமாணமும் இல்லை. பெருமாள் மரணம் என்கிற அர்த்தத்தை நிஷ்கர்ஷித்துக்

கொண்டு அதற்குத்தக்கபடி ஏட்டுப்பங்க்தியை மாற்றுவது "Begging the question" என்கிற நியாயத்தில் ப்ரஸங்கிக்கும். நம் பிள்ளையும் தப்பு என்று சொல்வது "முக்கண்ணனுனாலும் பிழை பிழையே" என்று தன் பிழைபாராமல் கடவுளைப்பழித்த நக்கீரன் கோஷ்டியில் சேரும். ஆகையால் பூர்வாசாரியர்கள் திருவுள்ளம் நெகிழ்ந்தது எப்படியோ அதுதான் நமக்குப்பரமப்ராப்யம். அடையவளைந்தான் அரும்பதம் நிர்வகித்த வேதவித்துக்களைக் காட்டிலும் நாம்பெரியோமல்லோம். ஜீயர்மேதாவித்தனம் அவர் அரும்பதத்தில் காணலாம். "தனக்குச்சரணமென்றால் இரங்கும தன்றே தனக்குமரணமானால் இரங்குமதிறே" என்கிற பெரிய வாச்சான்பிள்ளை வ்யாக்யானத்துக்கு "மேதரணம்" என்று அந்வயித்து அர்த்தமிட்ட அப்புவும் அப்படியே.

'தத்வப்ரதிஷ்டையில்' சொல்லப்பட்ட வாதங்களுக்கு விமர்சனம் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் ஸ்வாமி எளிய நடையில் எழுதியது அடியேன் போல்வார்க்குப் பேருதவியாய் நிற்கும். விஷய சர்ச்சைபண்ணுங்கால் தூஷணபரிஹாஸ வார்த்தாஜாலங்கள் வேண்டாம் என்று கை கூப்பிக்கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

C. நரசிம்மாசாரியார், B.A., B.L.,

அட்வொகேட், மதராஸ். (7—7—37)

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
9	21	கீழ்கண்ட	கீழ்க்கண்ட
13	12	ஜடபார்த்தம்	ஜடபதார்த்தம்
19	10-11	சொல்லிக்கொண்டு	சொல்லப்பட்டு
23	16	அவிகாரகாரிதவம்	அவிகாரகாரித்வம்
24	13	தண்ணிரும்	தண்ணீரும்
42	26	பாஸ்பர	பரஸ்பர
44	1-2	ஆகிகின்றன	ஆகின்றன
47	17	அடைவிக்ககூடிய	அடைவிக்கக்கூடிய
49	2	ஸாஹா	ஸாஹர
54	23	கிடைக்குக்கும்	கிடைக்கைக்கும்.
55	12	நிஷ்காம்ய	நிஷ்காம
61	30	இங்ஙன	இங்ஙனம்
71	8	வன்றொடாகமலும்	வன்றொடராகாமலும்
72	31	செய்யப்படுபொருள்	செயப்படுபொருள்
76	25	"	"

முகவுரை

இந்த விமர்சனம் சென்ற வருஷம் ஆகஸ்டுமாதத்தில் அடியேனால் எழுதப்பட்டுச் சில பெரியோர்களால் பார்வையிடப்பட்டது. அவர்கள் இதை ஆமோதித்து, அச்சியற்றி வெளிவிட்டால் உபயோகமாகவிருக்கும் என்று விரும்பியதனுல் அடியேனுக்கும் இதை அச்சியற்றி வெளிவிடவேண்டுமென்ற அவா உண்டாயிற்று. ஆனுல் அச்சிட இயலாமையால் இதுவரை காலதாமதம் ஏற்பட்டது. "தத்வப்ரதிஷ்டை" பாமரமக்களை மயக்குவதாதலால், அவர்களுக்குப்பயன்படுமாறு இவ்விமர்சனம் எளிய நடையில் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. இதில் "ப்ரதிஷ்டையின்" ப்ரதானவாதங்கள் அனைத்தும் கண்டிக்கப்படுகின்றன.

இப்போது வெளியாயிருக்கும் "பூர்வநிர்வாஹ பரித்ராணம்' "தத்வப்ரதிஷ்டா விஜயத்வஜம்" என்கிற கண்டன ப்ரதிகண்டன க்ரந்தங்களுக்கேற்ப சில விஷயங்கள் அநுபந்தம் செய்யப் பட்டிருக்கின்றன.

இதை அடியேன் ஸஹ்ஸத்விவேகிகளான பெரியோர்களுக்கே அர்ப்பணம்செய்துவிட்டு நிர்ப்பானுய் வெளிவிடுகின்றனன்.

இங்ஙனம்:

ஸ்ரீநிவாஸன்.

முன்னுரை

ஸ்ரீராமாயணத்தில் யுத்தகாண்டத்தில் 21-வது ஸர்க்கத்தில் இராமன் தன் ஸேதுபந்தனத்திற்கு வருணன் அனுகூலமாயிருக்கவேண்டுமென்று வருணனை வழிபடும் பிரகரணத்தில்

“𑌅𑌦𑍍𑌯𑌮𑍇𑌮𑌰𑌣𑌂𑌵𑌾𑌥𑌤𑌰𑌣𑌂𑌸𑌾𑌗𑌰𑌸𑍍𑌯𑌵𑌾 ।
𑌇𑌤𑌿𑌰𑌾𑌮𑍋𑌧𑍃𑌤𑌿𑌂𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌹𑍋𑌦𑌧𑌿𑌂 ।
𑌅𑌧𑌿𑌶𑌿𑌶𑍍𑌯𑍇𑌚𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑌤𑍋𑌨𑌿𑌯𑌤𑍋𑌮𑍁𑌨𑌿𑌃” –

என்ற சுலோகம் உளது. இந்த சுலோகத்தில் இராமன் வருணோபாஸனையில் இழிவதற்கு முன் தன்மனதில் என்னநிர்ணயம் செய்துகொண்டான் என்பதை வால்மீகி உரைக்கின்றார். இதன் உண்மையான கருத்துப்பொருள் என்ன வெனில் “இந்த என்னுடைய உபாஸனையின் பலனாக வருணன் பிரஸன்னமாகி என்னுடைய கடற்கடத்தலுக்கு அனுகூலஞ்செய்யாதொழியின் இடைச்சுவராயிருக்கும் இக்கடலை அழித்தாவது நான் கடத்தல் செய்யவேண்டும்” என்று, மேற்கொண்டு அனுஷ்டிக்கவேண்டிய உபாய சிந்தனை நிர்ணயம்செய்துகொண்டு வருணோபாஸனையில் அமர்ந்தான் என்பது. இதுவே சந்தர்ப்பத்திற்குத்தக்கபொருள்.

இதற்கிணங்கவே நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, கோவிந்தராஜர் முதலிய நம்பூர்வாசாரியர்கள் வியாக்கியானம் இயற்றியுள்ளார்கள். இந்த சுலோகத்தில் ஏதேனும் அர்த்த விசேஷமோ அர்த்த சந்தேஹமோ இருக்குமாயின் எடுத்து விளக்கியும் பரிஹரித்து மிருப்பர்கள்.

ஆனால் இப்போது இந்த சுலோகத்திற்கு ஒரு பெரியயோகம் பிறந்து விட்டது. மஹாமதியுடைய ஆராய்ச்சியாளர் ஒருவர் இதற்கு ஒரு விசேஷார்த்தத்தைகண்டுபிடித்து “அத்யமேசுலோகார்த்ததத்வ பிரதிஷ்டா” என்னும் கிரந்தத்திலும் இன்னும் சில கிரந்தங்களிலும் உலகிற்கு உபகாரமாகுமென்று வெளியிட்டுள்ளார். அந்தவிசேஷார்த்தம்தானென்னவெனில் “இக்கடலை எவ்வகையாலும் கடக்கமுடியாவிடின் நான் என்னை அழித்துக்கொள்வதே சரி”

என்று இராமன் தற்கொலையை பிரதிஞைசெய்துக்கொண்டு உபாஸனையில் அமர்ந்தான் என்பதே. இப்பொருளே ஆராய்ச்சியின் மஹத்தான வெற்றி. தரணபிரதிஞை செய்யவேண்டிய இடத்தில் தன்மரண பிரதிஞைசெய்துகொண்டான் என்னும் இவ்வருமைப் பொருள், எவ்வளவு அழகாயிருக்கிறது பாருங்கள்.

இவ்வாராய்ச்சியாளர் தன் பொருளுக்கிணங்க நம்பிள்ளை ஈட்டில் உள்ள வாக்கியத்தையும், கோவிந்த ராஜர் வியாக்கியானத்தில் உள்ளவாக்கியத்தையும் மாற்றவும் திருத்தவும் தலைப்பட்டுவிட்டார்.

இவரது இச்செயலால் பண்டித உலகமே, இராமனது ப்ரும்மாஸ்திரப் பிரயோகத்தால் கடல் "கொள கொள" கொதித்தது போலக்கொதியா நிற்கிறது.

"தத்வ பிரதிஷ்டை" தன் விசேஷார்த்தமாகிய இராமமரணத்திற்கிணங்க நம்பிள்ளை ஈட்டில் "இற்றை முடிதல் கடத்தல்" என்றே யிருந்திருக்கவேண்டும், காலக்கிரமத்தில் லேகக ப்ரமாதிகளால் எழுத்துப்பிழை ஏற்பட்டு "இத்தை முடித்தல்" என்று பாடமாய் ஸாமரமரணத்தில் அந்வயித்து விட்டது என்று தன் ஆராய்ச்சியின் பயனை விரிவாகவும், அழுத்தமாகவும், விடாப்பிடியாய்ச்சாதிக்கின்றது.

இதன் விளைவாக இரண்டு கட்சிகள் கிளம்பிவிட்டன. இவ்விரு கட்சியாளருடைய வாதப்பிரதிவாதங்கள் தனிப்பட்ட கிரந்தங்களிலும், பத்திரிகைகளிலும் மலிந்து கிடக்கின்றன. அவைகளில் பரஸ்பர தூஷண பரிஹாஸங்களும் ரஸமற்ற வார்த்தா ஜாலங்களும், சந்தர்ப்பமற்ற சாஸ்திர விசாரங்களும் நிரம்பியிருக்கின்றன. இவற்றைப்படிக்கப்பெற்ற வாசகர்கள் இவை இவற்றின் ஆசிரியர்களது பாண்டித்யோத்கர்ஷப் பிரகடனத்துக்கு உறுப்பாகவே எழுதப்படுகின்றன என்று நினைக்காமல் இருக்க முடியாது.

தற்காலம் நம் நாட்டிலும் மேல் நாட்டிற்போல ஆராய்ச்சியென்னும் ஆவேசம் தலைவிரித்தாடத்தலைப்பட்டு விட்டது. மேல் நாடுகளில் ஆராய்ச்சியின் பயனாக விஞ்ஞானக்கலைகள் அபிவிருத்தி அடைந்து, இயற்கையின் சக்தி விசேஷங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, பெரிய யந்திர பூதங்கள் ஸ்ருஷ்டிக்கப்பட்டு உலகிற்கு உபகாரமாக உபயோகப்படுகின்றன. இவ்வாராய்ச்சி அழகுக்கலைகளிலும் ஆவேசித்து மாற்றமும் திருத்தமும் செய்யத்தொடங்கிவிட்டது. அழகுக்

கலைகளில் ஆராய்ச்சி வெளியீடுகள் சிலவேபயன்படுபவை, பெரும் பான்மை ரஸமற்றவைபாய் பெரியோர்களால் ஆதரிக்கப்படு வனவல்ல.

நம் ஆராய்ச்சியாளர், ஆராய்ச்சிநைபுண்ய ப்ரதை பெற வேண்டுமென்று, பொன்னேபோற்போற்றப் பட்டுவந்தவைதிக கிரந் தங்களிலும் புகுந்து ஆராயத்தொடங்கி விட்டார்.

ஆராய்ச்சி யென்ருல் வாக்யார்த்த விசாரரூப பரிசீலனம் என்றுதானே பொருள்? ஷெவ ந பிரமாதாதிகள்போல பரிசீலனப் பிரமாதாதிகள் வாராவோ ? ஆராய்ச்சியாளருடைய குற்றங்களெல் லாம் ஆராய்ச்சியிலும் தோன்ருவோ ? „ஷீவொநெதூாத ஙவெஷுவ" என்பது போலத்தானே ஆகும்.

ஆழ்ந்த அறிவுடைய நம் பூர்வாசாரியர்கள், ஸ்ரீராமாயணாதி திவ்ய ஸூக்திகளிலும், ஆழ்வார்கள் அருளிச் செயல்களிலும் பதங்களையும் வாக்கியங்களையும் ஏற்கனவேயுள்ள பாடப்படி வைத் துக்கொண்டு தங்கள் புத்தி சாதுர்யத்தால் சந்தர்ப்பத்துக்கு இணங்க அந்வயம்செய்து, அழகாகப் பொருளுரைத்து, அர்த்த நிர்வாஹம் செய்து அனுபவித்துப் போந்தார்கள். மயர்வற மதி நலமருளப்பெற்ற ஆழ்வார்கள் அருளிச் செயல்களிலும், ஆசார் யர்கள் ஸ்ரீஸூக்திகளிலும், மயர்வு சிறிதும் நீங்கப்பெருத மதி யுடைய ஆராய்ச்சியாளர், தாம் அபிநிவேசம்கொண்ட பொருளுக் கிணங்க அர்த்த சிக்ஷைசெய்து எழுத்துப்பிழை என்று பதங்களை மாற்றி, உலகத்தை மயக்கத் துணிந்ததை மாயமயக்கென்னுமல் வேறென்னவென்று சொல்வது?

அந்நிய மதத்தினர் நம் மதக்கிரந்தங்களைப் படித்து ஆராய்ந்து அர்த்த நிர்வாஹம்செய்வதுபோல் ஆஸ்திகரான ஆராய்ச்சியாளரும் முன்னேர் மொழிகளை அன்புடன் ஆதரியாது தம்மனதிற்கிசைந்த படி ஆராயப் புகுந்து அர்த்தசிக்ஷை பாடசிக்ஷை பண்ணப்புகுவது வியப்பினும் வியப்பே! சில தமிழ்ப்பெரியார்கள் பழைய ஏட்டுப் பிரதிகளை ஆராய்ந்து பாடபேதங்களை அறிந்து ரஸமுள்ள பாடங் களை ஏற்றுக்கொண்டு திருத்தஞ் செய்கிருர்கள். அவர்களைப்போல் நாமும் புகழ்பெற வேண்டுமென்று, எவ்வகையானும் பாடபேத மின்றிக்கே யிருக்க தம் நெஞ்சில் தோற்றிய "இற்றை முடிதலே" இருந்திருக்க வேண்டுமென்று துணிவது ஆகாசத்தாண்டவமே யன்றி வேறில்லை.

தன் சொல்லால்தான் தன்னைக் கீர்த்தித்த இன்கவி, நல்லின் கவி, தீங்கவி, வண்தீங்கவி, தூயவாயிரம் ஆகிய அருளிச்செயல் ஸூக்திகளை ஆர்வத்தோடு பருகிப்பருகிக்களித்து எத்திறம் என்று மோஹித்துக் கிடக்கையன்றிக்கே, அத்திறம் இத்திறம் என்று ஆராய்வாருண்டோ? தேனும், பாலும், கன்னலும் அமுதுமாய கவியமுதத்தில், கடுப்பும் கசப்பும் ஆராய்வாருண்டோ? நமது அறிவைப்பெருக்கிவளர்த்த ஆன்றோர் அமுதமொழியை ஆராய்வது மாத்ருரூப பரிக்ஷையோ டொக்கும். ஆல், உம் என்னும் பதப்பிரயோகங்களுக்குச் சிறிதும் இடமின்றிச் செவ்வனே அமைந்திருக்கும் பூர்வாசாரிய திவ்ய ஸூக்திகளில் இப்படி யிருந்தால் நன்றாயிருக்கும் அப்படி யிருந்தால் நன்றாய் இருக்கும் என்று மனம்போனபடி ஊஹிப்பது வீணேயாம்.

இவ்வாராய்ச்சியாளர்க்குக் கிடைத்த "இற்றை முடிதல்" என்றஞானோதயம், அநுமானம் அர்த்தாபத்தி என்னும் இரு பிரமாணங்களாலும் சித்தித்தது. இவ்விரண்டும்தான் தவறான பிரத்தியக்ஷ ஞானத்தை மூலமாக வுடையன. அத்யாபகர்கள் றகர மெய்யும் றகர உயிர் மெய்யும் சேர்ந்து வரும் இடங்களிலெல்லாம் தகர மெய்யும் தகர உயிர் மெய்யுமாகத் திரித்துக் சேவிக்கிறார்க ளாதலால் இவ்வழக்கத்தைப் பிரத்யக்ஷமாகக் கண்ட நம் ஆராய்ச்சியாளர் "இற்றை" என்பதையும் "இத்தை" என்று முன்னோர் சேவித்திருப்பர், அதனால் தவறாக "இத்தை" என்று எழுத்துப்பிழை ஏற்பட்டு விட்டது என்று நிச்சயித்துக் கொண்டார். என்னே இவரது ஆராய்ச்சித்திறன்! அங்ஙனமாயின் பாசுரங்கள் எல்லாவற்றிலும் 'ற்ற' 'ற்று' வரும் இடங்களில் எல்லாம் மாற்றப்பட்டிருக்க வேண்டுமே யென்பது அவர் நெஞ்சிற் படவில்லை.

இன்னமும் இவர் ஆராய்ச்சித்திறன் தானென்னே! திருவாய்மொழி என்னும் பதத்திற்கு வாயிலிருந்து வந்த மொழியென்று மாத்திரம் பொருள் கூறவல்ல ஆராய்ச்சியாளர் தானே இவர்? வாய் என்றால் உண்மை. உண்மையான மொழி, பொய்யில் பாடல், மெய்ம்மைப் பெருவார்த்தை,ஸத்யவாக்கு, என்று பொருள் கூற, அறிந்தாரில்லையே! "குசலஸத்மீ:" என்ற திவ்ய ஸூக்தியைப் படித்திருந்தும், இதன் பொருள்தான் அது என்று அறிய மாட்டிற்றிலரே இவர்? இத்தன்மையதுதானே இவரது ஆராய்ச்சித்

திறன்? மேலும் ஸ்வயம்விதவ்ருக்ஷாய ப்ராப்தகவே ந லப்யமான (விரைவில் முதலடியில் கிடைத்த) பொருளைக் கொண்டு சந்தர்ப்பத்தை அநுசரியாமல் அர்த்த நிச்சயம் பண்ணினால் ஸவ்யாஸம்வர்ணநீகம் என்பதற்கு யாதவப்ரகாசன் பொருள் கூறினமாதிரிதானே ஆகும்? அதற்கும் இவர் கூறும் அர்த்தத்துக்கும் யாது வேற்றுமை?

போகட்டும், ஆராய்ச்சியின் பயன் தானென்னே என்று பார்ப்போம். இவரது ஆராய்ச்சியின் பயன் இராமமரணத்தையே விளைவித்தது. இதற்கோ இவ்வளவு பரிசிரமம். வால்மீகி "பௌலஸ்த்யவதம்" என்று பெயரிட்டு இராவண மரணத்தைப்பற்றி, ஏழு காண்டங்களில் ஒரு காண்டத்தில் சில சர்க்கங்களில் மாத்திரம் பேசி யிருக்கின்றார். இவரது "தத்வ ப்ரதிஷ்டையோ" ஆரம்பம் முதற்கொண்டு முடிவு வரையில் 148 பாராக்களில் ஒரு பாரா விடாமல் இராமமரணத்தையே பேசுகின்றது. பூர்வம் இராமன் "அராவணம் வா, அராமம் வா" என்று போர்க்களத்தில் பிரதிஜ்ஞைசெய்து ஜகத்தை அராவணமாக ஆக்கினான். இவரோ இரண்டாவது கோடியான அராமம் என்பதைப்பூர்த்திசெய்து ஜகத்தை அராமமாகச்செய்யத்தலைப்பட்டு விட்டார். இவர் தமது விஜயத்வஜத்தில் தாம் "ஸாயகேநாம் விநாஶாயச" என்று அந்வயித்த படியே செய்யத்தலைக்கட்டிவிட்டார். ஆகவே இவரது ஆராய்ச்சியின் பயனால் நாம் இராமனை இழக்கும்படி நேரிட்டது. "விதிவாய்க்கின்று காப்பாரார்?"

இவர் தமது விஜயத்வஜத்தில் பூர்வ நிர்வாகிகள் 2150000 - பக்கங்கள் எழுதினாலும், வால்மீகியே வந்துநேரில்சொன்னாலும்தாம் தெளிந்த இராமமரணம் தப்பவே தப்பாது என்று மர்க்கட முஷ்டியாய்ப்பேசுகிறார். என்னே இவரது மனப்பான்மை! இங்கு அடியேனுக்கு ஓர் சிறுகதை நினைவுக்கு வருகிறது. அதாவது ஒரு மனிதன் ஜ்வரத்தால் பீடிக்கப்பட்டு மூர்ச்சை யடைந்து கிடந்தான். வைத்தியர் வந்து பரீக்ஷித்துப்பார்த்து விட்டு அம்மனிதன் இறந்து விட்டான் என்று சொன்னார். அங்ஙனம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அம்மனிதன் மூர்ச்சைதெளிந்து "ஐயோ நான் இறக்கவில்லையே உயிரோடிருக்கிறேனே" என்றான். உடனே அவன் மனைவி "நன்றாயிருக்கு வாயை மூடுங்கோ 'வைத்யோ நாராயணோ ஹரி:'

என்று சொல்லியிருக்கு. அவருக்குத்தெரியாதாக்கும்” என்றுள்-இது போலவே இராமன் வந்து நேரில் தன்மரணத்தைதான் யோசிக்க வில்லையென்று சொன்னாலும் ஒப்புக்கொள்ளமாட்டார். இதுவே இவரது ஆராய்ச்சியின் திடம்!

இவர் தமது விஜயத்வஜத்தில் தன்னை ஒரு மசகமாகவும். ஆஸுரிஸ்வாமியை மத்தகஜமாகவும், தங்களிருவர்க்கும் போர் நிகழ்வதாகவும், தனக்கே வெற்றி உண்டென்றும் மனோரதிக்கிறு ரல்லவா? மசகம் மத்தகஜத்தைச்சிறிது நேரம் கண்ணிலோ மூக் கிலோ புகுந்துக்கொண்டு ஹிம்ஸித்துப் பிறகு மதப்பெருக்கில் ஒட்டிக்கொண்டு தான் மாயவேண்டியது தானே. ஆக இவர் கூறிக் கொள்ளும் உவமையால் தனக்கே தோல்வி என்பதைத்தெரிவிக்கிற தாக ஆகிறதல்லவா? கும்பகர்ணன் வரம்வேண்டினது போலல்லவா இவர் மனோரதம் இருக்கும்படி ?

இவ்வாராய்ச்சியாளர் இராமமரணத்தையே மேற்கூறிய பொ ருளாகக்கூறி அதன் சார்பாகவே வாதிக்கின்றாராதலால் இவரை இராமமரணவாதி யென்றே இக்கட்டுரையில் விவகரிப்போம். இவரது “தத்வ பிரதிஷ்டையின்” நிர்வாகங்களும் வாதங்களும் குற்ற முள்ளவைகளாயிருக்கின்றனவென்றும், கவிஹ்ருதயத்திற் கும் இராமபிரான் பிரகிருதிக்கும் பூர்வாசாரிய வ்யாக்யானங்களுக் கும் சற்றேனும் பொருந்தவில்லை என்றும் புன்மதியுடைய அடி யேனும் எடுத்துக்காட்டாமல் இருக்க முடியவில்லை. ஏற்கனவே மலிந்து கிடக்கும் வாதங்களை என் கட்டுரையும் பெருக்குவது அனுவசியம் என்கிற எண்ணமிருந்த போதிலும் இந்த சுலோ கத்தின் உண்மைப் பொருளின் பாதுகாப்பில் சிறுமதிச் சிறிய னை அடியேனுக்கும் பங்கும் கடமையும் உண்டு என்பதைத் தெளிவாக்கவே இக்கட்டுரையை எழுத முற்பட்டேன்.

மஹா பண்டிதர்கள் நிர்வாஹம் செய்யவேண்டிய இவ்விஷ யத்தில் அடியேன் தலையிடச்சிறிதும் யோக்யதை இல்லேனாயினும் „ஸத்ருதேவ ஶமதி:” என்று பூர்வ ஸூரிகள் காட்டிய வழியில் ஸாபயமாகச் செல்லும் அடியேனிடத்தில் “ஹயங்கரம்” நிகழ ப்ராப்தமிராதென்று ஸவிநயம் விஞ்ஞாபித்துக் கொள் கிறேன்.

இனி இராமமரணவாதியின் தத்வப்ரதிஷ்டையிலுள்ள முக் கியமான வாதங்களை எடுத்து ஒவ்வொன்றாக விசாரிப்போம். அவை யாவன:—

1. பிரகாரணத்துக்கு இராமமரணமே ஸ்வஸம்மதமாகும், ஸாமரமரணம் சிறிதும் பொருந்தாது என்பது.

2. சரணாகதி வட்டமாகையால் அந்திம காலிகமான ஸ்வமரண நினைவே பொருந்தும் பூர்வ காலிகமான நினைவு எள்ளளவும் பொருந்தாது என்பது.

3. சரணாகதி ஸமயத்தில் உண்டோபாயமாகிய ஸாமர மாரணநினைவு இராமனுடைய ஆர்ஜவத்துக்குச் சற்றும் பொருந் தாது என்பது.

4. க்ரமிகாந்வயமே சிறந்தது வ்யுத்க்ரமாந்வயம் அனுவசி யம் என்பது.

5. தாரணத்துக்கு விகல்பத்தில் விஷம கோடியாகக் கூடியது இராமமரணமே தவிர ஸாமரமரணம் ஒரு படியாலும் சேராது என்பது.

6. ஒரே வாக்கியத்தில் ச என்னும் ஷஷ்டியும், மற்றொரு வாக்கியத்தில் அதே ஸ்தானத்தில் ஸாமரஸ்ய என்னும் ஷஷ்டியும் இருக்கும்போது இரண்டு ஷஷ்டிகளுக்கும் கர்த்ரி அர்த்தமோ கர்மணி அர்த்தமோ வரவேண்டுமே தவிர இரண்டும் கலந்து வருவது ஶாஸ்திர ஸம்மதமில்லை என்பது.

7. இந்த வட்டத்தில், பூர்வர்களால் பிரயோகிக்கப்பட்ட ஶரணாகதி, பிரதிஜ்ஞை, ப்ராயோபவேஶம் என்ற பதங்களின் அர்த்தங்களில் மருண்டு அவைகளை ஸமர்த்திக்கப் புகுதல்.

8. இராமன் மனுஷ்யத்வத்துக்குச் சேரவும் ஸர்வேஶ்வரத் த்வத்துக்குச் சேரவும் கார்யஞ்செய்து போகின்றான் என்பது.

9. தாம் கனவு கண்டதாகச் சொல்லிக்கொண்டு கோவிந்த ராஜ வ்யாக்யான பங்க்தியைக் கோடிட்டுப் பிரித்துக்காட்டி ஸமர்த் திக்கப் புகுதல்.

10. "இத்தை" என்பதை "இற்றை" என்றும், "முடித்தல்" என்பதை "முடிதல்" என்றும் திருத்தி அத்திருத்தத்தை தமிழ் இலக்கணத்துக்குப் பொருந்தச் செய்தல்.

11. "யானொட்டி" யென்னும் பாசுரத்தின் ஈட்டில் த்ருஷ்டாந்த மாக எடுத்த "ஸுஷ்டு ச" சுலோகம் ஸாமரமரணத்திற்குத்த்ருஷ் டாந்தமாகச் சிறிதும் பொருந்தாது என்பது.

மேற்கண்ட வாதங்களை ஒவ்வொன்றாக விசாரிப்போம்.

விமர்சம் 1.

பிரகாரணத்துக்கு ஸாமரமாணம் பொருந்தாது என்பது:— இவ்வபிப்பிராயத்துக்கிணங்க "தத்வபிரதிஷ்டையிலும்" "தத்வ பரிஸிஷ்டத்திலும்" இதர வ்யாஸங்களிலும் எழுதப்பட்டிருக்கும் ஸாரமாவது:—இராமன் யுத்தகாண்டத்தின் முதல் ஸர்க்கத்தில் கடக்கமுடியாத கடலை எவ்விதம் கடப்பதுஎன்று மனச்சோர்வுற்று த்திகைத் திருக்கும்போது வானர முதலிகளால் தேற்றப்பெற்றான். ஏற்கனவே தான் யோசித்தபடியும் விபீஷண யுக்தியின்படியும் ஸரணாகதியே தக்க உபாயமென்று கைக்கொண்டு, கடலரசன் தயைசெய்து வழிவிட்டாலொழிய சீதையை அடையமுடியாது, அங்ஙனம் ஸீதையை இழந்து பிழைத்திருப்பதைவிட இறந்து விடுவதே தான் செய்யவேண்டிய கார்யம் என்று இராமன் பிரதிஞை செய்துகொண்டான். இங்ஙனம் கடலரசன் தயவினாலேயே தான் பிழைக்கவேண்டி யிருத்தலால் ஸ்ரீ நூவரு காஸகமான ஸ்வமரண நினைவே உசிதம் என்றும், அதுவே வருணன் மனதை உருக்கும் என்றும், ஆகையால் வருணன் வழிவிடாவிட்டால் தன்னுடைய மரணத்தையே செய்துகொள்வது என்று ஸங்கல்பித்துக் கொண் டான் என்பது.

ஆனால் மேற்கண்ட விவரணம் கதையின் போக்கையும், இராம ஸ்வபாவத்தையும், கவிஹ்ருதயத்தையும்,மற்றும் வானர முதலிகள் அபிப்பிராயத்தையும் தெளிவு படுத்தும் இராமாயண சுலோகங் களின் உண்மைப்பொருளே யல்லவென்று கீழ்கண்ட விவரணத் தால் தெரியவரும்.

யுத்தகாண்டத்தில் முதல் ஸர்க்கத்தில் இராமன் ஆச்சரிய மான ஹநூமத் வ்ருத்தாந்தத்தைக் கேட்டபிறகு "கடக்க முடியாத கடலை அனுமான் கடந்தானுபினும் எல்லா வானர ஸைந்யங்களேயும் இவ்வாழ நெடுங்கடலைக் கால விளம்பமில்லாமல் எங்ஙனம் தாண் டச்செய்வது, சீதையோ ஒரு மாதம்தான் ஜீவித்திருக்க முடியும் என்று தவணை வைத்திருக்கிறாள், அதற்குள் இராவணவதம்செய்ய வேண்டும், ஆதலால் ஒரு குரங்கையும் பாக்கி விடாமல் அக்கரை கொண்டு சேர்க்கவேண்டும்," என்ற கவலையே இராமனை வாட்டிற்று.

"கத²ம் நாம ஸமுத்³ரஸ்ய து³ஷ்பாரஸ்ய மஹாம்ப⁴ஸ: ஹரயோ த³க்ஷிணம் பாரம் க³மிஷ்யந்தி ஸம்ஹதா:" என்கிற ஸுலோகத்தில் ஹரய: என்கிற பதத்தின் அர்த்தத்தில் குறிக்கப்பட்டவர்கள் சுக்ரீவன், நளன், நீலன் முதலிய சேனாபதிகளல்ல, அவர்களனைவரும் அனுமானைப்போலவே கடலைத்தாண்டவல்லவர், தானும் லக்ஷ்மணனும் இவர்கள்தோள்மீது ஏறிக்கொண்டோ, அல்லது தம்முடைய தவப்பெருக்கால் ரிஷிகள்போல ஆகாச மார்க்கமாகச் சென்றோ இலங்கையை அடைந்துவிடலாம். அவ்வாறு தாங்கள் மாத்திரம் லங்கையைஅடைவதில் இராமனுக்குத்திருப்தியில்லை. தன்னைத்தொடர்ந்துவரும் எல்லாச்சிறு குரங்குகளும் லங்கையை அடையவேண்டும். ஏன்? சிறு குரங்கானாலும் இராம கைங்கர்யத்திலும், யுத்தோத்ஸாஹத்திலும் பெரிய வானரபதிகளிற் காட்டிலும் சற்றும் குறைந்தவரல்லவே. "இமே ஶூரா: ஸமர்தா²ஶ்ச ஸர்வே நோ ஹரியூத²பா: । த்வத்ப்ரியார்த²ம் க்ருதோத்ஸாஹா: ப்ரவேஷ்டுமபி பாவகம்" என்று சுக்ரீவன் சொல்லவில்லையா? ஆகவே அத்தகைய வானரவீரர்களையும் உடனழைத்துச் சென்று இராவணவதம் செய்யவேண்டுமென்று இராமனதுவிருப்பம். வத்⁴யதாம் த்⁴ருவம் ஶத்ரு: என்றதிலும் சிறு குரங்குகளையே சொன்னபடி. இவற்றை யூன்றிநோக்கின் இராமனுக்குத் தான்கடத்தலில் சிறிதும் ஐயமில்லை. படையனைத்தையும் கொண்டு எவ்வாறு கடப்பது என்று மனுஷ்யபாவனைக்கிணங்கத் தளர்வதுபோல் சற்றுச் சோர்வடைகிறான். உடனே சுக்ரீவன் மனச்சோர்வையகற்ற ஒரு உபந்யாசம் செய்துவிட்டு இராமனைப் பலவாறு தேற்றுகிறான். கடலை ஸேதுபந்தனம் செய்தோ, செய்யாமலோ, எவ்வகையானும் தாண்டி இராவணவதம் செய்து சீதையை மீட்டுக்கொண்டு ஜயத்துடன் திரும்பலாம், "ஸர்வதா விஜயீ ப⁴வான்" என்று தேற்றுகிறான்.

இராமனும் உத்ஸாஹமடைந்து "தபஸா ஸேதுப³ந்தே⁴ந ஸாக³ரோச்சோ²ஷணேந வா । ஸர்வதா ஸுஸமர்தோ²ঽஸ்மி ஸாக³ரஸ்யாஸ்ய லங்க⁴நே" என்று வாய்விட்டுத் தன்னுடைய அபிப்பிராயத்தையும் ஸாமர்த்யத்தையும் தெளிவு படுத்தி வானர முதலிகள் கோஷ்டியில் கோஷமிட்டுச் சொல்லுகிறான். இத்துடன் இராமனது சிறிய மனச்சோர்வும் கனலிற் பஞ்சுபோல் தீர்ந்து விட்டது.

இந்த சுலோகத்தில் தன் தவப்பெருக்கினாலாவது, ஸேது பந்தநத்தாலாவது, கடலை வற்றடித்தலாலாவது, என்று மூன்று பிரகாரங்களையும் வ்யக்தமாகக் கூறிவிட்டு மற்ற உபாயங்களையும் ஸர்வதா என்ற வார்த்தையால் தெளிவாகக் கூறுகிறார். இந்த சுலோகத்தில் சில பெரியார்கள் தபஸா என்னும் பதத்துக்கு, ஶரணாகதி: என்று பொருள் கூறி-சரணாகதியால் ஸேதுபந்தனம் செய்தாவது, ஸாகர ஶோஷணத்தாலாவது கடலைக்கடந்து விடலாம் என்று பொருள் கூறுகிறார்கள். இப்பொருள் கோவிந்த ராஜீயத்திற்கிணங்கச் செய்யப்படவில்லை. கோவிந்தராஜர் தபஸா தப:ப்ரபாவேந என்று மட்டுமே வியாக்யானித் திருக்கிறார். தப:ப்ரபாவம் ஏற்கனவே செய்து பெருகியிருக்கும் தவப் பெருக்கைக் குறிக்குமேலொழிய ஶரணாகதியை எவ்வகையாலும் குறிக்காது. "ந்யாஸமேஷாம் தபஸாம் அதிரிக்தமாஹு:" என்பது கொண்டே இங்கு இப்பொருளைப் பொருத்துகிறார்கள். ஆனால் இது பொருந்தாது. எங்ஙனேயெனில், மேலே 19-வது ஸர்க்கத்தில் „ஸமுத்ரம் ராகவோ ராஜா ஶரணம் கந்துமர்ஹதி" அதாவது இராமன் கடலைச் சரணடைய வேண்டுமென்று விபீஷணன் யுக்தி சொன்ன பிறகு, „ப்ரக்ருத்யா தர்மஶீலஸ்ய ராகவஸ்யாப்யரோசத" "ஸத்க்ரியார்த்தம் க்ரியாதக்ஷ:" என்ற வான்மீகி வாக்யங்களாலும் விபீஷண மந்த்ராலோசனையை கௌரவிப்பதற்காகவே என்றும், இராமனுக்குத்தன் நெஞ்சில் ஶரணாகதி எண்ணம் சிறிதும் இல்லை என்பதும் தெளிவாய்த் தெரிகிறது. முந்தின வாக்யத்தில் „ராகவஸ்யாபி" என்பதற்கு எக்காலத்திலும் பிறரைச்சரணாகதி செய்தறியாத சரண்ய குலமாகிய ரகு குலத்தில் பிறந்த ஶரண்யனை தனக்கும், "தர்மஶீலஸ்ய" எப்போதும் தர்ம வத்ஸலனை தன்னுடைய ஸ்வபாவத்தாலே ருசித்தது என்று தெரியவருகிறது. "ஸத்க்ரியார்த்தம்" என்பதற்கு 'விபீஷணஸ்ய பஹுமாநார்த்தம்' என்றும், 'க்ரியாதக்ஷ:' என்பதற்கு 'ஸ்வயம் கார்யகரண ஸமர்த்தோபி' என்றும் கோவிந்தராஜர் வ்யாக்யானிக்கிறார். ஆகவே, இராமன் தான் பிறர் சகாயத்தை எதிர்பாராமலே கார்யங் கொள்ளவல்லனா யிருந்தும், விபீஷண யோசனையை கௌரவிப்பதற் காகவேதான் தர்மஜ்ஞனுகையால் ஒப்புக்கொண்டான் என்று தெளி

வாக ரிஷியால் சொல்லப் பட்டிருப்பதால், இதற்கு முன்னமேயே இராமனுக்குச் சரணாகதியில் எண்ணமுண்டு என்று சொல்வதற்கு எவ்விதப் பொருத்தமுமில்லை. ஆதலின் இங்கு "தபஸா" என்னும் பதத்துக்கு ஶரணாகதி என்று பொருள் எவ்வாறு பொருந்தும் என்பதை அறிஞர்கள் ஆலோசித்துப் பார்க்கவும்.

மேலும் வருணன் முகங்காட்டாதபோது "𑌅𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌫𑌲𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑍇𑌷𑍁 𑌸𑌤𑌾𑌂 𑌗𑍁𑌣𑌾𑌃, 𑌨 𑌸𑌾𑌮𑍍𑌨𑌾 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌃 𑌨 𑌸𑌾𑌮𑍍𑌨𑌾 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 𑌯𑌶𑌃, 𑌅𑌸𑌮𑌰𑍍𑌥𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌧𑌿𑌕𑍍𑌕𑍍𑌷𑌮𑌾𑌮𑍀𑌦𑍃𑌶𑍇 𑌜𑌨𑍇, 𑌸𑌾𑌗𑌰𑌂 𑌶𑍋𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑍁 𑌪𑍍𑌲𑌵𑌙𑍍𑌗𑌮𑌾𑌃; 𑌅𑌦𑍍𑌯 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌶𑍋𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌪𑌾𑌤𑌾𑌲𑌂 𑌮𑌹𑌾𑌰𑍍𑌣𑌵 𑌉𑌤𑍍𑌕𑍍𑌷𑌾𑌰𑍋𑌰𑍍𑌮𑌿𑌕𑍁𑌲𑌂 𑌸𑍃𑌷𑍍𑌟𑌂 𑌨𑌸𑌾𑌰𑌵𑌶𑍇𑌷𑍇𑌰𑍍𑌣𑌵𑌾𑌮𑌰 । 𑌵𑌾𑌰𑌂𑌤𑍇 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌹𑍍𑌵𑌲𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌲𑌵𑌙𑍍𑌗𑌮𑌾𑌃," அதாவது "துஷ்டர்களிடத்தில்ஸாமோபாயம்செய்துபார்த்தால் அஸமர்த்தன் என்று எண்ணுகிறார்கள். நான் முன்னம் அதில் நம்பிக்கை வைக்காதிருந்ததே சரி, இக்கடலைப்பாதாளம் வரைவற்றடித்து விடுகிறேன், வாநரசைந்யம் தரையில் நடக்கட்டும் அல்லது என்பாணஜாலங்களைப்பரப்பி அக்கரைக்கும் இக்கரைக்கும் பாலம்கட்டுகிறேன், வாநரசைந்யம் அதன்மீது நடந்து கடக்கட்டும்" என்ற இராமபாஷணங்களாலும் "𑌯𑍇𑌨 𑌕𑍇𑌨 𑌚 𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌤𑌰𑌾𑌵 𑌵𑌰𑍁𑌣𑌾𑌲𑌯𑌂"- எந்த உபாயத்தாலாவது கடலைக்கடந்து விடலாமென்று வானர முதலிகள் சொல்வதாலும், சரணாகதிசெய்து வருணன் தயவைப்பெற்றுத் தான் கடலைக்கடக்கவேண்டும் என்ற எண்ணம் சிறிதேனும் இல்லாதபோது, சரணாகதி பலியாவிடில் தான் மரணமடையவேண்டுமென்ற எண்ணம் "𑌜𑍀𑌰𑍍𑌣𑌂" கொஞ்சமேனும் உண்டாக இடமிருக்கிறதா என்று விவேகிகள் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகையால் மேற்கண்ட இராமபாஷணங்களும், இதற்கு முன் "𑌤𑌵 𑌸𑌾𑌹𑌾𑌯𑍍𑌯𑌂 𑌯𑍇𑌨 𑌸𑌾𑌗𑌰𑍋 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑍇𑌣 𑌨𑌵𑌾" என்று பலரறியச்சொன்ன சொற்களும் தைரியப்பிரகாசக வார்த்தைகளாக இருக்கும்போது உபாசனசமயத்திற்குமுன் 𑌦𑍈𑌨𑍍𑌯𑌵𑍍𑌯𑌞𑍍𑌜𑌕மான தன்மரண நினைவுகொண்டான் என்பது எங்ஙனம் பொருந்தும்? முன்பின் சந்தர்ப்பத்துக்குச் சற்றேனும் பொருந்தாமலும், விருத்தமாயும் உள்ள பொருளைச்சொல்லிப் பொருத்தப் பார்ப்பதில் யாது பயன்? நிஷ்பக்ஷபாதமாகவும் அபிநிவேசம்

ஒன்றுமின்றிக்கே ஊன்றிநோக்கினுல் இதுநன்கு விளங்குமே யொழிய தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்பார்க்கு மன திற் பதியுமோ ?

இராமன் தன் ஆற்றலை நன்கு உணர்வான். தன் திறமையறி யாது வாய்வீரம் பேசும் அதமவீரனே? நீறு பூத்தநெருப்புப்போல அடங்கியிருக்கும் உத்தம சுத்தவீரனல்லவா ? ஆற்றலுக்கேற்ப அறிவிலும் சிறந்தவனன்றோ ? சுக்ரீவன் „த்வம் ஹி புத்திமதாம் ஶ்ரேஷ்ட: ஸர்வஶாஸ்த்ரார்த்தகோவித:" என்று சொன்னபடி ஸர்வ ஶக்தனும் ஸர்வஜ்ஞனுமல்லவோ ? இன்னவஸ்து இன்னஸ்பாவ முடையது, இன்னகார்யம் இன்னபடி முடியும் என்று முன்னமே தெரிந்துகொள்ளக்கூடிய திறமை நிரம்பப்பெற்றவனல்லனே ? கடலை ஒரு ஜடபார்த்தம் என்றும், அதை எவ்வுபாயத்தாலும் கட ந்துவிடலாம் என்றும் எண்ணினுலும், இராமன் சமுத்திரத்தினது ஸ்வபாவம் அகாதமாயும் விசாலமாயும் உள்ளது, அதற்கு அபி மானிதேவன் ஒருவன் உளன், அவனுலும் அதன் ஆழமான ஸ்வபாவத்தைமாற்ற முடியாது, ஜலத்தை ஸ்தம்பித்துக்கொள்ள வும் முடியாது என்றும் பூர்ணமாக அறிந்தவனே. வருணன்சொல் லித்தெரிந்து கொள்ளவேண்டியவனல்லன். அது காரணம் பற்றியே அவனைச்சரணமடைவது வீண் என்பது இராமனுக்குத்தெரியும் மேலும் ஆகிஞ்சின்ய அநந்யகதித்வங்கள் ஏதேனும் உண்டோ ? அங்ஙனன்றிக்கே காரியசாதனைக்காக ஒருவன் தான் எவ்வளவு சக்தனுன போதிலும் தன்னில் இழிந்த ஒருவனை ஒருசமயம் சகா யம் கோருவது உண்டு, இது ராஜநீதியிலும் மற்றும் உலகநீதியிலும் மிகவும் சாதாரணமாய் அனுஷ்டிக்கப்படும். இவ்வாறே சுக்ரீவனிடம், அவனையும் அவன் படையையும் சகாயமாக்கிக்கொள்ள எண்ணி அவனுடன் ராஜதந்திரமுறையில் பரஸ்பரசகாயத்திற்காக அக்னி சாக்ஷிகமாக ஒப்பந்தம் செய்துகொண்டான். அவன் உபகாரத்தைப் பெறுமுன்னரே தான் அவன் சத்துருவை அழித்து இராஜ்யத்தை யும் திருப்பிக்கொடுத்து, பத்னியையும் மீட்டுக்கொடுத்து, அதன் பிறகே அவனது உபகாரத்தைத்தான் பெற விரும்பிநின்றது. சுக்ரீவன் தன் கார்யம் முடிந்தவாறே உபகாரஸ்மிருதியற்றவனுய் இராமகார்யத்தை மறந்து,சுகபோகங்களில் ஆழ்ந்துவிட, இராமன் அவனைத்தண்டிக்கப்புகவே, சுக்ரீவன் நடுநடுங்கி மன்னிப்புக்கேட்டு கொண்டு இராமகார்யத்தில் ஈடுபடுகிறுன். இங்ஙனம் செய்த

இராமன் சுக்ரீவனிடம் சரண்புகுந்தானென்றால் வ்யாஜமாத்ரமே தவிர உண்மையான ஸரணாகதியோ ? ஸரணாகதி என்னும் பதம் ஔபசாரிகமாகப் பிரயோகிப்பட்டதே யொழிய முக்யார்த்தமாகக் கொள்ளக்கூடாது. ராஜநீதிக்கிணங்க பரஸ்பரசகாய ஒப்பந்தமே தவிர ஸரணாகதி என்று சொல்வது சற்றும் பொருந்தாது. ஆகிஞ்சின்ய அநந்யகதித்வம் உள்ள ஒருவன் செய்யும் சரணமே சரணாகதியாம்.

இவ்வாறே வருணனிடத்திலும் ராஜநீதி முறையில் பரஸ்பர சகாய ஒப்பந்தம் செய்து கொள்வதற்காகவே வழிபட இசைந்து வணங்கினன். இங்கு வருணன் கண்ணுக்குப் புலப்படாத தேவனாகையால் அவனை உபாஸனை மூலமாகவே பிரசன்னமாக்கிக் கொண்டு தனக்கு வேண்டும் வரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். உபாஸனையின் அங்கமாகக் கிழக்கு முகமாக நின்று அஞ்ஜலி செய்து நியமத்துடன் உபாசித்தான். அஞ்சலி காயிகப் பிரபத்தி ரூபமான சரணாகதியென்ற மாத்திரமேகொண்டு பெரியோர்கள் இதையும் சரணாகதியென்று ஔபசாரிகமாகப் பேசுகிறார்கள். உபாஸனா கர்மத்தில் இழிந்தவனுக்கு அதன் பிரதமாங்கமான அஞ்சலியைச் செய்யாமல் வேறென்னசெய்வது ? இது செய்தமாத்திரத்தாலேயே அகிஞ்சனனும் அநந்ய கதியாயுமுள்ள ஒருவன்செய்யும் ஸரணாகதியென்று சொல்வது ஔபசாரிகமென்றும் முக்கிய விருத்தியில் சொன்னதல்ல வென்றும் கொள்ளத் தட்டில்லை. அஞ்ஜலிரூபமான காயிகப் பிரபத்தியைச் சரணாகதி என்று சாஸ்திரம் சொல்வதால் ஸரணாகதி யென்றே பெரியோர்கள் விவகரித்தார்கள். வருணன் இராமனுக்குத் தானாகவே வலியவந்து உபகாரம் செய்யப் பிராப்தமாயிருக்க அது செய்யாதே, இராமன் தன் மேன்மையையும் வருணனது இழிவையும் பாராதே இரந்தும் இசையாமல், பலாத்காரமான தண்டோபாயத்திற்குப் பயந்தே இணங்கினன். வருணனிடத்திலும், அவனது சத்துருக்களான அசுரர்களை முந்துற அழித்து அதன் பிறகே அவன் செய்யும் அனுகூலத்தைவேண்டி நின்றான் இராமன்.

ஆகையால் இராமனுக்கு இன்னபடிதான் கார்யம் முடியுமென்று தெரியுமாதலால் சரணோபாயத்தில் நம்பிக்கை யில்லை இப்படி யிருப்பவனுக்கு தைரியப் பிரகாசக சாகரமாரண

நினைவு தவிர சைதந்ய ப்ரகாசகஸ்வமரணநினைவு எங்ஙனே கூடும்? அறிஞர்கள் ஆலோசித்துத் தெளியவும். உண்மையில் இராமனிடத்தில் சுக்ரீவனும் வருணனும் செய்த ஸரணாகதியே கத்யந்தரமில்லாத சரணாகதி.

ஆதிகவியான வால்மீகிக்கும், இராமன் வருணனை வழிபட்டு இரந்து நிற்பது வருத்தத்தையே விளைவித்தது என்று தெளிவாகத் தெரிகிறது. லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி என்றுலக்ஷ்மணன்சொன்னதுபோலக்கவிபலசுலோகங்களால்ஸத்க்ரியாயாம் க்ரியாதக்ஷ: என்று இராமனது திறமையைப் புகழ்ந்தும் பல பராக்கிரமம் பொருந்திய புஜத்தைப்பலசுலோகங்களால் ஸம்யுகே யுகஸங்காஸம் ஸத்ரூணாம் ஸோகவர்த்தனம் தக்ஷிணோ தக்ஷிணம் பாஹும் மஹாபோகமிவோரகம் “இதி ராமோ மஹாபாஹு:” என்று புகழ்ந்து கூறியிருக்கிறார். இந்த வட்டத்தில் வால்மீகி இராமனை ‘க்ரியாதக்ஷ:’ தக்ஷிண: என்று அதாவது காரிய சாதனத்தில் மிகுந்த சமர்த்தன், (பிறரை எதிர் பாராமலே கார்யஞ்செய்ய வல்லவன்) வருணனை இரக்கிறான் என்று நோவுபடுகிறார். மஹாபாஹு: என்று பாகுவைப் புகழ்ந்து பேசியதால் இத்தகைய புஜபல பராக்கிரமத்தை யுடையவன் தன் பலத்தாலே இவ்வருணனை வசப்படுத்தப் போகிறான். இப்போது “கோஸஹஸ்ரப்ரதாதாரம் மஹாபுஜம்” என்று அநேகமான தானஞ்செய்து சிறந்ததும், பல ஆனைத்தொழில்கள் இயற்றிப் புகழ் பெற்றதுமான மஹாபாஹுவைக் கூப்பி வணங்கி கிடப்பதைப் பார்த்து இரங்கிப் பேசுகிறார்.

இங்ஙனம் தன்திறமையில் “ஸர்வ்யாஸ்ஸஸமயே ராவூ” என்று பூர்ணநம்பிக்கை வைத்திருப்பவன் தான் கடலைக்கடக்க முடியாமற்போனால் இறந்து விடுதலே உறுதி என்று நெஞ்சினால் நினைப்பதற்குக்கிஞ்சித்தேனும் பிரஸக்தி உண்டா என்று ஆலோசித்துப்பார்க்கவும்.

ஆயின் வருணனை வழிபட இசைந்துசரண்புகுவானேனென்னில், விபீஷணபிரீதிக்காகவும் இராஜநீதி பரிபாலனத்திற்காகவுமே தவிர வேறில்லை. விபீஷணன் தான் ஸர்வத்தையும் பரித்யாகம்செய்து

இராமனைச்சரணமடைந்து தன்னை ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்து நிற்க, சுக்ரீவாதிகளின் ஆக்ஷேபங்களுக்குத் தக்கபடி சமாதானம்சொல்லி, தான் தன் பிராணபரித்தியாகம் செய்தாவது சரணாகதனை இரக்ஷிக்கும் ஸ்வபாவ முடையவன் என்றுசொல்லி இராமன் விபீஷணனை ஏற்றுக்கொண்டான். ஏற்றுக்கொண்டதும் தானே முந்துற விபீஷணனுக்கு இராவணவதஞ்செய்து இராஜ்யத்தைக்கொடுப்பதாக "ராஜாநம் த்வாம் கரிஷ்யாமி ஸத்யமேதத் ப்ரவீமி தே
அஹத்வா ராவணம் ஸங்க்யே ஸபுத்ரஜநபாந்தவம்
அயோத்யாம் ந ப்ரவேக்ஷ்யாமி த்ரிபிஸ்தைர் ப்ராத்ருபிஶ்ஶபே"
என்று வானரகோஷ்டிமுன்னிலையில் வாக்குறுதிசெய்து கொடுத்தான். வாசிகப்பிரதிஜ்ஞையோடும் நிற்கவில்லை, காயிகமாகவும் விபீஷணனுக்கு "வாநரேந்த்ராணாம் ஸந்நிதௌ" அபிஷேகமும் செய்வித்தான். இத்தகைய பிரதிஜ்ஞையையும், பிரதிஜ்ஞைக்கு ஒப்ப விபீஷண பட்டாபிஷேகத்தையும், கடலைக்கடத்தற்கும் இராவணவதத்திற்கும் முன்னதாகவேசெய்த இராமன் கடலைக்கடக்கும் விரகு தெரியாமல் "ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு" என்கிற மொழிக்கிலக்காகவா கார்யஞ்செய்தான்? இப்பிரதிஜ்ஞைசெய்யும்போது கடலைக்கடக்கும் உபாயம் நெஞ்சில் தீர்மானமாகவில்லை என்று சொல்லமுடியும்? இப்போது என்ன தீர்மானமோ அதுவே தான் "இதிராமோ மதிம் க்ருத்வா" என்ற தீர்மானமும். எல்லாவற்றையும் யோஜித்துத்தானே பிரதிஜ்ஞைசெய்திருப்பன். இதில்லவலேசமும் சந்தேகமில்லையல்லவா? இவ்வாறிருக்கும்போது கடலைக்கடக்கமுடியாவிடில் தற்கொலைசெய்து கொள்ளவேண்டியது என்று பிரதிஜ்ஞைசெய்தான் என்பது எவ்வாறு பொருந்தும்? விபீஷணபட்டத்திற்குப் பிறகு சுக்ரீவனும் அனுமானும் விபீஷணனைப்பார்த்து "சரி இவ்வளவும் செய்து விட்டோம் அனைத்து வானரசைந்யத்துடன் கடலை எவ்வாறு கடப்பது" என்று வினவ, விபீஷணன் தன்சரணாகதி அப்போதேபலித்து ருசிகண்டவனாகையாலே ராமபலத்தையும் ராமநினைவையும் நெஞ்சில் நினைத்துப்பாராமல், வருணன் தேவனாகையால் இராமனால் வழிபடற்குரியன் "ஸகரேணாத்மவேதோ ராஜா ஸாகரம் கர்த்துமர்ஹதி" என்று இராமன் வருணனை வழிபடுதல் தகும், ஸாகரமும் இராமனது முன்னோர்களால் பெருக்கடைந்தது, இப்போது இராமனுக்குப் பிரதியுபகாரம் செய்யத்

தகும் என்றும் விடைபகர்ந்தான். இதைக்கேட்டு சுக்ரீவன் இராமனிடம் வந்து சொல்லலும் இங்கு ரிஷி “ப்ரக்ருத்யா தர்மஶீலஸ்ய ராகவஸ்யாப்யரோசத” இயல்பாகவே தர்மாத்மாவாகிய இராமனுக்கும் சம்மதமாயிருந்தது என்கிறார். வருணன் தேவனுகையாலே பூஜ்யன், இராமனும் “க்ருதஜ்ஞாநம் ஶாந்ருஷம்ஸேந” என்றிருப்பவனுகையாலும் ஒருவனைப் பிரார்த்தித்து அவன் மனமிசையச் செய்தலே ஸாமோபாயங்களில் சிறந்தது என்று தெளிந்தவனுகையாலும் தனக்கு மனமொப்பிற்று. ஆயினும் ரிஷி அடுத்த சுலோகத்தில் “ஸத்க்ரியார்த்தம் க்ரியாதக்ஷ: ஸ்மிதபூர்வமுவாச ஹ” என்கிறார். அதாவது, பிறரை எதிர்பாராமலே கார்யங் கொள்ளவல்ல இராமன் விபீஷண யுக்தியை ஸத்கரிக்கைக்காகவே ஏற்றுக்கொண்டான் என்றும், புன்சிரிப்புடன் உரை பகர்ந்தான் என்றும் சொல்லுகிறார் ரிஷி. இங்கு புன்சிரிப்புக்குக்காரணம் எதுவாயிருக்கலாம். “இந்த விபீஷணன் என் ஆற்றலை அறியான், வருணனை வழிபட்டால் தவிரக் கடத்தல் செய்ய முடியாது என்று எண்ணுகிறன். இந்த வருணனுடைய ஸ்பாவத்தையும் இவனறியான். தன்மை நல்லதாயிருப்பினும் வருணன் தன்னுடையதான ஜலத்தின் ஆழத்தை மாற்றிக்கொள்ளவும், ஜலத்தை ஸ்தம்பித்துக் கொள்ளவும் வல்லவனல்லன். இவனைச்சரணடைந்து யாதும் பயனில்லை. நம் திறமையால்நாம் சேதுபந்தனம் செய்து கடக்கவேண்டியிருக்கும். இவையெல்லாம் இவ்விபீஷணன் அறியான். ஆயினும் நாம் இன்னபடி ஆகும் என்று முன்னமே தெரிவித்தால் இவர்கள் நம்பமாட்டார்கள். மேலும் விபீஷணன் ருஜுவானதும் எளிதானதுமான மார்க்கத்தைத் தெரிவித்தும்கூட இராமன் அந்த உபாயத்தைக் கைக்கொள்ளாமல் விட்டுவிட்டான் என்று இவ்வானர வீரர்களும் உலகமும் பழிக்கும், நமக்கு என் அப்பழி, அவன் சொல்லுகிற உபாயமும் இழிவானதல்லவே, உண்மையில், இராஜநீதிமுறையில், ஓர் அரசன் தன் பகையரசன்மீது படையெடுக்கும்போது நடுவில் ஓர் இராஜ்யத்தைக்கடந்து செல்லவேண்டி நேர்ந்தபோது, அந்நாட்டின் தலைவனின் அனுமதியின்றி அவன் பிரதேசத்தைப்படையுடன் கடத்தல் நீதிமுறையன்றுதலால் முதலில் சாமோபாயமாக அத்தலைவனிடம் தன் படைக்குச்சிறிது வழிவிட்டு உதவவேண்டும் என்று தூது

போக்கி வேண்டி நிற்பான். இசையாவிடில் பலாத்காரமாக உள் புகுந்து இடைச்சுவராயிருக்கும் அவன் அரண்களை அழித்துக் கடத்தல் செய்வான். அவ்வாறே, விபீஷணன் உரைத்ததும் இராஜ நீதியில் முதலில் செய்யவேண்டிய ஸாமோபாயந்தானே? இதை நாம் செய்து பார்ப்போமே, இதில் என்ன தவறு? இவர்களுக்கு இவ்வுபாயத்தின் பயனும் நன்கு தெரியட்டுமே! அல்லது, சரணாகதி செய்வதற்கு அநதிகாரியான ஒருவன் ரக்ஷிக்கைக்கு அநதிகாரியான ஒருவனிடம் சரணடைந்தால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது என்கிற விஷயத்தை லோகத்திற்கு அனுஷ்டித்துக் காட்டுவதற்கு ஒரு சந்தர்ப்ப மகப்பட்டதைப்பற்றிச் சந்தோஷமடைந்து அதனால் குறுநகைசெய்து சொன்னான் என்றும் சொல்லலாம். இன்னமும் "ஆத்மாநம் மாநுஷம் மன்யே" என்றிருப்பவனாதலால், மனுஷ்ய பாவனைக்கிணங்க யார் என்ன சொன்னாலும், என்ன செய்யவேண்டு மானாலும் செய்துதானே தீரவேண்டும் என்று எண்ணி, அவ்வெண் ணத்தால் புன்சிரிப்புக்கொண்டு சொன்னான் என்றும் சொல்ல லாம். ஆயினும் "லக்ஷ்மணனும் சுக்ரீவனும் என்ன சொல்கிறார்கள் பார்ப்போம்"என்று அவர்களிடத்தில் "உங்கள் அபிப்பிராயமென்ன" வென்று வினவுகிறான். அவர்களும் விபீஷணன் யுக்தியே இந்தச் சமயம் நிறைவேற்றத்தக்கது என்று பகர, இராமனும் வருணோபா சனைக்கு இசைகிறான். இங்கு ரிஷி இராமன் வேதிகையில் அக்னி போலே தர்ப்பாசனத்தில் அமர்ந்தான் என்று வார்த்தை யிடு கிறார். அதாவது இராமன் இப்பொழுது அடங்கியிருக்கிறான் இனி ஜ்வலிப்பான் என்று கருத்து.

இராமன் வருணோபாஸனை ஆரம்பிக்குமுன் தன் மனதிற்குள் ஒருவித உறுதியான ஆலோசனையைச் செய்துகொண்டான். எந்த விதமான ஆலோசனை என்று ரிஷி நமக்குச் சொல்லுகிறாரே யொ ழிய, இராமன் கடலைப்பார்த்து விளித்து ஒரு பிரதிஜ்ஞையையும் சத்யமிட்டு வானரகோஷ்டியில் சொல்லவில்லை. ஆகையால் இராமன் தன் மனதிற்குள் செய்துகொண்ட உறுதியைப் பிரதிஜ்ஞை என்று சொல்வதற்கில்லை. பிரதிஜ்ஞையின் லக்ஷணம் ஒரு சிறிதாயினும் இருக்கிறதா என்று ஆலோசித்துப் பார்க்கவேண்டும். சற்று முன் விபீஷணவிஷயத்தில் "ஸத்யம் ப்ரவீமிதே" என்றும் "அயோத்யாம் நப்ரவேக்ஷ்யாமி" "இதிசபே" என்றும் சொன்னதுபோல் சொல்லு

கிறான்? இல்லையே. அப்படியிருக்க இதை பிரதிஜ்ஞையென்று வைத்துக்கொண்டு பலபல விரஸவாதங்கள் புரிவதில் யாது பயன்?

ஆயின் இராமன் என்ன யோஜனைசெய்து கொண்டான்? கடக்க முடியாவிடில் தன்னை முடித்துக்கொள்வதா அல்லது கடலை முடிப்பதா என்ற பிரச்னையே இத்தனை விவாதத்திற்குங் காரணம்.

வருணோபாஸனை வட்டத்தின் ஸந்தர்ப்ப நெருக்கடியின் முக்கியாம்சங்கள் என்னவென்று கவனித்தால் இராமன் என்ன யோஜனை செய்திருக்கக்கூடும் என்று நன்கு விளங்கும். அவையாவன "ஏற்கனவே கால விளம்பமாய்விட்டது" ஸமுத்ரஸ்ய தரணே புத்திரஸ்மாகம் நியுஜ்யதாம்" என்று இராமன் சொல்லிக்கொண்டு உபாசனைக்கு அமர்கிறான். சீதையோ ஒரு மாதத்திற்கு மேல் ஜீவித்திருக்கமுடியாது என்று அனுமானிடம் சொல்லியிருக்கிறாள். அதன்பிறகு அனுமான் ராக்ஷஸவதம், லங்காதகனம் முதலிய கிருத்தியங்களைச் செய்து இக்கரை சேர்ந்து தன் சகாக்களோடு கிஷ்கிந்தைக்குப் புறப்பட்டு வந்திருக்கிறான். பிறகு கிஷ்கிந்தையில் சுக்ரீவன் சேனையைத்திரட்டி அணிவகுத்துத் தெற்குசமுத்திரக்கரையை அடையச்சில நாட்களாயிருக்கின்றன. அதன் பிறகு விபீஷண சரணாகதி, ஆதலின் எற்கனவே காளவிளம்பம் செய்தாய் விட்டது. இனிச்சிறிதும் தாமதிக்க அவகாசமில்லை. ஸத்ய இப்போதே, இந்தக் கணத்திலேயே, எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமோ, அவ்வளவு சிக்கிரத்திலேயே கடலைக் கடக்கவேண்டும். ஏன்? இதற்குமுன் இராவணவதம் செய்து சீதையை மீட்கவேண்டும் என்ற ஆசைமாத்திரம் இருந்தது. இப்போது மற்றுமொரு மஹத்தான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறான். அதாவது, பலர் முன் இராவணவதம்செய்து விபீஷனுக்கு இலங்கா ராஜ்யத்தைக் கொடுப்பதாக ஆணையிட்டு அபிஷேகம் செய்வித்து மிருக்கிறான். சீதையை வேண்டுமானால் இராமன் இழப்பான், தான் பண்ணின பிரதிஜ்ஞையைத் தவறமாட்டானல்லவா? "அபி: ப்ராணாநுவபி த்வாம் ஸீதே ஸலக்ஷ்மணாம் நப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய" என்ற கொள்கையையுடையவனுக்குசீதையை அடையமுடியாத அவமானத்திற் காட்டிலும் விபீஷணன்பால் செய்த பிரதிஜ்ஞை நிறைவேறாமற் போவது மிகவும் அதிக அவமானம். வானரமுதலிகள் சொல்லுகிறபடி கடலைக்கடந்து விட்டால் இராவணவதம் நிச்சயம். எப்பாடுபட்டாயினும் எந்த

உபாயத்தாலாவது கடலைக்கடந்து தீரவேண்டும். அதற்கேற்ற யோஜனையே இராமன் இப்போது செய்யவேண்டும். இராமனுக் குத்தன் திறமையில் பூர்ணநம்பிக்கை உண்டு. கடக்க முடியா விடில் தான் தற்கொலை செய்துக்கொள்வது என்பது பற்றிய யோஜனைக்கே அவகாச லேசம்சிறிதும் இல்லை.

இங்கு இராமன் மனநிகழ்ச்சி எவ்வாறு இருந்தது என்பதை அவன் யோஜனை நிகழ்ந்தபடியே நம்மனக்கண்முன் சித்தரிப்போம். "நான் இப்போது சிறிதும் காலதாமதமின்றிக் கடலைக்கடத்தல் அவசியமாய்விட்டது. அதற்கு இரண்டு உபாயங்களே உள்ளன. இராஜநீதி முறையில் ஸாம, தான, பேத, தண்டம் என்று சதுர்வித உபாயங்கள் உள்ளன. இவற்றில் முதலாவதான சாமோபாயமாகிய சரணவரணத்தை அனுஷ்டிக்கும்படி என் சகாக்கள் கூறியுள்ளார்கள். அதுவும் யுக்தமென்று அதை இப்போது கைக்கொண்டேன். இதோ உபாஸனை செய்யப்போகிறேன். இதனுல் வருணன் பிரசன்னமாகி தரணத்துக்கு அனுகூலம் செய்வான். அவனுக்கு வேண்டிய உபகாரத்தைச்செய்து அவனுடைய உதவியைப் பெறுவேன். அவன் இணங்காவிடில் அவனை இராவண கோஷ்டியில் சேர்த்து சத்துருவாகப்பாவித்துத் தண்டித்துக் கார்யங் கொள்ளவேண்டும். அவன் முகங்காட்டாமல் ஒளிந்து கொள்வானுயின் அவன் கிடக்கட்டும் அவனுக்குச் சொந்தமான இந்த ஜலப்பிரதேசமே நமக்கும் லங்கைக்கும் இடைச்சுவராயுள்ளது. இதை யழித்துவிட்டால், அதாவது, இதை வற்றடித்து ஜலப்பிரதேசத்தை நிலப்பிரதேசமாக்கிக்கடப்போம். அவ்வாறு செய்வதற்குத் தண்டோபாயத்தைக் கைக்கொள்ளவேண்டும். நடுவில் உள்ள, தான, பேத உபாயங்களை அனுஷ்டித்துப்பார்க்க வருணன் எதிரில் தோன்ருவிட்டால் என் செய்வது? எவரிடம் இவற்றைச்செய்துபார்ப்பது? இதற்கு அவகாசம் சிறிதும் இல்லை. ஆதலின் தண்டோபாயமாகிய ஸாகர மரணத்தையே செய்யவேண்டி நேரும். என்ன செய்வது? வேறு மார்க்கமில்லையல்லவா? செய்துதானே தீரவேண்டும். இல்லாவிடில் இவ்வானர சைன்யத்தை எவ்வாறு கடக்கச்செய்வது? ஆனுல் ஒருவேளை வருணன் பிரத்தியக்ஷமாகி சிற்றங்கொண்டு யுத்தங்கொடுத்தால் பெரிய யுத்தம்நேரும். யுத்தத்தில் கடலரசன் நிச்சயமாக முடிந்து விடுவான். ஒருவேளை தெய்வகதியால் எனக்கு அபஜெயம் உண்டாவதாயின் நான் மரணமடைய நேரிட்டாலும் தரண கார்யத்திலிருந்து

பின்வாங்கக்கூடாது. அதாவது, பிராணபர்யந்தம் பார்த்தாவது கடலைக்கடப்பதே இப்போது செய்யவேண்டிய கார்யம்" (இந்த அர்த்தம் ஈட்டில் உள்ளசுலோகத்தின்படி செய்யப்படுகிறது) என்றே உறுதிகொண்டானேயொழிய, கடலைக்கடக்க முடியாவிடின் அபஜயத்துடன் திரும்பி சீதையை அடையமுடியாமல் இந்த சரீரத்தை வைத்துக்கொண்டு வாழ்வதில் என்னபயன் என்று விஷபானத்தாலோ, ஆயுதப்ரயோகத்தாலோ, தற்கொலை செய்துக் கொண்டு சாகமாட்டான். இராமன் சுத்தவீரனுகையால் யுத்தத்தில் சத்துருவின்கையால் மடிவானே தவிர தற்கொலைசெய்து கொள்ள மாட்டான்.

ஸ்ரீராமாயண அச்சுப்புஸ்தகங்களில் உள்ளபடி अद्य मे मरणं वाथ तरणं सागरस्य वा என்பதற்கு अद्य मे सागरस्य तरणं वा । स्वयं वा सागरस्य मारणं वा कर्तव्यम् எனக்கு, ஸாகரவிஷயமான தரணமாவது அல்லது ஸாகர விஷயமான மாரணமாவது செய்துதீரவேண்டும். அதாவது எனக்கு இப்போது இந்தச்சரணோபாயத்தால் தரணம்நேரவேண்டும், இல்லையேல் ஸாகரமாரணோபாயத்தால் தரணம் நேரவேண்டும் என்கிற மட்டிலேதான் அர்த்தம் சந்தர்ப்பத்திற்குப் பொருந்தும். சுலோகத்தில் அந்வயம் செய்யாமல் ஆனுபூர்வியை மாற்றுமல் பொருள் கொண்டால் "இப்போது எனக்கு மரணம் உண்டாகட்டும், அங்ஙனம் மரணம் நேராவிடில் தரணமாவது உண்டாகட்டும்" என்று ஆகும். அதாவது இராமன் ஸ்வமரணத்தை முதலில் ஸங்கல்பித்துக்கொண்டான் என்று ஆபாஸமான பொருள் தேறும். ஆகையால் தரணபதத்தை மே என்றபதத்தோடு அந்வயித்து மரணபதத்தை ஸாகரஸ்ய என்றபதத்தோடு அந்வயித்துக்கோவிந்தராஜர் வியாக்யானித்திருக்கிறர். ஆகவே தத்வபிரதிஷ்டையில் உள்ளபடி "சாமோபாயத்தாலாவது தண்டோபாயத்தாலாவது தரணம் நேராவிடில் நான் என்னை மரணமாக்கிக்கொள்வேன்" என்று இராமன் யோஜனைசெய்வதற்குப் பிரஸக்தியேயில்லை? கடக்கமுடியாவிட்டால் பிழைத்திருப்பதிலும் சாதலே மேல் என்பது சித்தம். அந்தயோஜனைக்கு இப்போது என்ன அவசரம்?

இது எவ்வாறு இருக்கிறது எனில்:— ஒரு இளைஞனுக்கு ருதுசாந்தி முகூர்த்தம் வைத்து மணமண்டபத்தில் பந்து மித்திர

கீள் சூழ, மங்களவாத்தியம் முழங்க, மணையில் தர்ம பத்னிசகிதம் அம்மணமகன் உட்கார்ந்திருக்க, பிருகஸ்பதி கர்ப்பாதான முகூர்த்தத்திற்காக அம்மணமகன் கையில் பவித்திரத்தைக்கொடுத்து ப்ராணாயாமம் செய்யச்சொல்லி "சுக்லாம்பரதரம் விஷ்ணும்" என்று சொல்ல ஆரம்பிக்குமுன், அம்மணமகன் இவ்வாறு சிந்திக்கலானான். "இப்போது கர்ப்பாதானம் செய்கிறேன். இது நல்ல வேளையாயிருந்து கர்ப்பந்தரித்து விட்டால் பிரசவம் வருமே, சுகப்பிரசவமாய் தாயும் குழந்தையுமாய் க்ஷேமமாயிருந்தால் வெகு நல்லது, இன்றி இந்த என்னுடைய பத்னி இறப்பளேல் நான் மாத்திரம் உயிர் வாழ்ந்திருந்து என்ன பயன், உயிர் விடுவதே மேல் என்று நினைத்து விம்மி! விம்மி!! அழுதான். சபையில் உள்ள அனைவரும் 'ஏனப்பா அழுகிறாய்' என்று கேட்டார்கள். அம்மணமகன் தான் நினைத்துக்கொண்டதையெல்லாம் சொல்லி விம்மி அழுதான். இதைக்கேட்டு எல்லாரும் சிரித்திருப்பார்களா! அழுதிருப்பார்களா !! யோசித்துப்பார்க்கவும்.

மற்றுமோர் கதையும் உண்டு, அதாவது, தென்கலை வைஷ்ணவ குடும்பத்துப்பெண்ணை வடகலை வைஷ்ணவ குடும்பத்துப்பிள்ளைக்கு மணம் செய்வித்தார்கள். மணமண்டபத்தில் பெண்ணின் தாயாருக்குத் தன் பெண் ஒருவேளை விதவையாக நேரிட்டால் தலையை முண்டனம் செய்துகொள்ள வேண்டிவருமே என்று விம்மி அழுதாள். விஷயந்தெரிந்துகொண்டு அனைவரும் வயிறு குலுங்கச்சிரித்து அவளைத்திட்டித் துரத்திவிட்டார்கள். இது போல இராமன் சத்துருஜெயத்துக்காக வெகு உற்சாகத்துடன் வானரசைந்யங்களோடு தண்டுவிட்டிறங்கி யிருக்கையில் தற்கொலையைச்சங்கல்பித்துக்கொண்டு அழுதான் என்பதைக்காட்டிலும் அசட்டுத்தனம் வேறுண்டா ? மற்றும், இராமனுக்கு இராவண வதத்திற்கும் சிதாமீட்சிக்கும் ஸாமரதரணம் பலித்தேயாகவேண்டும் என்பதில்லை. பலிக்காவிட்டால் உயிர் விடவேண்டியதுமில்லை. எத்தனையோ உபாயங்கள் உள. ஒன்றன்பின் ஒன்றாகச்செய்து பார்க்கலாம். ஸவல்யாவஸாவஸஉயெல்ாவஹூ என்றது வீண் வாய் வீரமோ ? கடலை வற்றடிக்க முடியா விட்டால், இராமனும் லக்ஷ்மணனும் சமுத்திரத்தைத் தாண்டக்கூடிய வானரபதிகளோடு அவர்கள் தோள்மீது ஏறிச்சென்று இலங்கையை அடைந்து இராவணவதம்செய்து சிதையைமீட்கலாம், விபீஷண விஷய

பிரதிஜ்ஞையையும் நிறைவேற்றலாம், அல்லது சீதைக்குத் தான் படையெடுத்து வருவதாகச்செய்தி சொல்லி யனுப்பி மரக்கலங்கள் தயார்செய்து கடல் கடக்கலாம், அல்லது இக்கரையிலிருந்தே அஸ்திரங்களை ஏவி இராக்ஷஸவதம்செய்து சீதையை மீட்கலாம். இம்மாதிரி உபாயங்கள் பலபல இராமனுக்குத்தெரியுமே, செய்யவும் ஆற்றல் உண்டே, தனக்கு தன்திறமையில் பூர்ண நம்பிக்கையும் உண்டே, பிறகு கடலை வற்றடிக்கவும் தலைப்பட்டான். விஷயப்போக்கு இவ்வாறு இருக்க இராமன் தன் உயிரை மாய்த்துக்கொள்வதாக யோஜிப்பானேன்? இதுகாபுருஷச்செய்கை யல்லவோ? சுத்த வீரனுக்கு அழகோ தற்கொலைசெய்துக்கொள்வது? வீரம் பேசிப்பிரதிஜ்ஞைசெய்து விபீஷணபட்டமும் செய்வித்தது முன்யோஜனை யில்லாத கார்யமா? கார்யம் நெருங்கும்போது மலைத்துப்போய் முடியாவிட்டால் உயிரைவிட்டாற்போகிறது என்று யோஜிக்ககூடிய அவ்வளவு அறிவு கேடனா இராமன்? மஹாவீரனல்லவா? வீர்யமாவது என்ன? விகாரஹேதுஷுஸத்ஸ்வபி ஸ்வயம் அவிகார காரிதவம் என்றல்லவோ வ்யுத்பத்தி. தற்போது ஸ்வமரண யோஜனை தன் வீர்யக்குலைவை யன்றோ காட்டும். இது மஹாவீர லக்ஷணமோ? மேலும் சுலோகத்தில் மேலெழுந்தவாருகப்பொருள் கொண்டால் இராமமரணத்தில் அந்வயிக்கும். இது தீரோதாத்த நாயகனாகிய இராமனது இயல்புக்கும், ஆற்றலுக்கும், சந்தர்ப்பத்திற்கும், கதையின் பின் நிகழ்ச்சிக்கும் சிறிதும் ஒவ்வாது. இது பற்றியே கோவிந்தராஜர் தரணபதத்தை மே என்பதோடும் மரணபதத்தை ஸாகரஸ்ய என்பதோடும் அந்வயித்துக் காட்டினர். அங்ஙனம் அந்வயம் செய்யாமல் பொருள் சொல்வதற்கு பாலபாடம் படிக்கும் பிள்ளைகள் போதுமே. மஹாபண்டிதர்கள் வேண்டாவே.

மற்றும் இராமனுக்கு ஸாகரசோஷணத்திலும் ஸம்கல்பமும் கிடையாது. தன் விருப்பப்படி சைந்யம் முழுதும் கடத்தல்செய்ய வேறு வழி இல்லையாகையால் அந்த உபாயத்தில் ஒருப்படுகிறான். கதையின்பின் நிகழ்ச்சியிலும் தெரியும்.

அதாவது:—இராமன் இவ்வாறு சரணோபாயத்தால் கடக்க முடியாவிடில் கடலை வற்றடித்துக்கடத்தலே சரி என்று மனோதிடம் செய்துகொண்டு பிறகு திரிகரண சுத்தியோடு விதிநியமத்துடன்

உபவேசனம் செய்து மௌனயோக நிலையில் நின்று வருணஜபம் செய்தான். ஜபத்தினிடையிலாவது, ஆரம்பத்திலாவது, பிராணயாமம் செய்து சங்கல்பம் செய்யும் போதாவது வருணன் சகாயஞ் செய்யாவிடில் கடலை வற்றடித்து விடுவதாக சங்கல்பம் செய்துக் கொண்டான் என்று ரிஷி சொல்லவில்லையே? க்ருஶ்வா என்று ஶ்வா என்பதால் அபிசயன ப்ராக்காலிகத்வத்தை அதாவது அபிஶயநம் பண்ணுவதற்கு முன்னால் நிகழ்ந்த மனநிகழ்ச்சியைக் காட்டுகிறது. சுத்தமனதோடு தானே பண்ணினதாகச்சொல்லுகிறார். மூன்று நாட்கள் நிலைகலையாமல் இருந்து ஜபம்செய்தான். இங்கு ரிஷி த்ரிராத்ரோஷிதஸ்தத்ர நயஜ்ஞோ தர்மவத்ஸல: என்கிறார். நயந்தெரிந்தவனும் தர்மத்தில் பிரீதி மிகுந்தவனுமாகையால் இராமன் மூன்று நாட்கள் வரை பொறுத்திருந்தான். "ஏன்? தண்ணீரும் முப்பிழை பொறுக்கும்" என்ற பழமொழியறிந்தவனல்லவா? வருணனோ ஸரிதாம்பதியாகையால் அந்தப்புரத்தில் தன் ஸ்த்ரீகளோடு கேளிவிலாசங்களிலே சுக்ரீவன்போல் மயங்கியிருந்தான்போலும் (இராமன் சரணமடைந்த விடமெல்லாம் இவ்வாறேயாயிற்று).

விதிவத்தாகப் பூஜிக்கப்பட்டபோதிலும் வருணன் உருக் காட்டவில்லை யாதலால் இராமன் பொறுமை இழந்து கோபத்தால் சிறிச்சிவந்து அம்பும் வில்லும் கொணரச்சொல்லி, முதலில் சாமான்ய பாணங்களையே விடுகிறான். ஏன்? அப்பொழுதாவது வருணன் பிரசன்னமாகட்டும். அவன் அனுகூலன் அல்லது பிரதிகூலன் என்று தெரியட்டும். பிறகு வற்றடிக்கலாம் என்று நினைத்தான். தர்மவத்ஸலனன்றோ? சாதாரணபாணங்களை மதிப்பவனோ வருணன்? திக்பாலகனான தேவனல்லனோ? இனியும் இராமன் பொறுக்க முடியுமா? மூடர்களும் துஷ்டர்களும் சரணத்துக்கும் சத்யத்திற்கும் கட்டுப்படுவார்களா?

"இரணங்கொடுத்தால் இடுவர் இடாரே
சரணங்கொடுத்தாலும் தாம்"

என்றபடி இரணங்கொடுத்துப் பெறப்படுவது சரணங்கொடுத்தால் கிடைக்குமோ? ஆகையால் பிரம்மாஸ்திரப் பிரயோகம் செய்ய வேண்டியதாயிற்று. கடலும் உலகமும் கொதிப்பெடுத்த உடன் தான் வருணன் தன் பிழையை உணர்ந்தான். "ஹா ஹா" என்ன

செய்து விட்டேன். மோசம் போனேன் என்று சுக்ரீவனைப்போல் தன் தர்மபத்னிகள் சகிதம் சிருங்காராலங்காரம் சிறிதும் கலையாமல் இராமனிடம் பிரத்யக்ஷமாகி அஞ்சலிசெய்து நிற்கிறான். (இராம சரணாகதியின் பிரபாவம் இதுவன்றோ) வருணனை அஞ்சலிக்கை யனுய்க்கண்டால் இராமன் மனம் இளகாமல் இருக்குமா ? வருணனைப்போலவா இராமனும் ? சரணாகதவத்ஸலனல்லனோ ? வருணன் தன்னால் ஸேதுவைக்கலையாமல் தாங்கிக்கொண்டிருப்பது தவிர வேறு சகாயம் செய்ய முடியாது என்று சொன்னபோதிலும் இராமன் எடுத்த பிரம்மாஸ்திரத்தை அவன் சத்துருக்கள்மீது ஏவி அவனுக்குப்பேருதவி செய்தான். இதுவன்றோ கதையின் போக்கு. சாகரசோஷணமாவது நடந்ததா? இதனால் இராமனுக்குச் சாகரசோஷணமும் ஸங்கல்பமில்லையென்று தேறுகிறதல்லவா ? இராமன் அதை இன்றியமையாத ஓர் உபாயமாகக்கைக்கொண்டானே ஒழிய கார்யங் கை கூடாமற்போனாலும் வருணன் தன் காலில் விழுந்ததும் அவ்வுபாயத்தைத் துறந்து விட்டானல்லவா ? ஆதலின் தாரணத்துக்கும் மாரணத்துக்கும் விகல்பம் என்கிற இராம மரணவாதிகள் வாதம் அஸங்கதமன்றோ ?

இராமமரணவாதிகள் வால்மீகியின் சுலோகம் இப்படியிருந்தால் நன்றாயிருக்கும், அப்படியிருந்தால் நன்றாயிருக்கும் என்று தத்வபிரதிஷ்டையில் பலபடியாக மாற்றிக்காட்டப் பட்டிருப்பவையெல்லாம் ரஸ சுஷ்கங்களே யாகும். உண்மையில் சுலோகத்தின் ஆநுபூர்வி ஸுக்ரீவே தாரணம் வாய மரணம் ஸாகரஸ்ய வா என்று இருக்கவேண்டும். வால்மீகி இவ்வாறே இயற்றியிருப்பர் என்று தைரியமாகச்சொல்லலாம். ஆனால் எவ்வாறோ, எக்காலத்திலோ தாரணபதம் பின்னும் மரணபதம் முன்னும் மாறிவிழுந்துவிட்டன. வியாக்யாதாக்களும் அதைத்திரும்பவும் மாற்றத்துணியாமல் அந்வயக்ரமத்தால் அர்த்தஞ் செய்துக்கொண்டுபோந்தார்கள்.

இதுநிற்க, நம்பிள்ளை ஈட்டில் சுலோகம் உள்ளபடி, ஸுக்ரீவே மரணம் வாபி தாரணம் ஸாகரஸ்ய வா என்பதற்குப்பொருள் கொண்டாலும், தத்வப்ரதிஷ்டையில் உள்ளபடி தண்டோபாயத்தாலும் கடக்கமுடியாமற்போனால் தன்னை மரணமாக்கிக்கொள்வதேசரி என்ற அநந்தரபாவியான மரணமும் அர்த்தமாகாதே.

எங்ஙனேயென்னில் இப்போது எனக்கு மரணம் நேரிடினும் கடற் கடத்தல் கைவிட முடியாத கார்யமாகிவிட்டது என்றே பொருளாகும். அதாவது, இராமன் மனதில் நிகழ்ந்தது என்னவெனில், “நான் இப்போது சரணோபாயத்தி லிறங்கியிருக்கிறேன். வருணன் பிரசன்னமாகாவிடில் தண்டோபாயங்கைக்கொள்வேன். ஒருவேளை வருணன் யுத்தம் கொடுத்தால், யுத்தத்தில் வருணன் நிச்சயமாக மடிவான், கடலும் வற்றடிக்கப்படும், ஆயினும் வெற்றியும் தோல்வியும் ஒருவர் பங்கோ ? தெய்வசங்கல்பம் எவ்வாறுருகுமோ ?” என்று மனுஷ்யபாவனைக்கேற்ப சங்கையை மேற்கொண்டு பரிஹரிக்கிறுன். “ஒருவேளை யுத்தத்தில் வருணன் கையால் எனக்கு மரணம் நேரிடுவதாயிருப்பினும் நான் இப்போது இறங்கியிருக்கும் தரணகார்யத்தைக் கை விடுவேனே ? கை விடுவேனுயின் இவ்வானரர்களும் உலகமும் ஏசார்களா ? ஆதலின் மரணபர்யந்தமாவது தரணகார்யத்தைச்செய்து பார்க்கவேண்டும்” என்று தன் மனதில் பிரஞ்ஞா தார்ட்யம்செய்துகொண்டு வருணோபாஸநத்தில் இழிந்தான்.

அபி ஸ்வீக்ருதேந தச்சரணோபாயேந ஸாகரம் தரேயம், நோசேத் ஸ்வோபாயப்ரயோகேண ஸாகரம் ஶோஷயேயம், தத்ர ஶரணாகத்யப்ரயோஜகத்வே வருணேந ஸஹ யுத்தம் ஸம்பவிஷ்யதி, வருணமரணம் ஸாகரஶோஷணம் ச ஸந்நிஶ்சிதமேவ ஸம்பவிஷ்யதி, அபி து தைவவஶாத் ஸ்வஜயப்ராப்தௌ பராஜயே வருணேநைவ மம மரணம் ஸம்பவிஷ்யதி ஶரீரத்யாகேநாபி ஶரணகார்யம் நிர்வஹணீயம், ஶரணகார்யாபரித்யாகே மரணஸம்பாவநயாபி கிம் வ்ருதா வ்ரதபங்கம் என்று தானே தேறும். இதில் அபி ஶப்த ப்ரயோகத்தால், எனக்கு மரணம் ஒருக்காலும் நேராது, நேர்வதாயினும் எடுத்த கார்யத்தைக் கைவிடமாட்டேன் என்று மானஸ ப்ரஞ்ஞாதார்ட்யத்தையே தேற்று விக்குமே யொழிய கடக்கமுடியாவிட்டால் அநந்தரஹாவியான ஸ்வமாரணத்தைக் கிஞ்சித்தாகிலும் தெரியப்படுத்துமா ? இங்கு அபி ஸ்வப்ராணாநுபரித்யஜ்ய என்றவிடத்தில் என்ன அர்த்தமோ அதே அர்த்தந்தான். இதில் குறையில்லையே ? இராமமரணவாதிகள் அர்த்தப்படி, இராமன் கடலைக் கடக்க முடியாமல் வெட்கப்பட்டுப்போய், வானரகோஷ்டியை

விட்டு விலகி, தனியாக ஓரிடத்தில் இருந்துகொண்டு பத்னி வியோகத்தை நினைந்து தன் விதியைநொந்துகொண்டு இனி வாழ்வதில் பயனில்லை என்று ஈட்டியால் குத்திக்கொண்டோ அல்லது விஷபானத்தால் மாண்டோ போவான் என்பது தானே? இந்த இடத்தில் ஜராவணம் ஜராஜவா என்றும் திருஷ்டாந்தம் காட்டுகிறார்களே. இதற்கும் "இராவணனைக்கொல்வேன், முடியாவிட்டால் அவமானப்பட்டு வாழ்வதைக்காட்டிலும் உயிர் விடுதலேமேல் என்று தற்கொலை செய்துகொள்வேன்" என்று தானே தேறும். இராமன் பேடியோ? சத்துருவைக்கொல்ல முடியாவிட்டால் அதே சத்துருவின் கையால் மாள்வானேயொழிய இரணக்களத்தை விட்டு ஓடிவந்து தற்கொலைசெய்து கொள்வானோ? இதில் என் வீண் பிரமம்?

இன்னமும், பத்னிவியோகம் பொறுக்காமல் இராமன் மாள்வதாகவன்றோ சொல்லுகிறார்கள். இராமன் மஹாலக்ஷ்மிபோன்ற ஓர் உத்தமியை பத்தினியாக அடைந்ததென்னவோ வாஸ்தவம். ஆனால் அவளைப்பிரிய நேர்ந்துழி தன் உயிரை விடுவானோ? இதை லோகத்தில் கோடியில் ஒருவன் கூடச்செய்வதில்லையே? இராமன் என்ன அவ்வளவு பெண் பித்தனா? பத்னி சம்யோகத்திற்காகவே தான் பிறந்ததாக நினைத்திருந்தான்போலும்? ஶரணாகதரக்ஷணத்துக்கும் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனத்திற்கும் தர்மஸம்ஸ்தாபனத்திற்கும் பிறக்கவில்லைப்போலும். அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம் என்றும் ந ஹி ப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விஶேஷத: என்றும் சொன்னவன் தானே. மேலும் சீதையைவிட்டுப் பிரிந்து ஆயிரக்கணக்கான வருஷங்கள் அரசாட்சி செய்து வாழ்ந்தானே? அப்போது என் உயிர் துறக்கவில்லை?

நிற்க, நம்பிள்ளை ஏன் "எனக்கு மரணம் நேர்வதாயினும் தரணத்தைக் கைவிடமாட்டேன்" என்று பொருள் கூறாமல் "இத்தை முடித்தல்" என்று கூறினர் என்ற வினா எழுந்தால், அதற்குவிடை, நம்பிள்ளைக்கு இராமனுடைய ஆற்றல் நன்கு தெரியும், இராமாபிப்பிராயத்தால் அபி நேர்வதாயினும் என்றால் மரணம் நேராது என்பது சித்தமன்றோ? பின் நிகழ்ச்சிக்குப் பொருந்தஸாமர மரணம் சொல்வதே உசிதமென்று கொண்டார் என்று சொல்வதே பொருந்தும். அப்யேஷா மம ஸம்ரக்ஷணம் வாபி தரணம்ஹ

வேத் என்று அந்வயித்து அதற்கேற்பப்பொருள் கூறினர். இதைப் பற்றி விவரமாகப்பின்னால் இதிலேயே எழுதப்படுகிறது.

இன்னமும் இவர் சொல்லுகிறபடி தைந்ய ப்ரகாசக நினைவே சந்தர்ப்பத்துக்குப்பொருந்தும் என்று கொண்டால் வால்மீகி சுஃ்ருஉத்தரணாயாஸெ நஷ்டா:ஹ்ராணாஸவம்தூஜெ| ஐதெூவம் விம்தயிகவாதூ உஹாவாஹூஉ்ஹொாஉயிம் என்று சுலோகம் இயற்றியிருப்பர். அல்லது வருணன் மனதை உருக்கவேண்டுமென்று தைந்யத்தைக்காட்டவேண்டுமானால் வருணனைப்பார்த்து, "வருணதேவனே! நீ இரங்காவிட்டால் நான் பிராணனை விடவேண்டியதுதான்" என்று இராமன் சொல்லியிருப்பன். அப்போது வால்மீகி சுஃ்ருஉத்தரணாஹாவெஹ்ராணதூ்ாமொாஹவெசுஉஉ| ஐதெூவஉூ கூாராஉஹ்ஸ்தூஉஹாவாஹூ உ்ஹொாஉயிம் என்று சுலோகம் இயற்றியிருப்பர். இங்ஙனமின்றிக்கே ஜெஉரணம் என்று, எனக்கு மரணமாகாவிட்டால் ஜூரணமாகட்டும் என்று ஆபாசப்பொருள் படும்படி எழுதியிருக்கமாட்டார். இங்ஙனம் சுலோகம் அமைந்ததின் கருத்தே வேறு. இங்கு பின்செய்த சாகரசோஷண கார்யத்தின் கருத்துக்கிசையவே இச்சுலோகம் அமைந்துள்ளது. இதைப் பற்றிப்பின்னால் இதிலேயே விவரமாய்க்காண்பிக்கப்படும்.

இன்னமும், சாகரமாரணநினைவு சந்தர்ப்பத்துக்குப்பொருந்தாது என்று இவர் சொல்வதும் இவர் சொல்லுகிற அர்த்தத்துக்கே பொருந்தவில்லை. எங்ஙனேயெனில் சாமப்ரயோகமாகிய சரணம் பலியாவிடில் தண்டப்ரயோகம், தண்டப்பிரயோகமாகிய சாகரசோஷணமும் பலியாவிடில் இராமன் தான் முடிவதாகத்திருவுள்ளமேதவிர வேறில்லை என்கிறார். இந்த அர்த்தத்துக்குப் பொருந்த சுஃ்ருஉஉதரணம்ஹவெசு, சுயவாஸாமரஸ்ஃ்உரணம் (உாரணம்) ஹவெசு, சுயவாஜெஉரணம்ஹவெசு என்று தானே அந்வயம் செய்யவேண்டும். இப்போது ஸாகரத்துக்கு மரணம் சொல்லித்தானே இராமன் தன் மரணத்தைச்சொல்லுகிறான். கார்யமும் அப்படித்தானே செய்வதாக இராமன் எண்ணம் என்று சொல்லுகிறார். ஆக தைரியப்பிரகாசகநினைவுக்குப் பிறகு தானே தைந்யப்பிரகாசக நினைவு வருகிறது. சாகரசோஷண நினைவு எப்படி இல்லாமற் போயிற்று. இந்நினைவால் ஆர்ஜவஹாநியும் வந்து விட்டதே! இதற்

கென் செய்வார்? இவரது வாதமே இவர்க்கு விரோதமாய் முடிந்ததே!

ஆகவே இராமனது சாகரமாரண நினைவு இவரது மஹா மதிக்குத்தான் பொருந்தாதே யொழிய, இராமனுடைய ("இதிராமோ மதிம்க்ருத்வா" என்று வெறும்மதியாகத் தானே வால்மீகி உரைக்கின்றார்) வெறும் மதிக்கு நன்றாகவே பொருந்தும்.

விமர்சம் 2.

சரணாகதிவட்டமாகையால் தைந்யப்ரகாசகமான ஸ்வமரண நினைவே பொருந்தும் என்பது:— தைந்யப்ராகாசக நினைவு எனில் தண்டோபாயத்தை ஈஷத்தும் மனதில் நினையாமல் சரணோபாயம் பலிக்காவிடில் இறந்து படுவதாக மாத்திரம் எண்ணினால் தானே? அவ்வாறு இராமன் எண்ணுவதாக இராமமரண வாதி ஓரிடத்திலாவது சொல்லவில்லையே. ஸாகரசோஷணமும் பலியாவிடில் தான் முடிவதாக எண்ணம் என்று பலபல விடங்களில் எழுதுகிறாரே. சரி, போகட்டும், தண்டோபாயத்தைச்சேர்த்து நினைத்தாலும் தைந்யப்ரகாசகநினைவு என்றே வைத்துக்கொள்வோம். அங்ஙனமாயின் இராமன் நினைக்கும் நினைவெல்லாம் வருணன் அறிந்து விடுவானோ? அவன் ஒரு சாமாந்ய திக்பாலகன் தானே? "உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்தறியும்" மயர்வற மதிநலம்படைத்த மகாவிஷ்ணுவோ? சரி, இப்படியும் கொள்வோம். இராமன் நினைவை வருணன் அறிந்து கொள்ளவல்லனாயின் என்ன நினைப்பான். "ஹூம் இந்த இராமன் சற்று முன்வரையில் எவ்வகையாலும் கடலைக்கடந்து விடுவதாகவும், வற்றடித்து விடுவதாகவும் வாய்வீச்சு பேசிக்கொண்டிருந்தவன் தானே. இப்போது என்னவோ என்கால் பிடித்து நீ தயை புரிந்து வழி விடாயாயின் நான் இறப்பேன் என்று மன்றாடுகிறானே. இவன் கெஞ்சினால் மிஞ்சும் மிஞ்சினால் கெஞ்சும் சமயோசித வேஷதாரி" என்று தானே நினைப்பன் அவன் மனதை இது எப்படி உருக்கும்? தண்டோபாய நினைவை ஒரு சிறிதும் கொள்ளாமல் ஸ்வமரணத்தைச் சிந்தித்தாலே வருணன் இவ்விதம் தான் நினைப்பன். இன்னும் இராம

மரணவாதி சொல்லுகிறபடி தண்டோபாயமும் பலியாவிடில் இறப்பதாக நினைவு கொண்டால் "ஓகோ நம்மைக்கால் பிடிக்கும்போது கூடநம்மைக்கொல்ல நினைவு கொண்டான். அதுவும் முடியாவிட்டால் தான் முடிவதாக நிளைக்கிறான், இவன் கை வரிசையைக்காட்டட்டும் பார்ப்போம்" என்று தானே வாளாவிருப்பன். ஶைந்ய ப்ரகாசகநினைவு இவ்விதம் தானே வருணனை நினைக்கச்செய்யும். என்னவோ வருணன் மனதை உருக்கும் என்று இராமமரணவாதி ஆகாசப்பந்தல் போடுகிறாரே! இவர் தீர்க்காலோசனை செய்தால் இதுமனதிற் பட்டிருக்குமே.

விமர்சம் 3.

சரணாகதி சமயத்தில் தண்டோபாயமான சாகரமாரண நினைவு இராமனுடைய ஸௌஜந்யத்துக்குச்சிறிதும் பொருந்தாது என்பது:—இராமமரணவாதி இதை ஓர் முக்கியவாதமாகக்கொண்டு எழுது கருவி தேயும்வரைபன்னிப்பன்னி எழுதுகிறார். ஆனால் இதற்குக்குழி இவரே தோண்டிக்கொண்டு விட்டார். மண்போட்டு மூடுவது தான் பாக்கி.

எங்ஙனேயென்னில் பரிசிஷ்டத்தில் 2-வது பக்கத்தில் முதல் பாராவில் "இராமபிரான் கடலரசன்பாடே சரணாகதி செய்யும்போது திரிகரண சுத்தியுடன் செய்தாரென்று உரைக்கப்பட்டிருக்க இதற்கு மாறாக அந்தக்கரண அசுத்தியையே ஸ்பஷ்டமாகக்காட்டுகின்ற ஸாகரமாரண மநீஷை ஸௌஜந்யமே வடிவெடுத்த பெருமாளுக்கு இருந்த தென்கை ஸவ்யாஸவ்யஸம்ஹதம் / இந்த சுலோகத்தை நம்பிள்ளை உதஹரித்து வியாக்யானம் செய்தருளின விடத்திற்கும் இவ்வர்த்தம் ஸுதராம் அஸம்பத்தம். பிறர்கூறுகிறபடி அந்த ஸமயத்தில் பெருமாளுக்கு ஸாகரமாரணசிகீர்ஷை இருந்திருந்தால் அதை வால்மீகி அப்படியே தெரிவிக்க விரும்பியிராமற்போவாரா? அங்ஙனே ஸமுத்ரஶோஷணம்வா என்று வசனமிட்டுச் சுலோகம் இயற்றியிருப்பாரா?" என்று எழுதுகிறார். தத்வ பிரதிஷ்டையில் 6, 9, 14, 15-ம் பக்கங்களிலும் பார்க்கலாம். பரி

சிஷ்டத்தில் 3-வது பக்கத்தில் 28-வது வரிமுதற்கொண்டு தவ ஸாஹாய்யேந ஸேதுநா ஸாகரோச்சோஷணேந வா | ஸர்வதா ஸுக்ரீவ ஸாகரஸ்யாஸ்ய லங்கநே என்று நாம் அவலீலையாகச் சொல்லியிருக்கிறபடி ஏதேனும் ஒருவகையாலே கடலைக்கடந்துச்செல்வோமாகில் வைரியைவென்று வைதேகியைப் பெற்று க்ருதக்ருத்யராவுதோம். அன்றி நம்முடைய உத்ஸாஹத்தால் ஸாதாரணம் ஸர்வவிஷய மாகாதொழியில் பிறகு பிராட்டியைப்பற்றின நசை நமக்கிருக்க அவகாசமே யில்லாமையால் பின்னையிருந்து ஜீவிப்பதிலும் காட்டில் முடிவதே கருமம் ....ஸாகரோச்சோஷணேந வா என்று ஏற்கனவே திருவுள்ளத்தில் பட்டிருப்பதால் அந்த உபாயமும் பலியாவிடில் முடிவதாகத்திருவுள்ளமே தவிர வேறு விதமாக இல்லை. ஸ்வநிஷ்ட ஐகாந்திகமான உபாயத்தைக்கொண்டோ பரமேஶ்வர ஐகாந்திகமான உபாயத்தைக்கொண்டோ கடலைக்கடந்து விடலாமென்று பெருமாள் ஏற்கனவே திருவுள்ளம்பற்றியிருந்ததை வால்மீகி முன்னரே கூறியுள்ளார். அவ்விரண்டு உபாயமும் கைகூடாவிடில் முடிவதே நலம் என்று கருதினதே இங்குள்ளது" என்கிறார். இவர் முதலில் இராமன் சரணாகதிசெய்யும்போது சாகரமாரண நினைவு கொள்ளவே மாட்டான் என்று அடித்துப்பேசுகிறார். "சாகரமாரண சிகீர்ஷை இருந்திருந்தால் வால்மீகி அப்படியே தெரிவிக்க விரும்பியிராமற்போவாரா" என்று வால்மீகி ரிஷியையும் சாட்சி வைக்கிறார். அடுத்தபக்கத்தில் "ஸாகரோச்சோஷணேந வா என்று ஏற்கனவே திருவுள்ளத்தில் பட்டிருப்பதால் அந்த உபாயமும் பலியாவிடில் முடிவதாகத்திருவுள்ளமே தவிர வேறுவிதமாக இல்லை" என்று தண்டோபாயமாகிய சாகரமாரணத்தையும் திருவுள்ளத்தில் நினைத்தான் என்கிறார். அது எந்தவாய் கொண்டோ இது எந்தவாய்கொண்டோ அறிகிறிலேம். இவர்எழுதுகிறபடி "இதிராமோமதிம்க்ருத்வா" என்றமதி மூன்று விஷயங்களை உட்கொண்டு உதித்ததாகத்தெளிவாகத்தெரிகிறது. அவையாவன (1) சரணவரணமும். (2) அதுபலியாவிடில் சாகரோச்சோஷணமாகிய சாகரமாரணமும். (3) அதுவும் பலியாவிடில் தான் மரணம் செய்து கொள்ளுதலும். சரி, இம்மதி ஓரே சமயத்தில் இம்மூன்று விஷயங்களையும் உட்கொண்டு உதித்ததென்பதில் சந்தேகமில்லையே ? அவை ஒன்றன்பின்

ஒன்றாக அனுஷ்டிக்கவேண்டியவை என்பதிலும் சந்தேகமில்லையே ? ஆனால் ஒவ்வொரு உபாயத்தையும் பிரயோகித்துப்பார்த்த பிறகு, அதாவது, சரணோபாய அனுஷ்டானம் செய்த மூன்று நாளைக்குப் பிறகு சாகரோச்சோஷண நினைவும், அதையும் செய்து பார்த்து அது முடியாமற்போனால் ஸ்வமரண நினைவும் தோன்றவேண்டுமே ? அப்படியில்லையே ? வருணன் முகங்காட்டாதபோது "சாகரம் சோஷயிஷ்யாமி" என்றும் "சாபம் ஆநய" என்றும் கார்யத்திலேயே ஆரம்பித்துவிடுகிறானே. அக்கார்யத்தினுடைய எண்ணம் இந்த அத்யமே சுலோகத்தில் தானே இருக்கவேண்டும். அப்படியே தான் இராமமரணவாதியும் சொல்லுகிறார். ஒவ்வொருகார்யமும் நிகழ்ந்து அதுபலியாமற்போனால் தான் மற்ற நினைவு நினைக்கவேண்டும். அப்படி நினைவு நிகழ்ந்தால் தானே ஆர்ஜவத்துக்குச்சேரும் ? ஒரே சமயத்தில் மூன்று எண்ணங்களும் உதித்ததாகச்சொன்னால் எப்படி ஆர்ஜவத்துக்குச்சேரும். இவர் சொல்லுகிறபடி இராமனுக்குத் தண்டோபாய நினைவுவந்த பிறகு தானே ஸ்வமரண நினைவுதோன்றியிருக்கிறது. ஸ்வமரண நினைவு சரண நினைவுக்கு அடுத்தபடி வந்ததாகச்சொன்னால் அல்லவோ ஆர்ஜவத்துக்குச்சேரும் ? ஒரே சமயத்தில் நினைத்த சரண நினைவுக்கும் தன் மரண நினைவுக்கும் நடுவில் சமுத்திரமாரண நினைவு உண்டாயிருக்கிறதே. இராமன் சரணாகதி நினைவு சமயத்தில் சாகரமாரண நினைவு கொண்டானென்று நெஞ்சினாலும் நினைக்கப்போமோ என்று எந்த வாயால் சொல்வது. இப்படியும் முன்பின் யோசனையின்றிப் பேசுவதுண்டோ ? ஆனால் இவர் "ஸாகரஶோஷண நினைவு தான்கொண்டான் ஸாகரமாரண நினைவு கொள்ளவில்லை என்று தானே சொன்னோம்" என்று தப்பித்துக்கொள்ள முயற்சிசெய்யலாம். அதுவும் முடியாது. ஏன் ? ஸாகரஶோஷணம் என்றால்கடலை வற்றடித்தல் வற்றடிக்கப்பட்டால் கடல் இல்லையாய்விடும். மாரணம் என்றால் கொல்லுதல், சரீரத்தை அழித்தல், இல்லையாக்குதல் தானே ? ஆக இரண்டும் ஒன்றுதானே, ஆனால் "நாம் சாகரம் என்று வருணதேவனைக்குறித்தோம், வருணமரண நினைவு என்று சொன்னோம்" என்பராகில், நாமும் வருணமரணத்தை நினைத்தான் என்று சொல்லவில்லையே என்போம். இராமன் இலங்கையை அடைவதற்கு இடைச்சுவராயுள்ளது வருணன் சொத்தாகிய ஜலம்தானே.

அதைத்தானே அழிக்கவேண்டும். அதை அழிப்பதாகத்தான் நினைவுகொண்டான் என்கிறோம். ஆக இவர்கள் நம்வாதத்திலேயே தஞ்சம் புகவேண்டுமே தவிர வேறு வழியில்லையே!

ஶுஶ்ரூஷா சைவ சார்ஜவம் ப்ரியவாதிதா என்று

நான்கு குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவே. மற்றமூன்றையும் விட்டு ஆர்ஜவத்தை மாத்திரம் பிடித்துக்கொண்டாரே. மற்றவைக்கு வராதகுறை ஆர்ஜவத்துக்கு என்ன வந்து விட்டது? தண்டோபாயத்தாலும் தரணம்செய்ய முடியாவிட்டால் தானே ஸ்வமரணம் என்கிறார். இதில் தண்டோபாய நினைவு எப்படி இல்லை என்று சொல்லுகிறார். இதில் எவ்வளவு ஆர்ஜவம் உளதோ அவ்வளவும் சரணம் பலியாவிட்டால் ஸாமரமாரணம் என்பதில் இல்லையா? நெருப்பு என்றால் வாய் வெந்துவிடுமா?

உண்மையில் இராமன் ஸாமரமாரணத்தை நினைத்தால் தான் ஆர்ஜவத்துக்குப்பொருந்தும். தன் மரணத்தை நினைத்தல் ஒருக்காலும் பொருந்தாது. எங்ஙனேயென்னில், இராமன் உத்தமஊத்த வீரன். ஒவ்வொரு கார்யத்தையும் ஆலோசனையின்றி ஆரம்பிக்க மாட்டான். த்வம் தாவத்விதிதாம் ஶ்ரேஷ்ட: ஸர்வஶாஸ்த்ரார்த்த கோவித: என்று சுக்ரீவன் சொன்னது பொய்யோ? அறிவாளியாகிய இராமன் உபாசனைக்கு முன்பு கடலை எவ்வகையாலும் தாண்டி விடுவதாகச்சொல்லியிருந்தான். பின்னர் கடலரசன் இசையாதபோது அம்பும் வில்லும்கொண்டு வற்றடிக்கத் தொடங்கினான். வாசிக வியாபாரமும் காயிக வியாபாரமும் ஒன்றாயிருக்க, நடுவில் மானசிக வியாபாரமாகிய நினைவு மாத்திரம் தன்மரணத்தை ஸங்கல்பிக்குமோ? நினைத்தால் ஆர்ஜவத்துக்குச்சேருமோ? வருணன் இவனை "வஞ்சகன் இவன் பேசுவதொன்று, நினைப்பதொன்று, செய்வதொன்று, இவன் நடத்தை ருஜுவானதாயில்லையே" என்று தானே நினைப்பன்?

இன்னமும், ஸாமரமாரணத்தை நினைத்தால் ஆர்ஜவத்துக்கு என்ன குறை? ஒருவன் தன் கடன்காரனிடம் பணத்தைத்திரும்பிப் பெறவிரும்புகிறான். முதலில் "இவனைப்போய் நயமாய் நம்கஷ்டத்தைச் சொல்லிக்கேட்டுப்பார்ப்போம்" என்று நினைக்கிறான். "சரி இவன் கொடுக்காவிட்டால் கோர்ட்டில் வியாஜ்யம்செய்ய நேரிடும்

அதற்காக என்செய்வது, செய்துதானே தீரவேண்டும்” என்று மனதில் முடிவுசெய்து கொள்ளுகிறான். இதில் ஆர்ஜவத்துக்கு என்னகுறை? முதல் உபாயமாகிய “சென்றுபணங்கேட்டல்” செய்து பலிக்காவிட்டால்தான் இரண்டாவது யோஜனை செய்யவேண்டும் என்பாருண்டோ ? முதலில் போய்க்கேட்டுவிட்டுப் பிறகு வீட்டிற்கு வந்து உட்கார்ந்து இரண்டாவது யோஜனைக்கு ஆஸநம் போட்டுக்கொண்டு சங்கல்பம்செய்து கொள்ளவேண்டும் போலிருக்கிறது ? இந்த ஆர்ஜவத்துக்கு உதாரணமாக இராமன் சூர்ப்பணகையிடம் தன் வரலாற்றை உண்மையாகவே கூறுகிற விதத்தை எடுத்துக்காட்டுகிறார். இந்த வட்டத்தில் ரிஷியும் இராமனுடைய ருஜுபாவத்தை வியந்து பேசுகிறார். ஆனால் அடுத்தபடி உடனேயே இராமன் சூர்ப்பணகையைப்பார்த்து. “லக்ஷ்மணன் பெண்ணாசை பிடித்து நிற்கிறான். அவனிடம் செல்” என்று சொல்வது என்ன. ஆர்ஜவமோ ? அநுஜஸ்த்வேஷமே ப்₄ராதா ஶீலவாந் ப்ரியத₃ர்ஶநः | ஶ்ரீமாநக்ருததா₃ரஶ்ச லக்ஷ்மணோ நாம வீர்யவாந் | அபூர்வீ பா₄ர்யயா சார்தீ₂ தருணः ப்ரியத₃ர்ஶநः | அநுரூபஶ்ச தே ப₄ர்தா ரூபஸ்யாஸ்ய ப₄விஷ்யதி என்று சொல்லவில்லையோ ? ஆத்மாநம் மாநுஷம் மந்யே என்று எல்லாத்தேவர்கள் முன்னிலையில் சொன்னானே அது மாத்திரம் எப்படி ஆர்ஜவத்துக்குச் சேரும் ? உண்மையில் இராமன் தன் பூர்வஜன்மமாகிய ஸர்வேச்வரத்வத்தை மறந்து விட்டானோ? அங்ஙனமாயின் பூர்வஜன்மம்தெரியாத நமக்கும் அவனுக்கும் என்னவாசி ? “ஜந்மகர்மசமேதிவ்யம்” என்று கிருஷ்ணவதாரத்தில் அர்ஜுனனிடம் சொன்னவன் இராமாவதாரத்தில் தன் பூர்வஜந்மத்தை மறந்து பேசினான்போலும். அல்லது தன்பூர்வஜந்ம ஞானத்தோடு இராமன் தேவர்கள் முன்னிலையில் ஆத்மாநம் மாநுஷம் மந்யே என்று சொன்னால் பொய்தானே, இது ஆர்ஜவத்துக்குச்சேருமோ ?

ஸீதயா ரஹிதோஹம் வை நஹி ஜீவாமி லக்ஷ்மண என்று ஸீதையைப்பிரிந்தபோது சொன்னதும், யுத்தத்தில் இலக்ஷ்மண விஷயத்தில் தே₃ஶே தே₃ஶே களத்ராணி என்று சொன்னதும், சுக்ரீவவிஷயத்தில் த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம என்றும், பிராம்மண பிரதிஜ்ஞை விஷயத்தில் அப்யஹம் ஜீவிதம்

ஜஹாரம்ஸ்வாம்வாஸீதேவஸ்யருக்ஷணாம் என்றும் சொன்னதெல்லாம் ஆர்ஜவத்துக்குப்பொருந்துமானால் ஸாகரமாரண நினைவில் மாத்திரம் என்னகுறை வந்து விடும்?

மேலும் சரணம் செய்துகொண்டிருக்கும்போதே ஸாகரமாரண நினைவுகொண்டால் தானே ஆர்ஜவத்துக்குக்குறை. கையில் பவித்திரம்போட்டு, ஆசனமிட்டு, பிராணாயாமம்செய்து சங்கல்ப முடிவில் ஏவம்குணவிசேஷணவிசிஷ்டாயாம்சுபஸ்ராம்ஶுஹதிதௌ அஸ்யஸாகரதரணார்த்தம் ஸாகரஶரணம்கரிஷ்யே, தரணாஹவேதநாரணம் கரிஷ்யே என்றாவது அல்லது வருணஜபத்தில் ஓம்நமோவருணதேவாய என்று நூறு உருக்களுக்கு ஒரு உருவாவது தரணாஹவெஸாகரமாரணம்கரிஷ்யே என்றாவது சொல்லி ஜபித்ததாக ரிஷி சொல்லுகிறாரோ? அப்படிச்செய்தால் தானே சாணுகதியில் ஸாகரமாரண நினைவு ஆர்ஜவத்துக்குப்பொருந்தாது என்று சொல்லலாம். உபவேசனத்துக்கு முன்பு தாம் செய்யப்புகும் உபாயம் பலியாவிட்டால் என்ன செய்வது என்று மனசில்யோஜனை செய்யும்போது ஸாகரமாரணத்தையும் ஒரு உபாயமாக நினைத்தால் என்ன தவறு? ஒவ்வொரு புத்திமானும் தான் ஒருகார்யத்தில் இழிவதற்கு முன்பு அதன் சம்பந்தமான எல்லா யோஜனையையும் செய்வது இயல்புதானே. "எண்ணித்துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பதிழுக்கு" என்ற நியாயத்தை இராமன் அறிந்தவன் தானே? இதில் ஆர்ஜவத்துக்கு என்ன குறை?

இன்னமும், வால்மீகி கதை நிகழ்ச்சியின் தோரணையில் சொல்லிக்கொண்டு போகும்போது நடுவில் இராமன் உபாசனைக்கு அமரும் முன் தன்மனதில் என்ன நிர்ணயம்செய்து கொண்டான் என்று ஏன் நமக்குச்சொல்லவேண்டும் என்பதை நாம் ஊகிப்போமானால், அதன் காரணம் நன்கு விளங்கும். எங்ஙனேயெனில், இராமன் கதியில்லாதவன்போல் வருணனைச்சரண்செய்து அது விரைவில் பலிக்கவில்லை என்று பொறுமையிழந்து ஆத்திரப்பட்டுச் சாகரசோஷணத்தில் பிரயத்னம் செய்கிறான் என்று உலகத்தார் இராமனுக்கு ஆர்ஜவஹானியையும், க்ரௌர்யத்தையும் கல்பித்து விடுவார்கள் என்கிற சங்கையை மேற்கொண்டு அதைப்பரிஹரிப்பதற்காகவே, இராமன் தான் செய்யப்புகும் சரணம்பலியாவிட்

டால் சாகரமாரணம்செய்து அவ்வுபாயத்தால் கடலைக்கடப்பதாக உபாயசிந்தனை நிர்ணயம்செய்துகொண்டு, அதாவது, தான் ஏற்கனவே யோஜித்திருந்தபடி சாகரசோஷணத்தால்தான் தனக்கு தரணனுகூலம் கிடைக்குமென்றுமனதில் தீர்மானித்துக்கொண்டு உபாசனையில் அமர்ந்தான் என்று ரிஷி நமக்குச்சொல்லுகிறார். ஆனால், ஏன்ரிஷி வ்யக்தமாகச்சொல்லவில்லை என்றால் இராமன் உபாஸனாநந்தரம் (அதாவது 3-அல்லது 4-சுலோகங்களுக்குப் பின்னாலேயே ரிஷி சொல்லுகிறபடி) வருணன் முகங்காட்டாதபோது 𑌅𑌦𑍍𑌯𑌮𑌦𑍍𑌬𑌾𑌣𑌨𑌿𑌰𑍍𑌭𑌿𑌨𑍍𑌨𑍈𑌰𑍍𑌮𑌕𑌰𑍈𑌰𑍍𑌮𑌕𑌰𑌾𑌲𑌯𑌂 । 𑌅𑌦𑍍𑌯𑌯𑍁𑌦𑍍𑌧𑍇𑌨𑌮𑌹𑌤𑌾𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌂𑌪𑌰𑌿𑌶𑍋𑌷𑌯𑍇। 𑌸𑌾𑌗𑌰𑌂𑌶𑍋𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂𑌯𑌾𑌨𑍍𑌤𑍁𑌪𑍍𑌲𑌵𑌙𑍍𑌗𑌮𑌾𑌃। 𑌅𑌦𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑍋𑌭𑍍𑌯𑌮𑌪𑌿𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑌃𑌕𑍍𑌷𑍋𑌭𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌸𑌾𑌗𑌰𑌂। 𑌅𑌦𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌂𑌶𑍋𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌸𑌪𑌾𑌤𑌾𑌲𑌂𑌮𑌹𑌾𑌰𑍍𑌣𑌵 என்று வாசிகமாகவே பிரதிஞ்ஞைசெய்து சோஷணத்தில் ப்ரவர்த்திக்கிறானதலால், இராமன் வாசிகமாகப் பிரதிஞ்ஞைசெய்வதற்கு முன்னமே, தான் எப்படி அந்த பிரதிஞ்ஞா விஷயமாகிய சோஷணத்தைத்தெளிவாக ஒன்றேபட வாசனிகமாகச் சொல்வது என்று இராமமரணமும் சாகரமரணமும் தோன்றும்படி இரண்டுபட சுலோகம் அமைத்திருக்கிறார். இந்த மர்மத்தை யோஜியாமல் மேலெழுந்தவாறாகப்பொருள் கொண்டால் சந்தர்ப்பத்துக்குச் சற்றும் பொருந்தாத இராமமரணத்தையே தோற்றுவிக்கும், ஊன்றி நோக்கின் சாகரமரணமேதான் தெளிவாக அர்த்தமாகும். இன்னமும், மேற்கூறிய சுலோகங்களின் பிரதிஞ்ஞா விஷயமான சாகரசோஷணமே இந்த 𑌅𑌦𑍍𑌯𑍇 சுலோகத்தில் இருக்கிறது என்று அந்த சுலோகங்களில் உள்ள ஆநுபூர்வியை உற்றுக்கவனித்தால் தெளிவாகத்தெரியும். அந்த சுலோகங்களிலுள்ள 𑌅𑌦𑍍𑌯 என்னும் பதமே இந்த சுலோகத்திலும் உளது. 𑌤𑍍𑌵𑌾𑌂, 𑌸𑌾𑌗𑌰𑌂, 𑌮𑌕𑌰𑌾𑌲𑌯𑌂 என்றகர்மவாசகபதங்களே இதிலும் 𑌸𑌾𑌗𑌰𑌸𑍍𑌯 என்ற 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿ஷஷ்டியில் உள்ளது. 𑌶𑍋𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿, 𑌕𑍍𑌷𑍋𑌭𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 என்கிற க்ரியாபதங்களின் அர்த்தமே இதில் மாணபதத்தில் உள்ளது. 𑌶𑍋𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 என்னும் க்ரியையின் கர்த்தாவான 𑌅𑌹𑌂 என்ற கர்த்ருவாசக𑌅𑌸𑍍𑌮𑌦𑍍 சப்தார்த்தம் இதிலும் மே என்கிற கர்த்ரிஷஷ்டியில் உள்ளது. 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂𑌯𑌾𑌨𑍍𑌤𑍁𑌪𑍍𑌲𑌵𑌙𑍍𑌗𑌮𑌾𑌃 என்ற

வாக்யத்தின் அர்த்தமே இதிலும் தரணம் என்கிற பதத்தில் உள்ளது. ஆகவே ப்ரதிஜ்ஞாவாசனிகமான அந்த சுலோகங்களின் வாக் வ்ருத்திக்ரமிகையிலேயே ரிஷி இந்த சுலோகத்தையும் அமைத்திருக்கிறார். ஆனால் இந்த ஸாமர ஶோஷணப்ரதிஜ்ஞாஹாவம் முதலடியில் தோற்றுதிருக்கும்படி தரணமரண பதங்களை விஷமகோடிகள் போறகற்பித்து விகல்ப சரீரமிட்டு இந்த சுலோகத்தை அமைத்தார். இந்த ரஹஸ்யத்தை நம்பிள்ளை போன்ற ரஹஸ்யவேதிகளே அறிவார்கள். அவர்களும் இத்தை முடித்தல் கடத்தல் என்று விகல்பம்போல் அமைத்து வாக்கிய மிட்டார்கள். ஆகவே மந்தமதிகளான நம்போல்வார்க்கு எங்ஙனம் இந்த மர்மம் விளங்கும்? நமக்கு ஸர்வஜ்ஞர்களான பூர்வாசார்யர்களுடைய சாயையில் ஒதுங்குவது தவிர புகலிடமாவதொன்றில்லை.

இன்னமும், வால்மீகி இந்தவட்டத்தில் "க்ரியாதக்ஷ:,ப்ரக்ருத்யாயஶஸ்ரீமுஹஸு,யஶ வத்ஸல:, நயஜ்ஞ:" என்று வசனமிட்டு வர்ணிப்பதனாலே, ஸர்வ சக்தனான இராமன் தர்ம சிலனுகையாலே "ஸத்க்ரியார்த்தம்" என்று விபீஷணமந்த்ர வஹுமானத்திற்காக வே சரணாகதிசெய்ய இசைந்தான் என்று சொல்லியிருக்க, தன்பலத்திலே பூர்ணநம்பிக்கைகொண்ட ஒருவீரன் கார்யம் நெருங்கும் போது கோழைநெஞ்சன் போலத்தன்மரணத்தை ஸங்கல்பித்துக் கொள்வானோ? அப்படித் தைரியத்தைக்கைவிட்டவனுக ஆன போதிலும் மஹாகவியாகிய வால்மீகியும் தன் கதாநாயகனது சிறப்பைக்குறைக்கக்கூடிய அங்கீனவை வெளியிற்சொல்வாரா? இன்னமும், இராமன் சாகரசோஷணத்தை இன்றியமையாத ஒரு உபாயமாகக்கைக்கொண்டானாயினும் அதன்மூலம் வருணனுக்குப்பயத்தை உண்டுபண்ணித் தனக்குவேண்டிய அனுகூலத்தைப்பெறவேண்டுமென்று விரும்பினன். ஏனெனில், சரணாகதியால் தனக்கு உதவி கிடைத்தால், வருணன் ஒருவேளை "அந்த இராமனே என்காலடியில் சேதுபந்தனத்திற்காக தொங்கிக்கொண்டிருந்தான்" என்று செருக்கடைந்து சொல்லித்திரியக்கூடும். ஆகையால் வருணன் செருக்கையழித்து, அவனுக்கு முதலில் உபகாரமும் செய்து, பிறகு அவனுதவி பெற்றால் தனக்கு ஒருக்காலும் மேற்சொன்ன கௌரவ ஹானி ஏற்படாது என்பது இராமனது எண்ணம். ஆதலால் தான் செய்யும்ஸாகரசோஷணத்துக்குத்தன்ஶரணாகதி பலியாமையையே காரணமாகக்கொள்ளவேண்டுமென்கிற எண்ணமுள்ள இராமன்,

தன் மரணத்தை எங்ஙனம் நினைக்கக்கூடும் ? வருணன் மரணபயத்திற்கே இணங்குவான் என்று இராமனுக்கு நன்ருகத்தெரியும்.

குகன் இராமனது குணத்திலும் வடிவழகிலும் ஈடுபட்டான். அதனுல் தான் "ஸௌமித்ரோ ஸௌஹார்தாஸ்யமுபாமத:" என்ற இளையபெருமாளோடு வாசியற "குகப்பெருமாள்" ஆனுன். சுக்ரீவன் இராமனை பலபரீக்ஷைசெய்து அரசர்க்கரசர் உதவிசெய்வதுபோல உதவி செய்ய உடன்பட்டானுதலால் "சுக்ரீவ மஹாராஜர்" ஆனுன். விபீஷணன் ஸர்வஸங்கபரித்யாகம்செய்து இராமனிடம் ப்ரபத்திசெய்தானுகையால் ப்ரபன்னர்களான ஆழ்வார்களைப்போல் "விபீஷணுழ்வான்" ஆனுன். வருணன் மரணபயத்திற்கே இணங்கினுன். ஆதலால் அவன் ஒன்றுமேயாகவில்லை, வெறும் வருணனுகவே யிருக்கிருன்.

இந்த வட்டத்தை வருணோபாஸனை வட்டம் அல்லது ஸாமரஸோஷண வட்டம் என்று சொல்வதைவிட்டு ஶரணுகதி வட்டமென்று பேர்வைத்துக்கொண்டு இங்கு ஸாமரமாரண நினைவு ஆர்ஜவத்துக்குப் பொருந்தாது என்று சொல்வதில் யாது பயன் ? ஆகவே நாம் மேலேபலபடியாக நிரூபித்தபடி ஸாமரமாரண நினைவுதான் ஆர்ஜவத்துக்குப்பொருந்துமே ஒழிய, இராமனது ஸ்வமரண நினைவு ஒருபடியாலும் பொருந்தாது.

விமர்சம் 4

க்ஷணிகாநுஸந்தாநம் செய்யவேண்டும். ஸார்வத்ரிகாநுஸந்தாநம் அவசியமில்லை என்பது.

தத்வபிரதிஷ்டையில் 9-ஆம் பாராவில் "ப்ரக்ருத விஷயத்தில் ஸக்ருத்ஸ்மரணம்வா ஸாமரஸ்மரணம்வா என்று கிரமமாகவே அந்வயித்துப்பொருள் கொண்டேயாக வேணுமென்பதை முந்துற உபபாதிக்கிறேன்" என்று எழுதிவிட்டு, பிராயோபவேசம், ஆர்ஜவம் என்பவற்றைப்பற்றி 3-பாராக்களும் பிறகு 14-வது பாராவில் ஸோமக்ஷாத்ரவ்யப்ரத்யக்ஷோவலவத்வாது என்கிற நியாயத்தைக் கொள்ளலாகாதோவென்னில் அதுவும் இங்கு கொள்ளலாகாது" என்கிருர். மறுபடியும் ஆர்ஜவம், சுக்ரீவவிஷயம் "ராமோத்விர்நாபிபாஷதே" என்கிறவிஷயம் 16-வது பாராமுதற்கொண்டு 28-வது

பாராவரை, அநந்தரம் விகல்ப விசாரம் 29-வது பாராவிலிருந்து 39-வது வரை, 39-வது பாராவின் முடிவில் "ஆதலால் வ்யுத்க்ரமாந்வயம் ஒருபடியாலும் பொருந்தாதென்று விட்டொழிவதே அழகியது" என்றும் 40-வது பாராவில் "ஸ்லோகமுள்ளபடியே யோஜிப்பதில் ஒரு குறையும் சொல்வதற்கிடமில்லாமையால் ஸாகர தரணம்வா மரணம்வாஸேஹவது என்கிற அர்த்தத்தையே ஆசாரியர்கள் அருளிச்செய்யப் பிராப்தம். அப்படித்தான் அருளிச்செய்துமிருக்கிருர்கள் என்கிற நமது விஞ்ஞாபநம் எஞ்ஞான்றும் வெற்றி பெற்றதேயாகும், இதில் ஒருகுறையேனும் காட்டக்கூடுமோ" என்று எதை எதையோ சொல்லிக் காந்தாரபரிவர்த்தனம்செய்துவிட்டு முடிவில் வெற்றிக்கொடி நாட்டுகிறுர்.

மேற்கண்ட உக்திகளை விசாரிப்போம். ஆனுபூர்வியை மாற்ருமல் க்ரமமான அந்வயம்செய்து பார்த்தால் அத்ய இப்போது, மே எனக்கு, மரணம் இறத்தல், ஹவது உண்டாகட்டும். அயவா இல்லாவிட்டால் (நான் மரணமாகாவிட்டால்) ஸாகரஸ்ய கடலினுடைய, தரணம்வா கடத்தலாவது உண்டாகட்டும். இது தானே அர்த்தம். அதாவது "இப்போது நான் உயிரை மாய்த்துக்கொள்கிறேன். அதாவது என்னைப்பலியிட்டுக் கொள்கிறேன். இதைப்பார்த்துக்கடலரசன் மனமிரங்கி என்னை உயிர்ப்பித்துக் கடலைத்தாண்டுவிக்கட்டும்" என்று தானே தேறும்? ஆனல் இது ப்ராயோபவேஸம் என்றல்லவோ ஆகும். தத்வபிரதிஷ்டையில் "பிராயோபவேசம் என்று சில அபிஞ்ஞர்களும் சொல்லுகிருர்கள்" என்று சொல்லித் தனக்கு அது அபிப்பிராயம் இல்லை என்றும் தெளிவாகச்சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் பிராயோபவேசமில்லை. க்ரமிகாந்வயம் பிராயோபவேசத்தில் மூட்டி விடுவதால் அந்த அந்வயம் பொருந்தவில்லை என்று தேறிவிடுகிற தல்லவா? மேலும், இங்கு இராமன் தரணசங்கல்பம் செய்துகொள்கிருனு? தன்மரண சங்கல்பம் செய்துகொள்கிருனு? தன்மரணசங்கல்பமல்லவா பிரதானமாக ஆகிறது? இதைக்காட்டிலும் ஆபாசமான அர்த்தம்வேறு உண்டா? ஆசார்யர்கள் இது காரணம் பற்றியே மரணபதத்தை ஸாகரபதத்தோடு அந்வயித்தார்கள். இராமமரணவாதி தத்வபிரதிஷ்டையில் மேமரணம் என்பதை த்விதீயகோடியாகத்தானே வைத்துப்பேசவேண்டுமென்கிருர். த்விதீய கோடியில் வைத்தால்தானே

தரணம் பலியாவிடில் தன் மரணம் என்று தேறும். தத்வபிரதிஷ்டையில் 62-வது பாராவில் "எம்முடைய கொள்கைப்படி எதைப் பிரதமகோடியாகக் கொண்டாலும் கொள்ளலாம். அதில் ஆக்ஷேபம் விளைய அவகாசம் இல்லை. ஸாமரதரணத்தை ப்ரதமகோடியாகவும் ஸ்மரணத்தைத்விதீயகோடியாகவும்கொள்வதேவிவக்ஷிதம்" என்று எழுதிவிட்டுத்தான் "இற்றை முடிதல்" என்று திருத்தினபடி "நம் பிள்ளை பிரதம கோடியாகவைத்து வ்யாக்யானித்தது ஜைநஸூ காசநப்பிரகரணத்துக்கு நன்கு இணங்குவதற்காகவும் மூல சந்நிவேசமுள்ளபடிக்குப் பொருந்துவதற்காகவும்" என்கிறார். முன்னமேயே ஜைநஸூப்பிரகாசந விஷயத்தைப்பற்றிப்பரக்க எழுதியாய் விட்டது. பிரதம கோடியாக வைத்தால் தரணசங்கல்பம்போய் ஆபாசமான ஸ்வமரண சங்கல்பமே தேறிவிடுகிறது. ஆதல்பற்றியே ஸ்வமரணத்தை த்விதியகோடியாகக் கொள்வதே விவக்ஷிதம் என்கிறார். அதாவது, ஸுஷ்டஸாமரஸ்ய தரணம்வா ஸ்மரணம்வா என்று இரண்டாவது கோடியில் வைத்தால் இது வ்யுதக்ரமமில்லையோ? க்ரமிகாந்வயமே செய்யத்தக்கது என்று வாயால் சொல்லிக்கொண்டு வ்யுத்க்ரமத்தில் தஞ்சம்புகுவானேன்? தன்வாதத்தைத்தானே அழித்துக்கொண்டதாகத்தேறி விடுகிறதே? முதலில் "மே"பதத்திற்குப்பக்கத்தில் இருக்கும் மரணபதத்தை இடையில் 3-பதங்களுக்குப்பிறகு முடிவில் தள்ளிவிடுவானேன். இது வ்யுத்க்ரமமா க்ருஸ்மா என்று கேட்டால் க்ருஸ்மம் என்று தான் சொல்வார் போலும்? உண்மையில் அவ்விதம் தான் சொல்லுகிறார். சுலோகமுள்ளபடியே யோஜிப்பதில் ஒரு குறையும் சொல்வதற்கிடமில்லை என்று சொல்லிக்கொண்டே ஸாமர தரணம்வாஸ்மரணம்வாஹேதவ: என்று பதங்களின் ஆநுபூர்வியை மாற்றி அந்வயிப்பது "காக்காயும் வெளுப்புத்தான் உனக்குக்காமாலைக் கண்" என்று சொல்வதுபோலல்லவா இருக்கிறது? ஆர்ஜவவாதத்தில்போல இதிலும் இராமமரணவாதி தனக்குத்தானே குழிதோண்டிக்கொண்டு விட்டார். இவர்வாதப்போக்கு ஓர் ரஸமாகத்தானிருக்கிறது!

பாடக்கிரமத்தைக்காட்டிலும் அர்த்தக்ரமம் பலமானதாயினும் அதை இங்கு கொள்ளலாகாது என்று வாயால் சொல்லியும் எழுதவும் செய்கிறார். ஆனால் தான் மாத்திரம், இந்தப்பாடம் அர்த்தத்

திற்குச்சேரவில்லை, அந்தப்பாடம் அர்த்தத்திற்குப் பொருந்தவில்லை என்று பாடக்ரமத்தை மாற்றித்திருத்தம் செய்கிறார். “இத்தை முடித்தல்” என்ற பாடமே இருந்து விட்டால் இவர்க்கு என்ன முழுகிப்போயிற்று. அர்த்தத்திற்குப்பொருந்த வில்லை என்று தானே “இற்றை முடிதல்” என்று திருத்தம் செய்கிறார். இவருடைய திவ்யார்த்ததீபிகை தோன்றியதன்காரணம் தனக்கு அபபாடங்கள் என்று தோன்றியவற்றையெல்லாம் திருத்தத்தானே. அபபாடம் என்று அர்த்தத்தைக்கொண்டுதானே தெளிகிறார். இப்போது மாத்திரம் அர்த்த பலத்தைப் புறக்கணிப்பானேன்? இவர் சொல்வதொன்று, செய்வதொன்றாகவேயிருக்கிறது !

“இப்போது எப்படியாயினும் தரணமே ஆகக்கடவது” என்ற மன உறுதியையே காட்டவல்ல இந்த சுலோகத்தின் அந்வயம் ஸுஹ்ருதே (ஸ்வயம்யத்நேந) தரணம் ஸ்வயம்வா ஸாகரஸ்ய மரணம் வா(மரணேநவா) என்றும், நம்பிள்ளை ஈட்டில் உள்ளபாடப்படி ஸுஹ்ருதேவா ஸாகரஸ்யவா மரணமபி தரணமேவஹ்யேஷ: என்றும் தேறும். கோவிந்தராஜரும் நம்பிள்ளையும் பின் கார்ய நிகழ்ச்சிக்கேற்ப மேமரணம்வா என்பதைவிட்டு ஸாகரஸ்ய மரணம்வா என்பதை மட்டுமேவைத்துக்கொண்டு ஸுஹ்ருதே தரணம் வாஸாகரஸ்யமரணம்வா என்று அந்வயித்தார்கள். ஈட்டுப் பாடப்படி அந்வயத்தில், “எனக்காவது கடலுக்காவது மரணம்நேர்வதாயினும் தரணத்தைக்கைவிடுவதற்கில்லை’ என்று இராமன் தன் மரணபர்யந்தம் பார்த்து விடுவது என்று உறுதிகொண்டான் என்றால் ஸாகரமாரணத்தை அவச்யம்செய்து கடத்தல் செய்ய வேண்டுவதே சரி என்று மதி நிர்ணயம் செய்துகொண்டான் என்று தேறுமே யொழிய தன் மரணத்தைப் பிரதிஞ்ஞைசெய்தான் என்று எவர்க்கும் தோன்றுவதற்கு ப்ரஸக்தியே யில்லை.

விமர்சம் 5.

விகல்பத்தில் தரணத்துக்கு விஷமகோடியாகக்கூடியது இராம மரணமேதவிர ஸாமரமரணம் பொருந்தாது என்பது:—

"தத்வப்ரதிஷ்டையில்" 29-வது பாராவில் "விகல்பங்களெல்லாம் விஷமகோடித்வயஸாலிகளாகவே யிருக்கவேண்டும் என்பது ஸாஸ்த்ரஸரணி, ப்ரக்ருதத்தில் சுலோகமுள்ளபடியே அந்வயித்தால் தான் அந்தஸரணி ஸம்மதமாகும்" என்கிறார். சுலோகம் உள்ள படியே அந்வயித்தால் முதலிலேயே இராமன் தன்னைப்பலிகொடுப்ப தாகிய ஆபாசமான அர்த்தம் தேறுகிறது என்று நிரூபித்தோம்.

விகல்பங்கள் விஷமகோடித்வயசாலிகளாகவே யிருக்கவேண்டு மென்கிற நியமமில்லை. ஸிங்கோடித்வயங்களாகவுமிருக்கலாம். கீழே சில உதாரணங்கள் காட்டப்படுகின்றன.

1. ஸ்வர்ணம்வா ரஜதம்வாதேஹி என்ற வாக்யத்தில் பொன்னும் வெள்ளியும் ஸிங்கோடிகளே தவிர விஷமகோடிக ளல்ல. ஸ்வர்ணம் கிடைத்தால் சிலாக்யம். வெள்ளியும் அபேக்ஷிதம் தான். அதாவது ஸ்வர்ணத்தில் உத்கடேச்சை, வெள்ளியில் சாதாரணேச்சை.

2. ஒருவன் பகவதாராதனத்தைக்குறித்து கதலீபலம்வா நாரிகேளம்வா ஆநய என்கிறான். இங்கு இரண்டிலும் சமான இச்சை. இவையிரண்டும் ஸிங்கோடிகளே யல்லது விஷமகோடிக ளல்ல.

3. ஒருவன் ஒரு வாய்க்காலைத்தாண்டயத்தனிக்கிறான். மே குல்யாதரணம்வா பதநம்வா பவது என்கிறான். இங்கு தாண்டுகிறவன் ஒருவனே. கார்ய நிகழ்ச்சியும் ஒன்று. தரணபதனங்கள் துல்யகால சம்பவங்கள். ஒன்றின் அபாவத்தில் ஒன்று சித்தமாயிருக்கும், இவையிரண்டும் விஷமகோடிகள், அதாவது பாஸ்பரவிரோதமானபலன்கள். இதில் தாணத்தில் தான் இச்சை; பதனத்தில் விருப்பமே கிடையாது. ஆயினும் தரணம் ஆகாவிட்டால் பதனம் நிகழ்ந்தே தீரும்.

4. இராம ராவணயுத்தம். இங்கு சத்துருக்களாகிய இராம ராவண வ்யக்திகளும் விஷமகோடிகள். யுத்தத்தின் பலன்க

ளாகிய வெற்றியும் தோல்வியும் விஷமகோடிகள். இங்கு ஒவ்வொரு வர்க்கும் வெற்றியிலேயே விருப்பம். தோல்வியில் வெறுப்புதான். ஆயினும் ஜெயத்தின் அஹாவத்தில் அபஜெயம் அவசியம் வந்தே தீரும். இராமனுக்கு ஜயமானல் இராவணனுக்குத் தோல்வி. இராவணன் ஜயித்தால் இராமனுக்குத்தோல்வி, அல்லது இராமனாகிய ஒருவனுக்கே ஜயமானல் அபஜெயமில்லே. இப்படியே இராவணனுக்கும். ஆக இந்த உதாரணத்தில் விஷமகோடிகள் இரண்டுவிதமாக அமைகின்றன. இவ்விஷமகோடி விஷயங்கள் துல்யகால சம்பாவனையிலேயே நிகழும்.

5. द्वारकायात्रां व्योमयानेन वा धूमशकटेन वा कुर्यात् என்கிற இந்த விகல்பத்தில் துவாரகாப்ராப்தியாகிய பலன் ஒன்றே. பலத்தை யடைவிக்கக்கூடிய ஸாதனங்கள் இரண்டு, இவை ஸிந்நகோடிகள். இதில் உபாயத்தில் தான் விகல்பம், பிரயோஜனத்தில் விகல்பமேயில்லே. ஆனல் புகைவண்டியாத்திரையும் விமானயாத்திரையும் வேறுதலால் யாத்ரையில் விகல்பம்சொல்லலாம் என்று ப்ரதிபக்ஷிகள் சொன்னல், யாத்ரைபலனல்ல, துவாரகா ப்ராப்திதான்பலன். அதற்கு யாத்ரை ஸாதனம். ஆதலால் சாதனத்தில் விகல்பமென்று தேறும்.

"தத்வபிரதிஷ்டையில்" மேற்சொன்ன 29-வது பாராவிலேயே, "मरणं वा सागरस्य तरणं वा என்கிற யதாவஸ்தித யோஜனையில் விஷமகோடித்வயம் ஸுஸ்பஷ்டமாகவே தெரிகின்றபடியால் அதில் விரிவு வேண்டியதில்லே" என்கிறார். இவருடைய இந்த सागरस्य तरणं वा मरणं वा அதாவது "இந்த என்னுடைய கடற்கடத்தலாவது என்னுடைய மரணமாவது" என்கிற விகல்பத்தில் தரணமரணங்கள் விஷமகோடிகளாக ஆனல் सागरस्य तरणं वा सागरस्य मरणं वा भवतु என்பதிலும் உண்டு. எங்ஙனே யெனில் மரணம் என்றால் கொலே, मरणं वा तरणं वा रामकर्तृकसागरकर्मकतरणं वा, रामकर्तृकशरीरकर्मकमारणं वा என்பதில் தாணத்திற்கும் மாரணத்துக்கும் கர்த்தா இராமனும் தரணத்துக்குக்கர்மம் ஸாகரமும் மாரணத்திற்குக்கர்மம் இராமசரீரமும் ஆகின்றன, அதே மாதிரியே सागरतरणं वा सागरमरणं वा भवतु रामकर्तृकसागरकर्मकतरणं वा रामकर्तृकसागरकर्मकमारणं वा

என்பதிலும் கர்த்தா இராமனும் கர்மம் ஸாகரமும் ஆகின்றன. இங்கும் தரணமாரண விகல்பவிஷயங்கள் இராமனையே சேருகின்றன. அதாவது கடத்தலாகிய தொழிலும் கடலைக் கொல்லுதலாகிய தொழிலும் இராமனையே சேருகின்றன, தாண்டப்படுதலும் கொல்லப்படுதலும் கடலைச்சேருகின்றன. இந்த சுலோக வட்டம் கார்யஸங்கல்ப வட்டமாகையால் கர்த்தவ்யாம்சத்திலேயே நோக்கு, அதாவது அஹம் ஸாகரதரணம் வா ஸாகரமாரணம் வா கரிஷ்யாமி அல்லது [illegible] அதாவது நான் கடல் கடத்தலாவது கடல் கொலையாவது செய்யவேண்டும் என்கிற விகல்பத்திலும் தரணமரணங்கள் விஷமகோடிகளாவதற்கு யாதொரு குறையுமில்லையே. ஸாகரமரணமானால்தான் இராமதரணம் உண்டு. ஸாகரமரணமில்லாவிட்டால் இராமதரணம் இல்லை. இப்போது இவை விஷமகோடிகள் தானே? இங்கு "தத்வப்ரதிஷ்டை" இராமமரணம் தான் தரணத்துக்குவிஷமகோடியாகும் ஸாகரமரணம் ஆகாது என்று சொல்வதனல் நாம் ஸாகரமரணமும் நன்முகவே விஷமகோடியாகும் என்று நிரூபித்தோம்.

ஆனல் உண்மையில் தரணத்துக்கு மரணம் விஷமகோடியே அல்ல. மரணத்துக்கு விஷமகோடி ஜீவநமே தவிர தரணம் அல்ல. ஆகவே இங்கு அஹம் தரணலாபே ஸாகரஸ்ய ஜீவநம் ஸ்யாத்வா (தரணாலாபே) ஸாகரஸ்ய மரணம் என்று விகல்பசரீரம் அமைக்கவேண்டும் அதாவது எனக்கு தரணம் கிடைத்தால் கடல் பிழைக்கும் அன்றேல் இறக்கும் என்றபடி. ஆதலின் கடலின் சாவும் வாழ்வுமே விஷமகோடிகள். இங்கு ஆர்த்திக ஸித்தியால் மரணத்துக்கு விரோதமான ஜீவநம் கிடைக்கின்றபடியால் "ஜீவனமே" விஷமகோடியாம். ஆனல் தரணம் என்னும் பதம் ஸிங்ஙக்தியால் ஜீவனத்துக்கும் அர்த்தமானல் தரணபதமே விஷமகோடி விஷய ஸமர்ப்பகமாகத்தட்டில்லை.

"தத்வப்ரதிஷ்டை" ஸாகரமரணத்தில் விகல்பமில்லை என்பதற்கு முக்கியமான காரணம் ஒன்று சொல்லுகிறது. அது ஹாஸ்யத்துக்கு வெகு ரஸமாயிருக்கும் என்னவெனில், 29-வது பாராவில் "இந்தக்கோடியில் விகல்பகோடி வைஷம்யம் சொல்லப்போகாது. சமுத்திரத்துக்கு மரணமாவது அதைச்சோஷணம்செய்வது தானே. அங்ஙனம் கடலைவற்றடிக்கச்செய்து விட்டால் பிறகு தர

ணம் என்று தனிப்படகர்த்தவ்யமான தொன்றுண்டோ ? வெறுந் தரையைத்தாண்டிச் செல்வதாவது வேறொருகோடியாகச் சொல்ல முடியாதே" 31-வது பாராவில் "ஸ்வகர்த்ருக ஸாமர கர்மக மாரணமும் தயாவிதமேயான தாணமும் விகல்பகோடிகளாவதற் குச்சம்பாவனையேயில்லை. சமுத்திரமரணமானுல் தரணம் பலித்த திறே" என்கிறுர். தாணம் என்ருல் கடத்தல் என்று அர்த்தம். அப்படியே தான் அவரும் சொல்லுகிறுர். ஆனுல் கடத்தல் என்பது ஜலத்தைத்தாண்டிச்செல்வதற்கு மாத்திரம் அர்த்தம் என்று பிர மிக்கிறுர். கடத்தல் என்ருல் ஒரு குறிப்பிட்ட தூரத்தைக்கடந்து செல்வது. அது நீராகவும், நிலமாகவும், வானுகவும் இருக்கலாம். இவற்றின் ஒரு எல்லையிலிருந்து மற்றொரு எல்லைக்குப்போதலே கடத்தல் ஆகும். நிலத்தை நடந்தும் நீரை நீந்தியும், வானைத்தாவி யும் கடப்பதுண்டு. ஆகவே கடத்தல் என்னும்பதம் எல்லாவற்றிற் கும் பொதுவாகப்பிரயோகிக்கும்பதம். கடலை வற்றடித்ததனுலேயே தெற்குக்கடற்கரையிலிருந்து இலங்கைக்கரையை வாநரசைந்யம் அடைந்து விடாது. ஜலம் வற்றினுல் ஜலம் இருந்த நிலப்பிரதே சத்தை நடந்துகடந்தே தீரவேண்டும். வஹ்நாயாம் தாவுவம் ஶா: என்ருரிறே. ஆகையால் இவர் சொல்லுகிறபடி தாணம் சோஷண மாத்ரத்திலேயே ஸித்தியாகாது. வெறுந்தரையைத்தாண்டிச் செல் வதும் ஜலதாணம்போல் பின்னகோடியாகக் குறையில்லை. "சமுத் திரமரணமானுல் தரணம் பலித்ததிறே" என்கிறுர். தரணம் பலிக் கத்தானே வேண்டும். அதற்காகத்தானே மரணம் செய்வது. "பலித்ததிறே" என்றீ ஆச்சரியப்படுகிறுரே, இதில் என்ன வியப்பு உளது. "நாடு கடந்தான், நாடு கடத்தினுன், காடு கடந்தான்" முதலி யன சாமான்யத்தமிழறிஞர்களும் அறிந்த விஷயம் தானே.

30-வது பாராவில் ஸாமபூர்வகதாணத்துக்கும், தண்டபூர்வக தாணத்துக்கும் விகல்பம் நன்கு பொருந்தும் என்றும் "ஜலம் உஷ் ணம்வாஶீதம்வா" என்று உதகரித்தும் காட்டி "ஆனுல் இங்கு விசேஷ்யாம்சமாகிய ஜலம் ஒன்று. விசேஷணும்சம் மாத்ரம் விகல் பம், அதுபோலவன்று இங்கு. மே தாணம்வா ஸாமரஸ்ய மரணம்வா என்ற விகல்பம் விசேஷ்யாம்சத்திலும் பேதம் நன்கு விளங்குமாறு சொல்லப்படுகையாலே விசேஷணும்சமாத்ரத்தை யிட்டு இங்கு விகல்பகோடி ப்ரவிர்த்தி என்று சொல்வதற்குப் பொருத்தமே யில்லையன்ருே" என்கிறுர்.

இவர் "ஜலம் உஷ்ணம்வாஸீதம்வா" என்று விசேஷ்யாம்ச மாகிய ஜலம் ஒன்று என்கிறார். ஜலம் ஒன்றேயானால் உஷ்ணத்வ ஸீதத்வவிசேஷணங்கள் ஒரே காலத்தில் அதில் இருக்கமாட்டா. ஆகையால் "உஷ்ணஜலம்வா ஸீதஜலம்வா" என்று விசேஷண விசிஷ்ட விசேஷ்யங்கள் வெவ்வேருக வாசனிகமாயிருக்கும் வாக்ய மிருக்கவேண்டும்.

இவர் சொல்லுகிறபடி விசேஷண விசேஷ்யம் ஆகிய இரண்டம்சங்களிலும் பேதம் உண்டு என்று தேறிவிடுகிறபடியால் விகல்பம் நன்றுகவே பொருந்தும். இவர் சப்தமே விசேஷ்யாம்சம் என்றும் சப்தபேதங்களே விசேஷ்யாம்சபேதங்களைக்காட்டும் என்றும் மயங்குகிறார். உண்மையில் சப்தம்விசேஷ்யம். அதன் அர்த்தபாவம் விசேஷ்யாம்சம். மரணபதத்தில் லக்ஷ்யார்த்தமாக தாணம் கிடைக்கிறபடியால் விசேஷ்யாம்சமாகிய தாணம் ஒன்றே தான். தாண மரணபதங்கள்தான் வேறு. இவர் சொல்லுகிறபடி விசேஷ்யாம்சம் ஒன்றேயாகத்தேறிவிடுகிறபடியால் விசேஷணும்சபேதமே விகல்பத்துக்குப்பொருந்தும். ஆகவே இவரதுவாதமே இவர்க்கு விரோதமாக முடிகிறது.

ஆனால் இவர் தாம் லக்ஷ்யார்த்தத்தில் பேசவில்லை என்று, சாப்திகமான முக்கியார்த்தத்தில் பேசினதாகச்சொன்னல், விகல்பமேயில்லையாய்விடும், எங்ஙனேயெனில் தாணம் பிரயோஜநம், விசேஷ்யம், மாணம் ப்ரயோஜகம், விசேஷணம். பிரயோஜன ப்ரயோஜகங்களுக்கும், விசேஷ்ய விசேஷணங்களுக்கும் விகல்பம் நேரவேநோது. மேலும் இவர் பதங்களே கோடிகள் என்று நினைக்கிறார். பதங்கள் கோடி விஷய சமர்ப்பகங்களே யொழிய கோடிக என்று. விஷயங்களே கோடிகளாகையால் லக்ஷ்யார்த்தத்தால் மரண பத வடிததாணமும் கோட்யந்தரமாகும், சாப்திகமாகவே யிருக்க வேண்டுமென்கிற நியமமில்லை. ஆகையால் அர்த்தஸித்தியால் கிடைத்ததாணத்துக்கும் சாப்தமாகவே யிருக்கும் தாணத்துக்கும் விகல்பம் கூறவேண்டும். இங்ஙனம் கொண்டால் தாணவிதங்கள் இரண்டாய்விடும். இவர்போலவே இன்னும் சிலரும் இந்த இரு வகைத்தாணங்களுக்கும் விகல்பம் சொல்லுகிறார்கள். ஆனால் தாணம் பிரதானபலனல்ல. இலங்காப்ராப்தியே உத்தேச்யபலன். தாணம் சாதனத்தொழில், ஸாமபூர்வகதாணேநவா, தண்டபூர்வகதாணேநவா மே லங்காப்ராப்திர்ஹவது என்று சொல்வதாகவே தேறு

கிறது. இரண்டு தரணங்களென்று வைத்துக்கொண்டாலும் தரண ஸாதனங்களாகிய ஸாம (ஶரண) தண்ட (மாரண)ங்களே விஷம கோடிகளாகும். ஆகவே உபாயமாக்கியே விகல்பம் கூறவேண்டுமே யல்லது "தரணம்வா தரணம்வா" என்று பலத்தில் விகல்பம்கூறுவது போல கூறுவது வார்த்தைக்குத்தான் பொருந்துமேயன்றி உண்மை யான விஷயபாவனைக்குப் பொருந்தவே பொருந்தாது.

இங்கு "பூர்வநிர்வாஹபரித்ராணம்" தரணபதம் ஸாமப்ர யோஜ்யஸேதுபந்தத்வாரகதரணம், மரணப்ரதம் தண்டப்ரயோக ரூப மரணப்ரயோஜ்ய பத்ப்யாம்யாந்தித்யவிஹித விசேஷதரணம். அதாவது பிந்நமரணப்ரயோஜ்யதரணம் விசேஷதரணம் முதல் தரணம் பிந்நதரணேதர ஸாமாந்யதரணம் என்றும் ப்ரயோஜ்ய ப்ரயோஜக, அவச்சின்ன அவச்சேதக பதங்களைப்போட்டு ரயில் வண்டித்தொடர் மாதிரி வாக்யங்களை அமைத்து, இரண்டு தரண மும் வேறு, ஆகையால் விஷமகோடிகளாகத் தட்டில்லை என்கிறது. இங்கு "தத்வப்ரதிஷ்டையும்" "பரித்ராணமும்" சாமான்யதரணம் விசேஷதரணம் அதாவது தரண தரணங்கள் விகல்பங்களென்று மருள்கின்றன. எங்ஙனேயெனில் இலங்கைக்கரையை அடைவிக்க கூடிய தரணம் கடத்தலாகிய க்ரியாவிசேஷம், அதாவது தொழில் ஒன்றே. இத்தொழிலுக்கு ஸாதனங்கள் அதாவது உபாயங்கள் தான் வெவ்வேறு. தரணமாகிய ப்ரயோஜனம் ஒன்றே, ப்ரயோஜக வ்யாபாரங்கள் தான் பிந்நங்கள். அவைகளே பிந்நகோடிகள் இங்குதரணவிதம் ஒன்றேதான். இவ்விரண்டு தரணங்களிலும் காலால் நடந்து தான் கடத்தல் செய்யவேண்டும். இத்தரணங் கள் ஸ்வர்ணவடம்வா, ரஜதவடம்வா என்னும் விகல்பத்தில் விசேஷண விசிஷ்டவஸ்துக்களே வெவ்வேறாயிருப்பவைபோல, பிந்ந பிந்ந ஸாயநதயாவஸ்திததரணங்கள் வெவ்வேறாகமாட்டா. ஆகவே உபாய, ஸாயந, ப்ரயோஜகரூப ஸாமதண்டங்களே விஷம கோடிகள். இங்கு ஸாமம்ஶரணவரணம். தண்டம் ஸாகரமாரணம்.

உண்மையில் ஶரணமரணங்களே பரஸ்பர விஷமகோடிகள். இங்கு ஸாத்யம் ஒன்றே. அதுதான் தரணம். அதற்கு மரணம் விகல்பமானால் பலன்கள் இரண்டாய் விடும். அப்போது அவை யிரண்டும் சற்றேறக்குறைய விரும்பத்தக்கனவாயிருக்கவேண்டும். எவனாவது கடத்தலுக்குப்பதில் மரணத்தை விரும்புவானா. "தத்வ ப்ரதிஷ்டை" சொல்லுகிறபடி ஶரணம்வா தரணம்வா என்பது

எந்த விகல்பத்தில் சேர்ந்தது என்று பார்த்தால் ஒன்றிலும் சேர்ந்ததில்லை என்று தான் சொல்லவேண்டும். ஶரணத்தை ஸக்ருத்ஸ்மரணம் என்று பேசுகிறபடியால், இராமதரணமும் இராமமரணமும் ஸிந்நகால சம்பவங்களாம். மேற்சொன்னபடி 4-வது வகையில் போல் இராமஸாகரயுத்தத்திலேயே ஸாகரமரணமாவது இராமமரணமாவது ஏற்பட்டால் தான் விஷமகோடிகளாக ஆகும். இல்லையேல் தரணம் ஆகாவிடில் உயிரைமாய்த்துக்கொள்ளுதல் பலவகையான காரணங்களால் தடுக்கப்படலாம். ஆகையால் தரணமாகிய பலத்துக்கும் தத்பலாஹாவத்தில் செய்யக்கருதின ஸ்வமரணத்திற்கும் விஷமகோடிசம்பவம் நேரவே நேராது.

ஆனால் மே தரணம்வா ஸாகரமரணம்வா என்பது மேற்சொன்னபடி 4-வது வகையிற்சேர்ந்தது. இங்கு தண்டோபாய ப்ரயோக யோஜனைக்கட்டம். உண்டோபாயம் ஸாகரசோஷணம், அதாவது ஸமுத்திரமரணம். ஸாகரமரணமானால் இராமதரணம் உண்டு ஸாகரமரணமில்லாவிட்டால் இராமதரணமில்லை.

ஆனால் நாம் முன்னே கூறியபடி உண்மையில் ஸாகரமரணத்துக்கும் இராமதரணத்துக்கும் விகல்பமில்லை. என் எனில் இந்த விகல்பம் தண்டோபாயப்பிரயோகமாகிய இராமஸாகரயுத்தத்தில் தான் உண்டு. யுத்தமில்லாமலேயே வருணன் இணங்கினதனால் சாகரமரணமில்லாமலே இராமதரணம் நேர்ந்தது.

ஆதலால் இங்கு சாமோபாயமாகிய இராமசரணத்துக்கும், தண்டோபாயமாகிய சாகரமரணத்துக்குமே விகல்பம் உண்டு. பலத்தில் விகல்பம் இல்லை. பலன் ஒன்றே அதாவது தரணம். த்வாரகா யாத்ராம் [illegible] என்பதில்போல இந்த விகல்பம் 5-வது வகையில் சேர்ந்தது. இப்போது இந்த என்னுடைய சரணோபாயத்தால் எனக்குத்தரணம் நேரட்டும், இல்லாவிட்டால் ஸாகரமாரணோபாயத்தால் தரணம் நேரட்டும் என்கிறான் இராமன். இராமனுக்குத்தரணம் முக்கியம். சரணோபாயத்தால் பலித்தால் விருப்பம் தான். பலியாவிட்டால் மாரணோபாயத்தாலாவது பலிக்கட்டும். ஆதலின் உபாயங்களிலேயே விகல்பம் சொல்வதே இங்குப்பொருந்தும்.

ஆனால் சரணம்வாசனிகமாக இல்லையே என்றால் அவசியமில்லை என்று தான் சொல்லவேண்டும். [illegible] என்னும் க்ரியை வாசநிகமாக இல்லையே, வருவித்துக்கொள்கிறோமல்லவா ? அதைப்போல

வருவித்துக்கொள்ளவேண்டும். அஸ்மத்கர்த்ருக ஶரணோபாயேந தரணம் பவது யுஷ்மத்கர்த்ருக உண்டப்ரயோக ரூப ஸாகர மாரணேந தரணம் பவது, என்று, என்னுடைய கடத்தல் சாகர விஷயமான சரணத்தாலாவது அதன் மரணத்தாலாவது உண்டா கட்டும் என்று உபாயத்திலேயே விகல்பம் தெளிவாக நிரூபிக்கப்படு கிறது. அத்ர தரணம் ஶரணேநவா ஸாகரஶோஷணேந வா என்று ஶரணேந என்ற த்ரிதீயாந்த பதத்தைவருவித்துக் கொண்டு மரணம் என்னும் பதத்திற்கு விபக்திவிபரிணாமமாக த்ரி தீயையில் மரணேந என்று அர்த்தங்கொண்டால் ஒரு குறையு மில்லையல்லவா ?

இது பற்றியே திருவிருத்த வியாக்யானத்தில் பெரியவாச்சான் பிள்ளையும் "இதுதான் தனக்குச்சரணமென்றால் இரங்குமதன்றே, மரணமானால் இரங்குமதிறே" என்று சரணமரணங்களுக்கு விகல்ப மிட்டார்.

ஆனால் நம்பிள்ளை ஈட்டில் "இத்தை முடித்தல் கடத்தல்" என்று விகல்பமிட்டுப்பேசுகிறாரே என்றால், நாம் முன்னே கூறியபடி கர்த் தவ்யாம்சத்தில், அதாவது, இராமன் செய்யவேண்டிய தொழிலாகிய கடத்தலுக்கும் முடித்தலுக்கும் விகல்பமிட்டுக்கூறுதல் விகல்பம் போல் தோன்றுகிறதே தவிர உண்மையில் விகல்பமில்லை. முடித்த லால் கடத்தல், அல்லது முடித்து, முடித்தாவது கடத்தல் என்று அர்த்தங்கொள்ளவேண்டும். ஏனென்னில் "இப்போது சரணோ பாயத்தில் இறங்கியிருக்கிறேன். பலியாவிடில் தண்டோபாயத் தால் கடலை மரணம்செய்து அதனால் கடத்தல் செய்யவேண்டும்" என்று இராமன் யோஜிக்கிறான். ஏற்கனவே சரணம் செய்வதாகத் தீர்மானம்செய்து ஆரம்பிக்கப்போகிறபடியால் இனிச்செய்யவேண் டிய கடத்தல் முடித்தலாகிய கார்யங்களையே இராமன் யோஜிக்கிறான். ச்லோகத்தில் பதிம் என்ற பதத்தின் பொருள் இதுவே யாம். ஆகவே இங்கு முடித்தல் கடத்தல் என்று விகல்பம்போல் தோன்ற எழுதுகிறாரே தவிர உபாயங்களிலேயே விகல்பம் என்பதற்குக் குறையில்லை.

இங்கு திருவிருத்த வ்யாக்யானபங்க்தி விசாரவிஷயமாகச்சிறிது விண்ணப்பம் செய்துகொள்ள நேர்கிறது. ஸாகரமரணவாதிகளில் சிலர் அஸ்யமே சுலோக வட்டஸ்தம் என்கிறார்கள். இராமமரண

வாதி வாவஜாநய சுலோக வட்டஸ்தம் என்று சொல்லுகிறார். இதுசரியல்ல. பொதுவாக இராமஸாமர விஷயமான கதையின் ஶயிஷ்யே என்ற சுலோகவட்டமும் ஸாமரஸ்யம் ஜோஷயிஷ்யதி என்ற சுலோகத்தின் வட்டமும் என்று சொல்லவேண்டியிருக்கிறது. எங்ஙனேயெனில் "சரணமென்றால்" என்பது ஶயிஷ்யே சுலோகார்த்தம். "மரணமானால்" என்பது ஜோஷயிஷ்யதி என்ற சுலோகார்த்தம் என்று தெளிவாகத்தெரிகிறது. இங்கு ஆராய்ச்சியாளர் மரணமானால் என்பதற்கு பராங்குச நாயகி மரணமானால் என்கிறார். இவர் கதாநாயகனான இராமனை மரணமாக்கியதுபோல் கதாநாயகியாகிய ஆழ்வாரையும் கொல்லுகிறார்.

விமர்சம் 6.

மே தரணம்வா ஸாமரஸ்ய மரணம்வா என்பதில் இரண்டு ஷஷ்டிகளில் கர்த்தரிகர்மணி அர்த்தங்கள் கலந்து வருவது சாஸ்திரஸம்மதமில்லை என்பது:—

பரிசிஷ்டத்தில் 136-வது பாராவில் "இந்த தூஷணம், மே மரணம்வா ஸாமரஸ்யதரணம்வா என்கிற யோஜனையில் நேராது ஏன் ? மே என்றதின் ஸ்தானத்தில் ஸாமரஸ்ய என்பதை நாம் கொள்ளுகின்றிலோம். மத்கர்த்ருகத்வாம்ஸம் இரண்டிடத்திலும் எமக்கு உண்டு. மத்கர்த்ருகம் ஸாமரஸ்யகர்மகம் தரணம்வா, மத்கர்த்ருகம் மரணம்வா பவது என்றே நமக்குப்போதமாகையால் நம் மீதும் அந்த தூஷணம் ஏறுவதற்கு வழியேயில்லை" என்கிறார். இதிலும் இவர் சொல்லும் தூஷணம் இவர்க்கும் ஏறும் என்று நிரூபிப்போம். எங்ஙனேயெனில் மத்கர்த்ருகம் மரணம் என்கிற இவருடைய யோஜனையில் மரணம்மாரணமாய் விடுவதால் மாரணத்திற்கு கர்மம் இராமனேயாதலால் மத்கர்த்ருகமத்கர்மகமரணம் என்று தெளிவாக அர்த்தமாகிறபடியால்இந்ததூஷணம்மேமரணம் என்பதில் மே என்னும் ஒரு ஷஷ்டியிலேயே உளது. அல்லது மேமரணம்ஸாமரஸ்யதரணம் என்பதிலும்மேபதத்திற்கு கர்த்தரி அர்த்தம் ஸாமரஸ்ய என்பதற்கு கர்மணி அர்த்தம் தானே ஆகின்றன. ஆகையால் இந்த

தூஷணம் இவர்க்கும் நேருகிறது. உக்தத்ரஷ்ட்ருகஸ்வாம்ஶத்தை இரண்டிடத்திலும் கூட்டி அந்வயிப்பது எப்படி யுக்திக்குப்பொருந்துமோ அப்படியே ஸாமாந்யகர்த்ருகஸ்வாம்ஶத்தை இரண்டிடத்திலும் கூட்டிக்கொள்வது பொருந்தும். உக்தத்ரஷ்ட்ருகஸாமாந்யகர்த்ருகதாரணம்வா உக்தத்ரஷ்ட்ருகஸாமாந்யகர்த்ருககாரணம்வா அதாவது மேஸாமாந்யஸ்யதாரணம்வா மேஸாமாந்யஸ்யகாரணம்வா என்கிற நமது யோஜனையில் இந்த தூஷணம் வருவதற்கு ப்ரஸக்தியேயில்லை. ஆனால் 137-வது பாராவில் "முன்பு சொன்ன தூஷணத்திற்கு இடமில்லையென்பதை நாமே வெளியிட்டு ஆனால் ஏற்கனவே நாம் கொடுத்திருக்கிற பிரதான தூஷணம் அதாவது விகல்பகோடி வைஷம்யம் சித்திக்கமாட்டாது" என்கிறார். இந்தக்கொள்கையை 5-வது வாதவிமர்சனத்தில் பரக்கக்கண்டித்து இவையிரண்டும் விகல்பமாகும் என்று நிரூபித்திருக்கிறோம்.

மேலும் 138-வதுபாராவில் "ஒரு வாக்யத்தில் கர்த்ருவாசகபதமும் கர்மவாசகபதமும் நிவேசிக்கப்பிராப்தமானால் கர்தரி த்ருதியை தான் வரும், ஷஷ்டிவராது. கர்மணி மாத்திரமே வரும்" என்கிறார். இப்படியே வைத்துக்கொள்வோம். இதுவும் நமக்குப்பிராப்தமே. மே என்பதற்கு மயா என்று விஹக்தி விபரிணாமத்தால் அர்த்தங்கொண்டு விட்டால் சரிப்பட்டுபோகிறது. பத்ய க்ரமத்தில் (செய்யுள் வழக்கில்) வேற்றுமை மயக்கம் ஸஹஜம் தானே. இந்த விதி வசன நடையைத்தான் பாதிக்குமே ஒழிய செய்யுள் நடையையும் பாதிக்குமோ. இலக்கியம் கண்டதற்குத்தானே இலக்கணம். இந்த விதிப்படியே அர்த்தஞ்செய்து விட்டால் இந்த தூஷணம் பிராப்தமில்லையே.

இன்னமும் 143-வது பாராவில் "மே காரணம்வா மே ஸாமாந்யஸ்ய தாரணம்வா என்றநம்யோஜனையில் மே ஸாமாந்யஸ்ய தாரணம் என்பதில் இந்த தூஷணம் எங்கு போயிற்று என்ற வினவுக்கு விடையாக மே என்கிற ஷஷ்ட்யந்தபதம் எமக்கு ஒரு வாக்யத்தில் ஸ்வாரஸிகமாக அந்வயித்து விடுகிறது. கர்த்ருஷஷ்டீஸம்மதமாகிறது. இனி அடுத்தவாக்யத்தில் கர்த்ருவசநாநுஷங்கம் செய்துகொள்ள வேண்டிய தத்தனையிறே. மயா என்று விஹக்தி விபரிணாமேந அநுஷங்கம் செய்துக் கொள்வதில் யாதொரு

ஸ்ப்ராயமுமில்லையன்றோ, வாதிகளுக்கு இங்ஙனமில்லையே” என்கிறார். ஆனால் இவர் மே என்ற ஷஷ்டியையே அநுஷங்கம் செய்து கொள்ளுகிறாரே ஒழிய, மயா என்று மாற்றிக்கொள்ளவில்லையே. மயா என்று அர்த்தந்தானே செய்கிறார். மேதரணம்வா மேஸாமரஸ்ய மாரணம்வா என்ற நமது யோஜனையிலும் மேதரணம் என்பதில் உபயப்ராப்தியேயில்லாமையால் கர்த்ருகர்மணோ:க்ருதி என்கிற ஸூத்திரத்தினால் கர்த்தரி ஷஷ்டி நமக்கும் ஸங்கதமாகிறது. இனி அடுத்த வாக்யத்தில் நாம் மே என்று கர்த்ருபதானுஷங்கம் மயா என்கிற அர்த்தத்தில் செய்துகொள்ளுகிறோம். ஆகவே நமக்கும் இந்த தூஷணம் ப்ராப்தமாக வழியேயில்லை.

மே மரணம்வா மே ஸாமரஸ்யதரணம்வா என்கிற இவருடைய யோஜனா வாக்யத்தில் இவர் உட்புகுந்து ஆராய்ந்து பார்க்காத ஓர் குற்றம் உளது என்பதையும் நிரூபிப்போம். மேஸாமரஸ்ய தரணம் என்பதில் இவர் பிறர்மேல் ஏறிட்டுச் சொல்லும் தூஷணம் இவர்க்கும் உண்டு. இவர் இதை மயாஎன்று பரிஹரித்துக் காட்டினால் பிரதிவாதிகளும் அங்ஙனமேசெய்து பரிஹரித்துக் காட்டுவார்கள். மேமரணம் என்பதில் கர்த்தரிஷஷ்டி என்று மத்கர்த்ருகமரணம் என்றால் என்னால் செய்யப்படும் கொலை என்று சொல்லுகிறாரல்லவா. இதற்குக் கர்த்தா அஹம் என்று தேறி விடுகிறது. கர்மம் எது ? கிංவாமரணம் ? என்ற ஆகாங்க்ஷைக்கு எதைச்சொல்லுகிறார். சாகரத்தைச் சொல்லவில்லையே. மாம் என்னை அதாவது மச்சரீரம் என்னுடலை என்றுதானே சொல்லுகிறார். மச்சரீரம் என்பது மே என்பதில்தானே தொக்கி நிற்கிறது. ஆயின் மேஎன்ற ஷஷ்டிக்கு விவரணம் செய்தால் மத்கர்த்ருக மச்சரீர கர்மகமரணம் என்றல்லவோ ஆகிறது. இரண்டு மே ஷஷ்டிகளுக்கு கர்த்தரி கர்மணி அர்த்தங்கள் கலந்து வரக்கூடாது என்கிற தூஷணம் இங்கு மே என்கிற ஒரு ஷஷ்டியிலேயே வந்து விடுகிறதே. இவரது வாதங்கள் இவர்க்கேவிரோதமாய் முடிகின்றனவே !

விமர்சம் 7

இந்த வட்டத்தில் பூர்வர்களால் பிரயோகிக்கப்பட்ட ஶரணாகதி, ப்ரதிக்ஞா, ப்ராயோபவேஶம் என்கிற பதங்களின் அர்த்தங்களில் மருண்டு அவைகளை ஸமர்த்திக்கப்புகுதல்:—

இங்கு இராமன் செய்யும் வருணவிஷயகஶரணாகதி மத்யந்தரமில்லாத அல்லது மத்யந்தர நினைவுமில்லாததன்று. பூர்ணபடைப்பலத்தோடு "ஸர்வதா ஸுஸமர்த்தோஸ்மி" என்பவன் செய்யும் ஶரணம். இதைப்பற்றி முன்னமே பரக்க எழுதப்பட்டிருக்கிறது. இது வ்யாஜமாத்ரமேயன்றி உண்மையான ஶரணாகதியல்ல. இராமாயண கதாப்பிரசங்கங்களிலும் விபீஷண சரணாகதி என்று தவிர இராம சரணாகதி என்று தலையங்கமிட்டு உபந்யாசம் செய்கிறார்களா? இராம சரணாகதி என்று யாராவது சொல்வதை எங்காவது கேட்கிறோமோ? உபாஸனை என்றுதானேவால்மீகி உரைக்கின்றார்.

இந்த உபாஸனை ஒரு காம்யகர்ம நிஷ்டன் ஒரு பிரயோஜனத்தைக்கருதிச் செய்யும் கர்மாநுஷ்டானம். இது ஸாத்யமான ஸேதுபந்தனத்தைக் குறித்துச் செய்யும் ஸாதநாநுஷ்டானம். அஞ்ஜலி, அபிஶயநம், ப்ரணாமம் முதலியவைகள் இதன் அங்கங்கள். இவை பஹிரங்க நிருபக தர்மங்கள். அந்தரங்க நிருபகம் த்யானம். இதில் ஆகிஞ்சின்ய அநந்யகதித்வ சிந்தனை நியமமன்று. ஆனால் ப்ரபத்தி அனுஷ்டானத்திலோ அஞ்ஜலி, ப்ரணாமம், முதலியவையும் பஹிரங்க நிருபக வியாபாரங்கள். அந்தரங்க நிருபக தர்மங்கள் ஆகிஞ்சின்ய அநந்யகதித்வங்கள். ப்ரபத்தியில் இவையின்றி பூர்த்தியில்லை. த்ரௌபதி இரு கையையும் விட்டபோது தான் பலித்ததிறே. உபாஸனையிலும் பஹிரங்க நிருபக வ்யாபாரங்களாகிய அஞ்சலி, ப்ரணாமங்கள் ஒன்றாயிருத்தலால், உபாஸனையின் பிரதமாங்கமான ஶரணவரணத்தைக் கொண்டே ஶரணாகதி, ப்ரபத்தி என்று பூர்வர்கள் வசனித்துப் போந்தார்கள். இதுகாரணம் பற்றியே ஸாதநாநுஷ்டானமாகிய உபாஸனை ஸித்தோபாய ஸ்வீகாரமாகிய ப்ரபத்தியாகாது. உலகத்தில் ஒரு வஸ்துவையோ ஒரு விஷயத்தையோ, அவற்றின் பஹிரங்க அடையாளங்களைக் கொண்டோ பஹிரங்க வ்யாபாரங்களைக் கொண்டோ பெயரிட்டு வழங்

கூதல் காண்கையாலே (அதாவது சந்நியாசி தபசி என்று அழைக் கப்பட்டவர்களிடம் சந்நியாச தர்மமும், தபோநிஷ்டையும் உண் மையில் இல்லாவிட்டாலும் அவர்கள் அப்பெயர்களாலேயே அழைக் கப்படுவது போல) இவ்வபிஶயநத்தையும் சரணுகதி யெனத் தட்டில்லே. ஒரு உருவப்படத்தை அவ்வுருவமுள்ள மனிதனென் றும், கிருஷ்ண விக்ரகத்தில் கிருஷ்ணபகவான் என்றும் விவகரிக்க காண்கையாலும், வால்மீகி பகவான், பராசரபகவான் என்பவற் றில் குணலேசயோகத்தாலேயே பகவத் சப்தப்ரயோகம்காண்கை யாலும் இதையும் சரணுகதி, பிரபத்தி என்று பெரியோர்கள் ஔபசாரிகமாகப் பேசிப் போந்தார்கள். மேலும் பூர்வர்கள் இவ் வருணேபாஸனையையும் சுக்ரீவ ஸக்யத்தையும், சரணுகதியென் பதற்குக் காரணம், இராமன் தன் மேன்மையையும் இவர்கள் இழி வையும் பாராமல் இவர்கள் சகாயத்தை இரந்து நிற்பதால் இதுவே போதும் அவன் நிலைமைக்கு என்று தோற்ற சரணடைந்தான் என்ற பதப்ரயோகமிட்டு வழங்கினர்கள் என்றும் சொல்லலாம்.

ஆகவே உண்மையில் இவ்வுபாஸனை சரணுகதி யாகாதபோது உபாஸனைக்கு முன் தண்டோபாய நினைவால் ஆர்ஜவத்துக்கு என்ன குறை வந்துவிடும்?

இங்கு "பூர்வநிர்வாஹபரித்ராணம்" இவ்வபிஶயனத்திற்குத் திருக்கண்ணமங்கையாண்டான் பத்தராவி திருவாசலிலே பட்டினி விட்டுக்கிடந்த கிடைக்கையை உபமானமாகக் கூறுகிறது. இராம னது அபிஶயனத்திற்கும் திருக்கண்ணமங்கை யாண்டான் கிடைக் குக்கும் ஒருவித ஸாத்ருச்யமுமில்லை. எங்ஙனே யெனில் இராமன் ஆகிஞ்சன்ய அநந்யகதித்வம் சிறிதும் இல்லாத அநதிகாரி. ஆண் டான் மேற்சொன்னவையிரண்டும் உள்ளபூர்ண அதிகாரி. இராமன் ரக்ஷகத்வயோக்யதையில்லாத அகங்காரியான தேவசாமான்யனிடம் சரணடைந்தான். ஆண்டான் ஜகத்காரணவஸ்துவீயும் ரக்ஷகத்வ பூர்த்தியுமுள்ளவனுமான ஸர்வேச்வரனிடம் சரணடைந்தார். இராமனுக்கு ஸேதுபந்தனம் பிரயோஜனம். ஆண்டானுக்கு பகவத் ப்ராப்தி பிரயோஜனம். இராமன்செய்தது உபாஸநாநுஷ்டானம். ஆண்டான்செய்தது ப்ரபத்தியனுஷ்டானம். ஆண்டான் ப்ரபத்தி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்திரூபமாகவே யிருப்பது. இராமன் உபாஸனை யில் எப்போது வருணன் பிரசன்னமாவான் என்கிற சிந்தனையோடு

காத்திருத்தலாகிய ப்ரவ்ருத்தியே முக்கியாம்சம். ஆண்டான் ஸ்வ ரக்ஷணஹேதுவான ஸ்வவ்யாபாரங்களை விட்டார். இராமன் ஸ்வ ரக்ஷணஹேதுவான ஸேதுபந்தனத்துக்காக அயிஶயநத்தில் இழிந் தான். இராமனுக்கு உபாயாந்தர பரிக்ருஹ சிந்தனையுண்டு. ஆண் டானுக்கு எம்பெருமானே உபாயோபேயம் என்கிற ததேகோபாய த்வ சிந்தனை தவிரவேறில்லை. ஆண்டான் ஸ்வப்ரவ்ருத்திகளை பக வததீனமாக ஶாஸ்வதமாகவே விட்டார். இராமன்மூன்று நாட்களே கிடக்கையிருந்து வருணன் பிரசன்னமாகாதபோது சீறிச்சிவந்து ஸாமரசோஷணத்தில் ப்ரவர்த்தித்தான். ஆண்டான் ப்ரபத்தியில் பலஸாயநங்களுக்குப்பேதமில்லை, இராமன் அதிசயனத்தில் நன்ருக வே பேதமுண்டு. ஆண்டான் ப்ரபத்திநிஷ்டன். இராமன் உபாஸனு நிஷ்டன். ஆண்டான் நிஷ்காம்யகர்மி. இங்கு இராமன் காம்யகர்மி. ஆண்டான்கிடைக்கை நிவ்ருத்தி நிருபகவ்யாபாரம். இராமன் கிடைக் கை ப்ரவ்ருத்தி நிருபக வ்யாபாரம். ஆண்டான் அதிசயனம் செயல் தீர்ந்தார் கிடக்கை. இராமன் அதிசயனம்செயல் செய்வான் படுக்கை. ஆண்டான் ஒருநாயின்பால் அதன் எஜமானன் வைத்த ப்ரேமாதி சயத்தைக்கண்டு ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயரூபமான அஜ்ஞானம் நசித்து, பகவதேகரக்ஷகத்வஜ்ஞானம் பிறந்து, அத்யவஸாயம் முதிர் ந்து ஸ்வயம்ப்ரேரிதனுய் ஸ்வவ்யாபாரங்களைவிட்டார். இராமனே தன் அயிசயனம் வீணேயாம் என்று தெரிந்திருந்தும், விபீஷணமந் த்ரபஹுமானுர்த்தம் விபீஷணப்ரேரிதனுய் செய்தான். ஆண்டான் தன்னை நாயோடு சமானமாக எண்ணிக்கொண்டு ஸ்வவ்யாபாரங்களை விட்டுக்கிடைக்கை கிடந்தார். இராமன் "ஸாஸமர்த்தோஸ்மி" என் னும் நினைவோடே கூடவே கிடைக்கைகிடந்தான்.

இங்ஙனம் ஒரு அம்சத்திலும் ஒற்றுமையில்லாதிருக்கும் போது இவ்வயிசயனங்கள் இரண்டையும் ஒன்றுக்கொன்று உப மானமாகக்கூறுவது எங்ஙனே பொருந்தும். இதை விவேகிகள் ஆலோசித்துப்பார்க்கவும்.

இன்னமும் "பூர்வநிர்வாஹபரித்ராணம்" "ப்ரபத்திக்கு சுத்தி அசுத்திகளிரண்டும் தேடவேண்டா - வேல்வெட்டிப்பிள்ளைக்குப் பிள்ளை அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது" என்கிற ஸ்ரீவசனபூஷண வாக்யங்களை அனுவதித்து இந்த வட்டத்தில் இராமசரணுகதியை த்ருஷ்டாந்தமாக எடுத்திருக்கையாலே சரணு

கதி யாகத்தட்டில்லை என்கிறது. இங்கு இராமன் செய்த சரணவரணம் பிரபத்தியென்று நிரூபிக்கப்புகுந்த வட்டமென்று "பரித்ராணம்" பிரமிக்கிறது. இராமன் செய்தது ப்ரபத்தியா இல்லையா என்கிற சங்கை இங்கு ப்ரஸக்த விஷயமன்று, கர்மானுஷ்டானத்துக்கு நியமங்கள் அவச்யம் வேண்டும், ப்ரபத்திக்கு நியமங்கள் தேவையில்லை என்கிற ப்ரஸ்தாவமே இங்குள்ளவிஷயம். "ப்ரபத்திக்கு சுத்தி அசுத்திகள் இரண்டும் தேடவேண்டா, இருந்தபடியே அதிகாரியாமித்தனை" என்று, அதாவது, ப்ரபத்திக்கு சுத்திதான் நியமம் என்று அசுத்தன் சுத்தியைச்சம்பாதிக்கவேண்டா, ஆனால் அசுத்தி தான்நியமமென்று சுத்தன் அசுத்தியைச் சம்பாதிக்கவேண்டா, யோக்யன் அயோக்யதையைத்தேடவேண்டா, அயோக்யன் யோக்யதையைத்தேடவேண்டா, சுத்தனுகவோ அசுத்தனுகவோ ப்ரபத்தி பண்ண அமையும் என்பது. ஆனால் இராமன் வருணனைச்சரண் புகும்போது நியமங்களோடு சரண்செய்தானே, ஆதலால், சுத்திநியமங்கள் தேவை தானே" என்று சங்கித்து வேல்வெட்டிப்பிள்ளை கேட்கவும் நம்பிள்ளை "இராமன் எப்போதும் ஆசாரசீலனும் எது செய்தாலும் நியமங்களோடே செய்பவனுதலால் வருணனைச்சரணடையும்போதும்வழக்கம்போல் செய்தானே யொழிய சுத்தியைச் சம்பாதித்துக்கொண்டு செய்யவில்லை" என்றார். அடுத்தபடி விபீஷணன் அசுத்தனுக விருந்த நிலைமையிலேயே இராமனைச்சரணடைந்ததை, அசுத்தன் சுத்தனுக்கிக்கொண்டு சரண் செய்யவேண்டா என்பதைக்காட்டுவதற்காக திருஷ்டாந்திக்கிறார். இங்கு நம்பிள்ளைக்கும் வேல் வெட்டிப்பிள்ளைக்கும் இராமனது சரணுகதி போலிச் சரணுகதியென்றே தெரியும். இருந்தாலும் இராமன் நியமங்களோடு பண்ணினமையால் உண்மைச்சரணுகதிக்கும் நியமங்கள் தேவையோ என்கிற சங்கையிலேயே கேட்டாரே ஒழிய வேறில்லை. சரணுகதியா இல்லையா என்கிற சங்கையில் கேட்கவில்லை. ஆகையால் நியமங்களோடு செய்தமையால் உபாஸனையென்றே தேறிவிடுகிறது.

ஆகவே இங்கு எடுத்துப்பேசப்பட்ட ஸ்ரீவசனபூஷண வாக்யங்கள் பிரபத்திக்கு நியமங்கள் தேவையில்லை என்கிற அம்சத்தைமாத்திரம் பேசவந்ததே தவிர வேறில்லை. இராமன்செய்த அஞ்சலிப்ரணமங்கள்ஆகியஉபாஸனங்கங்களைக்கொண்டுஶரணுகதிஎன்று உபசாரமாக வைத்துக்கொண்டு பேசினதத்தனையே ஒழிய ப்ரபத்தி என்று நிரூபிக்கவரவில்லை. மேலும் சிலவாக்கியங்களுக்கு முன் கர்மத்துக்கு

நியமங்கள் வேண்டுமென்று சொல்லியிருக்கையாலேயும் இராமன் நியமங்களோடு செய்தமையாலும் கர்மானுஷ்டானம் தான் என்று சொல்லவேண்டும். உபாஸனையின்றி வெறும் ஶரணவரணமாக மாத்திரம் இருந்தால் இராமன் நியமங்களோடு செய்திருக்கமாட்டான் என்றும் சொல்லலாம். ஏனெனில் சுக்ரீவனிடம் சரணடையும்போது இராமன் மேற்கண்ட நியமங்ளோடு சரணடைந்ததாக ரிஷி சொல்லவில்லையே. சுக்ரீவனும் இராமனும் ஒருவர்கையை ஒருவர் பிடித்துக்கொண்டு அக்னியைவலம்வந்து ஸக்யம் செய்து கொண்டார்கள் என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. இருவரும் தாங்கள் இழந்த மனைவிகளை மீட்பதற்குச் சகாயமாயிருப்பதாக "ஏகம் துக்கம் ஸுகம்சநௌ" என்று ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இப்படி ஒருவர்க்கொருவர் சகாயஞ்செய்ய ஒப்புக் கொள்ளும்போது ஆகிஞ்சன்யம் எப்படி சித்திக்கும். இங்குப் போலவே வருணனுக்கு முதலில் சகாயம்செய்து, பிறகே அவன் சகாயத்தை தான் வேண்டிநின்றது. இங்கு இராமன் சுக்ரீவனது தோழமையை விரும்பி நின்றானே யொழிய "புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்று சரணடைந்தானோ? இல்லையே. ஆயினும் இலக்ஷ்மணன் அனுமானிடம் "ஶரண்யஸ்ஸர்வ ஹூதாநா" "தஸ்ய புத்ரஶ்ஶரண்யஶ்ச ஸுக்ரீவம் ஶரணம்கத:" ஸர்வலோகஸ்ய யர்மாத்மா ஶரண்யஶ்ஶரணம்புரா | குருர்மே ராகவஸ்ஸோயம் ஸுக்ரீவம் ஶரணம்கத:" "ஸுக்ரீவம்வாநரேந்த்ரந்து ராமஶ்ஶரணமாகத:" என்று பல தடவை ஶரணபதப் பிரயோகமிட்டுச்சொன்னதாக வால்மீகி எழுதுகிறார். இங்கு ஶரணம் என்கிறபதம் ஸக்யம் என்ற பொருளில் உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. இராமன் பிறர் சகாயத்தை வேண்டிநிற்குமிடங்களிலெல்லாம் ஶரணமடைந்தான் என்று பதப்பிரயோகம் காண்கையாலே உண்மையான ஶரணாகதி, ப்ரபத்தி என்று எண்ணிக்கொண்டு ஸாமரஶோஷண நினைவு ஆர்ஜவஹானியை விளைவிக்குமாதலால் ஸ்வமரண நினைவே பொருந்தும் என்று நிர்வாகம் கொள்வது அழகியதாகாது.

ப்ரதிக்ஞா:—இந்த "அத்யமே" சுலோகத்தை இராமமரணவாதிகளும் ஸாமரமரணவாதிகளிற் சிலரும் பிரதிஞ்ஞையென்றே பிரமித்து பலபல விரஸவாதங்கள் புரிகின்றனர். ஸாமரமரணவாதி, இராமனது ஸ்வமரணப்ரதிஞ்ஞை என்று கொண்டால் "ராமோத்

விர்நாபிஹாஷதே" என்று இராமன் தன்மரணத்தைச்செய்துகொண்டிருக்கவேண்டுமே, பிரதிஞ்ஞை தவறலாமோ ? என்கிருர். இராம மரணவாதி,ஸாமரமாணப்ரதிஞ்ஞையாயின் அங்ஙனேகடலைச்சோஷணம் செய்து தலைக்கட்டவேண்டாமா ? பிரதிஞ்ஞைதவறலாமோ ? என்கிருர். பிரதிஞ்ஞாவிஷயமாக சோகசந்தர்ப்பங்களில் பேசும் ஆற்ருமைப்பேச்செல்லாம் திருஷ்டாந்தமாக கையாளப்படுகின்றன. ஒருவன் தன் உத்தமபத்னிவியோகத்திலாவது, புத்ர வியோகத்திலாவது"ஐயோ, இனிநான் எங்ஙனம்பிழைப்பேன்! இறப்பதே சரி!உயிர் வாழ்வின் உலகம் ஏசுமே! ஹா ! ஹா !! இது சத்யம் ! இனி நான் உயிர் வாழமாட்டேன், வாழவே மாட்டேன்" என்று ஓலமிடுகிருன். ஆனல், உயிர் விடுவதில்லை. சில நாட்கள் சென்று ஒரு நண்பன் இவனிடம் வந்து "ஓய் நண்பரே நீர் அந்நாள் ஜீவித்திருக்கமாட்டேன் என்று பிரதிஞ்ஞை செய்தீரே ? ஏன் அப்படிச்செய்யவில்லை ? சொல்வதொன்று செய்வதொன்ரு ? ஒரு புருஷன் தான் செய்த பிரதிஞ்ஞையைத்தவருலாமோ ? என்று பலவாறு பேசுகிருன். இங்ஙனம் பேசும் நண்பனைப்பற்றிப் பக்கத்தில் இருப்பவர்களும் என்ன நினைத்திருப்பார்கள். துக்கித்தவன் தான் என்ன சொல்வான். "ஓய் நண்பரே! உமக்கு மூளை மிகவும் குறுகியது, ஏவம் விததுக்கம் உமக்கும் சம்பவித்தால் தான் தெரியும்" என்று சொல்லுகிருன். ஆதலின் துக்கமாற்ருமல் சொல்லும் பிரதிஞ்ஞைபோன்ற வார்த்தைகளெல்லாவற்றையும் பிரதிஞ்ஞையென்று மருண்டு சமர்த்திப்பதில்யாது பயன் ? "இதிராமோ மதிம்க்ருத்வா" என்பதில் பிரதிஞ்ஞை வியாஜமாத்திரமாகக்கூட இல்லையே. பிரதிஞ்ஞையென்று மருண்டு வீண் விவாதம்புரிவானேன். பிரதிஞ்ஞாலக்ஷணம் பூர்ணமாக விபீஷண விஷயத்தில் இராமன்செய்த பிரதிஞ்ஞையில் காட்டப்பட்டுள்ளது. பிரதிஞ்ஞை மானசம், வாசிகம், காயிகம் என்று மூன்றுவிதம். இம்மூன்று விதங்களும் விபீஷணவிஷய பிரதிஞ்ஞையில் உள்ளன. ஒருவன் தன் மனசில் செய்யும் யோஜனை முடிவை யோஜனைசெய்பவன் தான் அறிவானே ஒழிய, அது வாசிகமாக வந்தாலல்லது பிரதிஞ்ஞையாமோ ? அந்தயோஜனை முடிவின்படி கார்யம் நிகழ்த்த அவனே கட்டுப்பட்டவன். அதைப்பற்றிப்பிறர் அறியாராதலால் பிரதிஞ்ஞாபங்கம் வந்து விட்டது என்று பிறர் ஏசவழியில்லை. ஆயின் உத்தம புருஷன் தன்மனமுடிவை மாற்றிக்கொள்வானே எனில் மாற்றவும்

கூடும். அவன் சபதமிட்டுத்தீர்மானம் செய்துக்கொள்ளாவிட்டால் அந்த யோஜனையைப் பிற்காலசம்பவங்களுக்குத்தக்கபடி மாற்றிக் கொள்வதில் யாதும் குற்றமில்லை. ஒருவன் "என் அந்தராத்மா சாக்ஷியாக என் நண்பனுக்கு உபகாரம் செய்வேன்" என்று யோசிக்கிறுன். அங்ஙனம் அவன் உபகாரம் செய்யத்தவறுவானுயின் அவன் மனச்சாக்ஷி அவனைப்புண்படுத்தும். இராமன் அவ்வாறு "ஸத்யமேதத்" என்ருவது மனசில் முடிவு கட்டுவதாகவால்மீகி சொல்லுகிருரோ ? ஆனல் நம்பிள்ளை இதை ப்ரதிஜ்ஞை என்று பேசுவதாக ஈட்டில் எழுதப்பட்டிருக்கிறதால் பின்னுள்ளாரும் அப்படியே விவகரித்து வருகிருர்கள். உண்மையில் இது பிரதிஜ்ஞைதானே என்று விசாரிக்கவேண்டியது அவசியமாய்விட்டது.

பிரதிஜ்ஞை என்ருல் ஒருவன்தான்செய்ய உத்தேசித்திருக்கும் கார்யத்தை "சத்யமாக இன்னபடி செய்தேதீருவேன்" என்று சபதமிட்டுப்பிரரறியச்சொல்லுதல். இதில் பிரரறியச்சொல்லுதல் தான் முக்கியாம்சம்."ராஜாநம் த்வாம் க்ரிஷ்யாமி ஸத்யமேதத்ப்ரவீமிதே, அயோய்யாம் நப்ரவேக்ஷ்யாமி...ஸபே" என்ற விபீஷணவிஷய ப்ரதிஜ்ஞையிலும்,"ஸாகரம் ஶோஷயிஷ்யாமி, அத்யத்வாம்ஶோஷயிஷ்யாமி" என்ற ஸாகரவிஷயவாக்யங்களிலும் பிரதிஜ்ஞா லக்ஷணம் பூர்ணமாக இருக்கிறது.

இந்த அத்யமே சுலோகம் விகல்ப சரீரவாக்யமாயிருக்கிறது. இது தாணமாவது மரணமாவது ஆகட்டும் என்று இரண்டுபடப் பேசுகிறது. ப்ரதிஜ்ஞையானுல் "இதைத்தான் இன்னபடி செய்வேன்" என்று ஒன்றேபடப்பேசவேண்டும். தரணமாவது மரணமாவதுஎன்ருல் தரணப்ரதிஜ்ஞையா? மரணப்ரதிஜ்ஞையா? என்ற சந்தேகம் ஒழியவே யொழியாது. தரணபாவத்தில் மரணம் என்ருல் நிபந்தன சகிதப்ரதிஜ்ஞை என்று ஆகும். அப்போது தரணபாவத்திற்கு முன் பிரதிஜ்ஞைக்குப் பிரஸக்தியே ஏற்படாது. ப்ரதிஜ்ஞை நிறைவேற ப்ராப்தமேயில்லாமற்போனுலும் போகும். ஆகையால் அனுவசியமே யாகும்.

மேலும் இந்த வாக்யத்தில் "ஹவது" அல்லது "ஹவேத்" என்ற விதிலோட்விதிலிங் கிரியாபதங்களை வருவித்துக்கொள்கிறேம். இவை அகர்மகக்ரியைகள். இவை தவிர வேறு வினைமுற்றுக்கள் "மே" என்பதோடு பொருந்தா. "கரிஷ்யாமி" என்ற ப்ரதிஜ்ஞா

ஸமர்ப்பகபதம் பொருந்தாது. இந்த லோட்டும் லிங்கும், இதுவாவது அதுவாவது ஆகட்டும் என்ற விகல்பவாக்யத்துக்கு வினைமுற்றுயின் கோடித்வயங்களில் ஒன்றிலும் உறுதியின்றி உபேக்ஷையையும், செய்பவனின் செயலின்மையையும் காட்டும். உத்தமபுருஷைகவசன பவிஷ்யத்க்ரியா விசேஷவாசி சப்தமான "கரிஷ்யாமி" என்னும் வினைமுற்றில் உள்ள க்ரியாவிஷயகமனோதார்ட்யம்போல் 'பவதா' என்னும் வினைமுற்றில் இருக்கிறது என்று சொல்லவே முடியாது.

ஆனால் "அராவணம் அராமம்வா ஜகத்த்ரக்ஷ்யத வாநரா:" என்னும் வாக்யம் விகல்பசரீரமுள்ளதாயினும் ப்ரதிஞ்ஞையாகக்கொள்ளப்படுகிறதே, அது எங்ஙனம் பொருந்தும் என வினவெழுந்தால், உத்தரவாக்யத்திலேயே "ஸத்யம் ப்ரதிஶ்ருணோமி வ:" என்னும் ப்ரதிஞ்ஞாவாசகபதங்கள் இருப்பதால் இது ப்ரதிஞ்ஞையேயாகும். இதைப்போல "அத்யமே மரணம்வாபி தரணம்ஸாகரஸ்ய வா। ஸத்யம் ப்ரவிமிசேத்யுக்த்வா மஹாபாஹுர்மஹோததிம்" என்று சுலோகம் அமைக்கப்பட்டிருந்தால் தான் பிரதிஞ்ஞையாகும்.

இங்கு "அராவணம் அராமம்வா" என்பதற்கு "பரித்ராணம்" "இராவணனைக் கொல்லாவிட்டால் இராமனென்ற பெயர் எனக்கில்லை" என்று இராமன் பிரதிஞ்ஞைசெய்ததாகப்பொருள் கூறுகிறது. இதன்காரணம் "நஞ்ஞுக்கு" விசிஷ்டபாவம் அழிகை தான் அர்த்தம் என்றும் யோகத்தால் வந்த ரமயித்ருத்வசகித ரூடியால் வந்த ராமநாமவிசிஷ்டபாவமே அழியும் என்று கூறுகிறது. இங்கு விசிஷ்டபாவம் ராமத்வமுமன்று, ராவணத்வமுமன்று. இராமராவணர்களுக்குள்ள சத்ருத்வந்தான் விசிஷ்டபாவம். ஒருவரையொருவர் கொல்லக்கருதியே யுத்தம் புரிகின்றனர். சத்ருத்வவிசிஷ்டவஸ்துவையே அழிப்பதில் நோக்கு. ஒருவனிடம் தோற்றுப்போய் சரணடைந்து உயிர் வாழ்ந்திருக்கும்போதுதான் விசிஷ்டபாவம் அழியும். உயிர் துறப்பின் விசிஷ்டவஸ்துவே (விசேஷ்யமே) அழியும். ஆதலால் "இராவணனுவது இராமனுவது கொல்லப்படுவான்" என்பதே கருத்தேயொழிய "இராமன் என்னும் பெயர் எனக்கில்லை" என்னும்பொருள் அழகியதாகாது.

"தபஸாஸேதுபந்தேந" என்ற சுலோககட்டத்தில் இராமன் இராஜநீதிக்கிணங்கத்தன் வலியும் மாற்முன் வலியும் ஆராய்ந்து

எந்தஉபாயத்தாலாவதுகடலைக்கடக்கமுடியும்"ஸ ஸமர்த்தோஸ்மி" என்று தன் வலியே சிறந்தது என மனத்தேற்ற மடைகிருன். "அத்யமே" சுலோக வட்டத்தில் தான் செய்யுப்புகும் ஸரணம்பலியாவிட்டால் உண்டோபாயமாகிய ஸாகரசோஷணத்தைச்செய்வது என்று மன உறுதியடைகிருன். இங்கு உபாய நிர்ணயமே உள்ளது. ரிஷி "மதிம் க்ருத்வா" என்று தான் சொல்லுகிருரே ஒழிய "ப்ரதிஸ்ருத்ய" என்று சொல்லவில்லையே. ஆனுல் இது மேல்சொல்லப்படுகின்ற"ஸாகரம்ஸோஷயிஷ்யாமி" "அத்யத்வாம்ஸோஷயிஷ்யாமி" என்ற ப்ரிதிஞ்ஞாவாக்ய விஷய ஸூசகமாக விருப்பதால் இதையும் ப்ரதிஞ்ஞையென்று பதப்ரயோகமிட்டு வழங்கினுல் குற்றமாகாது என்று, ப்ரதிஞ்ஞை என்று விவகரித்தார்கள். இதுகொண்டே இதை உண்மையான ப்ரதிஞ்ஞை என்று எண்ணிக்கொண்டு ஸமர்த்திக்கப்புகுவதில் ஒரு பயனுமில்லை.

"மதிம்க்ருத்வா" என்று ரிஷி சொல்வதால் "மதிராகாமிகோசரா" என்று எதிர் காலக்கார்யங்களைப்பற்றியோஜிக்கும் யோஜனை என்று பொருள். இந்த யோஜனை தரணுபாவத்தில் செய்யவேண்டிய ஸாகர சோஷணம் ஒன்றை மாத்திரம் யோஜிக்குமே யொழிய, அதற்கும் அனந்தர காலிகமான இராமனது ஸ்வமரணத்தையோஜியாது. இப்படியோஜிப்பது பொருந்துமானுல் ஸ்வமரணுநந்தரகாலிக் விஷயங்களையும் யோஜிக்கும். இப்படி அனந்தர காலிக விஷயயோஜனு பரம்பரையில் திருவடி நினைத்த கணக்கிலே மூட்டிவிடும். ஆதலால் சாகரசோஷணயோஜனை மாத்திரமே தவிர இராமனது ஸ்வமரண நினைவு பொருந்தாது.

ப்ராயோபவேசம்:—ப்ராயோபவேஸம் என்ருல் பட்டினி கிடந்து மரணமாவதாக உறுதிகொண்டு பட்டினி கிடக்கை. இதுகீழ்க் கண்ட விதங்களில் கையாளப்படும்.

1. ஒருவன் கார்யசித்திக்கு வேறுவழியின்றிக் கார்யபங்கம் ஏற்பட்டு, அவமானப்பட்டு வாழ்தலில் இறத்தலே மேல் என்று துணிவது.

2. தான் இங்ஙனசெய்யாவிடின் தனக்கு வேறு விதத்தில் எப்படியும் மரணம் சம்பவிக்கும், ஆதலால் இதுவே சிறந்தது என்று துணிவது (வாநரங்கள் செய்ததுபோல).

3. பிராயோபவேசத்தை ஒரு உபாயமாகக் கைக்கொண்டு ஒரு தெய்வத்தையோ ஒரு மனிதனையோ மனம் இளகும்படி செய்வது (தற்காலம் சத்யாக்ரகத்தில் காணலாம்).

4. ஒருவன் தன் வாழ்வில் வெறுப்புற்று கடவுளைச்சிந்தனை செய்து கொண்டு உயிர் துறந்தால் மோக்ஷம் கிடைக்கும் என்று எண்ணிப்பட்டினி கிடந்து உயிர்விடத்துணிவது. (இம்முறையை ஒருமதத்தினர் கையாளுகின்றனர்).

ப்ராயோபவேசமும் ஸ்வகர்த்ருக மரணமே (தற்கொலை). "தத்வப்ரதிஷ்டை" தைங்யப்ரகாசகமாக வருணன் மனதை இளக்கவேண்டும்என்றுஇராமன்ஸ்வமரணத்தைச்சங்கல்பித்தான்என்றுசொல்லுகிறது. இங்ஙனமாயின் இது 3-வது வகையில் சேரவேண்டும். ஆனால் இராமன் 3-நாட்களுக்குப்பிறகு நிலையைக்கலைத்துக்கடலை வற்றடிப்பதாக முயல்கிறபடியால் இவ்வதிசயனத்தை ப்ராயோபவேசமில்லை என்றும் சொல்லுகிறது. ஸாமரசோஷணமும் பலியாவிடில் ஸ்வமரணம் செய்து கொள்ளுவதாக இராமன் சங்கல்பித்ததாகப் "ப்ரதிஷ்டை" பேசுகிறபடியால் இராமனது சங்கல்பத்தில் ப்ராயோபவேசமும் மரணமார்க்கங்களில் ஒன்றாயிருக்கலாம். இது 1-வது வகையில் சேர்ந்ததது. ஆகவே "ப்ரதிஷ்டை" தன் நிர்வாகத்திற்கு விரோதமாகவே தான் முடிக்கிறது.

உண்மையில் இங்கு இராமனுக்குத்தன் மரண நினைவே இல்லையென்று நாம் சொல்வதால் ப்ராயோபவேசப்பேச்சுக்கு லவலேசமும் ப்ரஸ்க்தியே யில்லையென்கிற நம்முடைய கொள்கையே தலையெடுத்து நிற்கும்.

விமர்சம் 8.

இராமன் மநுஷ்யத்வத்துக்குச் சேரவும் ஸர்வேஸ்வரத்துக்குச்சேரவும் கார்யம்செய்து போகின்றான் என்பது:—

இராமன் செய்யும் ஆனைத்தொழில்களில் ஒன்றாவது தன்மனுஷ்யத்வத்தால்செய்யவியலாது பரத்வத்தைக்கொண்டு சாதித்ததன்று. "தத்வப்ரதிஷ்டையில்" "மனிச்சுக்குச்சேர சரணாகதிசெய்தார் ஈச்வரத்வப்பிடார் பொங்கி 'சாபமாநய' என்றார். மனுஷ்யத்வைகாங்

திகமானஉபாயத்தைக் கொண்டோ பரமேச்வரத்வைகாந்திகமான உபாயத்தைக்கொண்டோ கடலைக்கடந்து விடலாமென்று திருவுள்ளம்" என்று சாகர சோஷணம் பரத்வைகாந்திகமானகார்யம் என்று சொல்லப்படுகிறது. இராமனது மனுஷ்ய ஆற்றலுக்குக் கடலை வற்றடிப்பது ஒரு பிரமாதமான காரியமோ? சாகரத்தைப் பெருகச் செய்த அவன் முன்னோர்களான சகரர்கள் மனுஷ்யர்கள் தானே. மனுஷ்யர் பெருக்கின கடலைச்சுருக்க மனுஷ்யத்வம் போதாதோ? ஈஶ்வரத்வம் வேண்டுமோ? அகஸ்தியர் குடித்து உமிழ்ந்த கடல் தானே? இராமன் தன் பூர்வஜந்மங்களில் திர்யக்கான மீன், ஆமை ஏனம், சிங்கமுமாகிச் செய்த கார்யங்களைக்காட்டிலும், திர்யக்ஜந்மத்தைக்காட்டிலும் எத்தனையோ சிறந்த மனுஷ்ய ஜந்மத்தில் இராமன் செய்தகிருத்யங்கள் எவ்வகையில் சிறந்தவை? வாயுள்வையகம் காட்டல், விஶ்வரூபம்கொள்ளுதல்முதலியனஎதேனும்செய்தானோ? "ஆத்மானம் மாநுஷம்மந்யே" என்பதற்குச் சிறிதும் குறைவு வாராமல் மனுஷ்ய நாடகத்தை நடித்துக் காட்டினவனல்லனோ இராமன்? இவர்கள் சொல்லுகிறபடி இராமன் ஸர்வேச்வரத்வத்தை ஏறிட்டுக்கொள்வதாயின் தன் தண்டோபாயம் பலிக்காமற் போவானேன்? அதற்காக மரணமடைவானேன்? இராமனுக்கு ஸாகரத்தைச் சரண்புகும் நினைவின்போது மனுஷ்யத்வ எண்ணம், அடுத்த க்ஷணத்தில் தண்டோபாய நினைவின்போது ஈச்வரத்வப் பிடார், மறுபடியும் ஸ்வமாரண நினைவின்போது மனுஷ்யத்வம் தானே. ஆகவே ஒரே சமயத்தில் நிகழ்ந்தமூன்று யோசனைகளில் மூன்றுவித ஸ்வஸ்வரூப நினைவுபோலும். மனுஷ்யத்வ நினைவிற்குப் பிறகு ஸர்வேச்வரத்வ நினைவுவருவது சரி; மறுபடியும் இராமனுக்கு புத்திமருண்டு மனுஷ்யத்வநினைவு வந்து (தற்கொலையில்) சங்கல்பமிட்டான்போலும். என்னே இராமமரணவாதியின் வாதப்போக்கு! இவர் கூறுவனவெல்லாம் பரஸ்பர விரோதமானவை என்பதற்கு இதைக்காட்டிலும் சான்று வேறு வேண்டுமோ?

———

விமர்சம் 9.

தாம் கனவு கண்டதாகச் சொல்லிக்கொண்டு கோவிந்தராஜ வ்யாக்யான பங்க்தியைக் கோடிட்டுப் பிரித்துக்காட்டி ஸமர்த்திக்கப் புகுதல்:—

இவர் 125 - பாராக்கள் எழுதிவிட்டுக் கோவிந்தராஜரையும் பழித்துவிட்டுத் தாம் கனவு கண்டதாகச் சொல்லி அக்கனவில் சரண்புகுகிறார். இவருடைய "தத்வப்ரதிஷ்டையின்" 125-பாராக்களும் "பரிசிஷ்டப்" பாராக்கள் 23-ம் ஆக 148-ம் இவரைக்கைவிடும் போது இவர் கண்டகனவோ இவரைக்காக்கும்? இவர் தம்வாயால் கோவிந்தராஜரைப் பழித்தது போதாது என்று தாம் கனவில் கண்ட மகாபுருஷரும் "கோவிந்தராஜர் வேறு சில இடங்களில் சில பொருள்களைத்தவருக எழுதி யிருந்தாலும் பிரகிருத ஸ்தலத்தில் சிறிதும் பிசகிப்போகவில்லை" என்று சொன்னதாகச் சொல்லிப் புநः பழிக்கிறார். கனவின்படி மறுநாட்காலை தாம் பார்த்ததும் "இற்றை முடிதல் கடத்தல்" சாதித்த தமக்குச்சேர கோவிந்த ராஜர் வியக்கியான முரைத்திருப்பதாகத் தோன்றினபடியால் "உப ஜீவ்யரானார்" என்கிறார். "பரிசிஷ்டத்தில்" 128, 129-ம் பாராக்களில் காண்க.

"அபார்த்த வாதிகளுக்கும் கோவிந்த ராஜீயமே பிரதானகுலிசம்" என்கிறார். இப்போது இந்தமட்டில் கோவிந்தராஜர் பாக்கிய வான் என்பதற்கு ஐயமுண்டோ? போகட்டும் உபஜீவ்யராகட்டும்.

ஆனால் கோவிந்தராஜர் உபஜீவ்யராகும்படி என்னதான் கனவில்கண்ட மஹாபுருஷர் சகாயம் செய்தார் என்றால், ஒன்றுமே யில்லை என்றுதான் சொல்லவேண்டி யிருக்கிறது. ஏன்? "புநः ஸ்ரீகோசத்தை ஊன்றி நோக்கு" என்றுதான் சொன்னார். அவ்வளவு தான். விடிந்து கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்தார்.

ராமः—அத்யமேதரணம்வா ஸாமரஸ்யமரணம்வா ஹவத் விதி மதிம்க்ருத்வா—என்று வியாக்யானத்தில் எழுதியிருக்கிற பிரகாரத்தை (இங்கு ராமः என்பதற்குப் பக்கத்தில் ஒருகோடு, பிறகு க்ருத்வா என்பதற்குப் பக்கத்தில் ஒருகோடு, நடுவில் ஒன்று

மில்லை) மாற்றி, ராம: அத்யமே, தரணம்வா ஸாமரஸ்ய—மரணம் வா ஹவத்விதிமதிம் க்ருத்வா என்று ராம: என்பதற்குப் பக்கத்தில் உள்ள கோட்டை அழித்துவிட்டு மே என்பதற்குப் பக்கத்தில் காமாப்போட்டு ஸாமரஸ்ய என்பதற்குப் பக்கத்தில் கோடும் போட்டுவிட்டார். உடனே ஹா! ஹா!! நாம் இதை யோசிக்காமல் இதுவரை வீணே பக்கம் பக்கமாக எழுதினேமே, கோவிந்தராஜரையும் நிந்தித்தோமே என்று மிகவும் அனுசயித்து, தம் வெற்றியினால் ஆநந்தத் தாண்டவமாடி ஜெயக்கொடி நாட்டிவிட்டார். ஆனால் இக்கோட்டோடும் காமாவோடும் திருப்தி யடையாமல் தம் பழைய புராணத்தையே திரும்பியும் 23-பாராக்கள் எழுதுகிறார். ஏன் வீண்சிரமம்? தம் திருத்தத்தில் தமக்கே நம்பிக்கையில்லை போலும்.

கோவிந்தராஜரும், மற்றுமுள்ள பூர்வர்களும், காமா, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி, வியப்புக்குறி, வினுக்குறி முதலிய நவீன வாக்யக்குறியீடுகளை ஏதேனும் தங்கள் பங்க்திகளில் பிரயோகித்திருக்கிறார்களோ? ஏன்? அவர்கள் காலத்தில் வழங்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இவர் பூர்வாசாரிய பங்க்திகள் எல்லாவற்றுக்குமே வாசகக்குறியீடு செய்து காட்டலாமே.

வியாக்யானத்தில் உள்ளபடி ராம: என்பதின் பக்கத்தில் கோடிட்டதின் அர்த்தம் ராம: என்னும் பதம் க்ருத்வா என்னும் வினை எச்சத்துக்கும் அபிஷிஷ்யே என்னும் வினைமுற்றுக்கும் எழுவாய் என்பது தோற்றக் கோடிட்டுக்காட்டப் பட்டிருக்கிறது. க்ருத்வா என்பதின் பக்கத்தில் கோடிட்டதின் காரணம் அதுவரையில், அபிஷிஷ்யே என்பதின் வரையும் உள்ள பூர்ணவசனத்தில் ஒரு பகுதியான குளகவசனம் என்பது தோற்றுவதற்கே. நடுவில் கோடிட்டுக் காட்டாமைக்குக் காரணம் இப்போது எனக்குக்கடத்தலாவது கடற்கொலையாவது ஆகட்டும் என்று யோஜித்து ஒரே மூச்சில் நிகழ்ந்த யோஜனை என்று காட்டுவதற்காகவே. ஸாமரஸ்ய என்பதன் பக்கத்தில் கோடு போடாததின் காரணம் மரணபதத்தோடு அந்வயிப்பதற்காகவேதான். ஸாமரஸ்ய என்பதைத் தரணபதத்தோடு சேர்க்கவேண்டிய அவசியமே யில்லை. ஏன்? பதத்தொடர் அமைப்புமுறை விபரீதார்த்த பரிஹாரத்திற்காகத்தானே! இங்கு என்ன விபரீதார்த்தம் நேர்ந்துவிடும், ஸாம

ரஸ்ய என்ற பதத்தைச் சேர்க்காமலே தரணம் (கடத்தல்) என்றால் வாசகர்களனைவர்க்கும் இந்த வட்டத்தில் கடல் என்று விளங்கும். ஜலம், நிலம், வான் என்ற இம்மூன்றில் ஒன்றைத்தானே கடக்க வேண்டும். இங்கு கடல்தானே. ஆதல்பற்றியே தரணபதம் மே என்பதற்குப் பக்கத்தில் வைக்கப்பட்டு ஸாமரஸ்ய என்பது அடுத் தாற்போல் மரணபதத்தோடு சேர்த்துத்தள்ளப்பட்டது. அதாவது எனக்குத்தரணம் இன்றேல் கடலுக்குமரணம் என்று தேறும். இரண்டு ஷஷ்டிகளுக்கும் சம்பந்தப்பொருள் தோன்ற பதச் சேர்க்கை செய்யப்பட்டது.

இனி கனவின் பயனை திருத்தத்தின்படி கவனிப்போம். ராமः அத்யமே, என்பதில் மேஎன்பதற்குப்பக்கத்தில் காமாப்போடு கிறார். இன்னவிடத்தில்தான் போடவேண்டு மென்று தெரியாது என்று தோற்றுகிறது. "இராமன் இப்போது என்னுடைய" என்று நிறுத்தினால் என்ன அர்த்தமாகும். சம்மந்தப்பொருளாகிய தர ணத்தைச்சொல்லி நிறுத்தாமல் உடைய என்பதோடு நிறுத்தி விட் டால் என்ன அர்த்தமாகும். ஸாமரஸ்ய என்பதற்குப்பக்கத்தில் கோடு போட்டால் தரணம் என்ற பொருள் ஒன்றுக்கே 'மே' என் னும் ஸாமரஸ்ய என்னும் இரண்டு ஷஷ்டிகளும் வந்தால் எதன் சம்பந்தமென்று ஐயப்பாடு தோன்றுதொழியுமோ? ஆனால் இவர் மேக்குப் பக்கத்தில் காமாபோட்டுப்பிரித்ததனால் தரணபதம் ஸாம ரஸ்ய என்பதோடுசேர்ந்து கடலினது கடத்தல் என்று பொருளாவ தால் காமாப்போட்டதும் தவறு. தரணகார்யம் இராமனுடையது, பலனும் அவனுடையது, ஆதலின் மே என்பதோடுதான் சேரும். இவர் க்ருத்வா என்பதற்குப்பக்கத்தில் உள்ள கோட்டை எடுத்துவிட்டு யோஜநாபதம் வரைக்கும் ஒரு நிறுத்தற்குறியுமின்றி எழுதுகிறார். இப்படி எழுதுவதால் வாக்கியப்பகுதிகள் என்ன வென்பது பிரித்துக்காட்டப்படவில்லை. பதத்தொடர் நிறுவையும் கவனிக்கப்படவில்லை என்று தேறுகிறது. இங்ஙனே தன்னுடைய அர்த்தமற்ற வாசகக்குறியீட்டைக்காட்டி மஹாபுருஷசகாயத்தை யும் வீணாக்கிக்கொண்டு விட்டாரே?

இன்னமும் இவர் "பரிசிஷ்டத்தில்" 51-ம் பக்கத்திலும் "விஜ யத்வஜத்தில்" 20-ம் பக்கத்திலும் கீழ்க்கண்டபடி வாக்கிய அமைப் பைக்காட்டுகிறார்.

அத்யமே

ஸாமரஸ்ய தரணம்வா ஹவது }	(தத்ஹாவே)	{ மரணம்வா ஹவது

இந்த அமைப்பு ஒரு தராசைப்போலிருக்கிறது. இதில் பதநிறுவை சரியாயிருக்கிறதாவென்று கவனிக்கவும். வலது கைப்பக்கத்தில் மரணம்வா ஹவது என்று இரண்டே பதங்கள் உள்ளன. இடது கைப்பக்கத்தில் ஸாமரஸ்ய என்னும் பதம் அதிகமாகச்சேர்ந்து மூன்று பதங்கள் ஆகின்றன. ஆதலால் வலக்கைப்பக்கத்தில் மற்றொரு ஸாமரஸ்ய என்னும் பதம்போட வேண்டும். அப்போது தான் பதநிறுவை சரியாயிருக்கும். ஆனல் ஸாமரஸ்ய மரணம்வா ஹவது என்றாய் விடுகிறது. ஆகவே மரணம்வா என்னும் இரண்டாவது கோடி, மே என்பதோடு அந்வயிக்க இவர் காட்டிய இந்த யோஜனையும் இவரை ஏமாற்றி விட்டதே!

ஆனல் நாம் இதை சரியானபடி அமைத்துக்காட்டுவோம். இவர்காட்டிய தராசுக்குக்கோல் இல்லை. அத்யமே - முள் அல்லது பிடியின் ஸ்தானம். ஸாமரஸ்ய என்பதை கோலின் ஸ்தானத்தில் உபயோகப்படுத்தினல், அதாவது,

அத்யமே

|

ஸாமரஸ்ய

தரணம்வா ஹவது	மரணம்வா ஹவது

என்று இருந்தால் பதநிறுவை சரியாயிருக்கும்.

"விஜயத்வஜம்" மறுபடியும் பக்கம் 19-லும், 20-லும் பழைய பல்லவியையே பாடிக்கொண்டு கோவிந்தராஜ வியாக்யானத்தைக் காட்டுகிறது. இதைப்பற்றி முன்னமேயே நாம்பரக்கக்கண்டித்து எழுதியிருக்கிறோம். இன்னமும் சொல்வோம். கோவிந்தராஜர் தரண பதம் மே பதத்தோடு சேரவேண்டுமென்றும் மரணபதம் ஸாமரஸ்ய என்பதோடு சேரவேண்டுமென்றுமே மேதரணம்வா ஸாமரஸ்ய மரணம்வா என்று அந்வயித்துக்காட்டினர். அத்ய மத்கர்த்ருக ஸாமரகர்மக தரணம்வா, மத்கர்த்ருக ஸாமர கர்மக மரணம்வா

என்று பொருள்படவேண்டுமென்றே இங்ஙனம் அந்வயித்தார். தரணபதத்தோடு ஸாமரஸ்ய என்பதைச் சேர்க்காமலே இந்த இடத்தில் எந்தவாலிசனும் ஸாமரதரணம் என்று அறிந்து கொள்வான். "தரணபதம் ஸாமரஸ்யேதி கர்மபதஸாகாங்க்ஷத்வநையத்ய முடையது" என்று இவர் சொல்லுகிற நியாயத்தைக் கொண்டே ஸாமரஸ்ய என்று சொல்லாமலே மே தரணம் என்று சொன்ன மாத்ரத்தாலேயே ஸாமரஸ்யதரணம் என்று தோன்றும். ஹாவஸரணியில் வியாக்யானித்தால் இந்த இடத்தில் குத்ருஷ்டிகள் மே மரணமென்று விபரீதார்த்தம் பண்ணுவர்களென்றே ப்ரதிபதார்த்தமாகவே இந்த சுலோகத்திற்கு வியாக்கியானம் அருளியுள்ளார்.

இன்னமும் பக்கம் 13-ல் "ஹஸிதம்ஹாஷிதம் சைவமதிர்யாயச்சசேஷ்டிதம் | தத்ஸர்வமயர்மவீர்யேணயயாவத்ஸம்ப்ரபஸ்யதி என்று விலக்ஷணமானவாம் பெற்ற வால்மீகிபகவான் இராமபிரானுடைய திருவுள்ளக்கருத்தையும் ஸாக்ஷாத்கரித்தே சுலோகம் இயற்றியுள்ளார். பெருமாள் மே மரணம் என்று உத்தேசங்கொள்ளாதிருந்தாராகில் அத்யமேமரணமென்று வாக்யானுபூர்வியை வால்மீகி அமைத்தது அவர்க்கு அத்யந்தம் அதமகவித்வத்தையே நிலை நாட்டி நிற்கும்" என்று "விஜயத்வஜம்" பேசுகிறது. இந்தவாதமும் இதற்கு விரோதமாகவே முடியும் என்று நிரூபிப்போம்.

வால்மீகிராமாயணத்தில் க்ரமாந்வயமாகவே பொருள் செய்தால் விபரீதப்பொருள் தரக்கூடிய சுலோகங்கள் பலபல உண்டு. அவற்றுள் இந்த சுலோகமும் ஒன்று.

இராமன் ஸாமரமரணத்தை வாசிகமாக ப்ரதிஜ்ஞை செய்வதற்கு முன்னமே வால்மீகி தன்வாயால் சொல்வது கூடாது என்று மரணபதத்தை மே பதத்தின் பக்கத்தில் போட்டு மே மரணமென்று பொருள் தோற்றும்படி சுலோகம் அமைத்தார் என்று நாம் ஆர்ஜவ வாதவிமர்சத்தில் பரக்க எழுதியுள்ளோம். ஆனுபூர்வியை மாற்றுமல் அந்வயித்துப்பொருள் சொன்னால். "இப்போது எனக்கு மரணம் உண்டாகட்டும் இன்றேல் தரணம் ஆகட்டும் என்று எண்ணங்கொண்டு உபாஸனையில் இராமன் அமர்ந்தான்" என்று ஸந்தர்ப்பத்துக்கு விரோதமான ப்ராயோபவேசகோடியில் அந்வயிக்கும். இராம மரணவாதியும் ப்ராயோபவேசம் இல்லை என்றே மே மரணத்தை

இரண்டாவதுகோடியாக மாற்றி அந்வயிக்கிறார். இவர் ஏன் ஆநு பூர்வியைமாற்றுகிறார்? அதாவது "அத்யமே ஸாமாஸ்ய தரணம் வா மரணம்வா ஹவதூ" என்று அந்வயிக்கிறார். முதலில் இருந்த மரணம் கடைசியில் போடப்படுகிறது. இது க்ரமாந்வயமா, வ்யுத் க்ரமாந்யவமாவென்று வாசகர்களே கவனிக்கவும்.

இந்த சுலோகத்தில் ஆநுபூர்வியைமாற்றுமல் பொருள்கொண் டால் ஆபாசமானபொருள் கிடைக்கிறதென்று பலதடவை நிரூபித் துள்ளோம். இந்த ஆபாஸப்பொருளைப் பரிஹரிப்பதற்காகவே இவரும்மாற்றி அந்வயிக்கிறார். ஆனால் க்ரமமாக அந்வயித்தால் உண் மைப்பொருளைத்தருகிற சுலோகங்களை உதாரணமாக்கி மாற்றி அந் வயித்து விபரீதார்த்தம் வருகிறதாகக்காட்டி ஆதலால் க்ரமான்வய மே சிறந்தது என்று நிரூபிக்க முயல்வது அபஹாஸ்யமே யாகும். இந்த ஜாலவித்தை விவேகிகளிடம் பலிக்கவே பலிக்காது.

இன்னமும் இவர்கருத்துப்படி மேமரணத்தை இரண்டாவது கோடியாகவைத்து வால்மீகி சுலோகம் இயற்றவில்லை. அத்யமே பர ணம் என்று ப்ரதமகோடியாகத்தான் வைத்து இயற்றியுள்ளார். ஆதலால் இவர் சொன்னபடி அதமகவியாகவே ஆய்விட்டார். ஆதி கவியான வால்மீகி இத்தனை காலங்கழித்து அதமகவியானார். என் செய்வது! விதிவாய்க்கின்று காப்பாரார்?

ஏன் இவர்கனவைக்காட்டிப்பதுங்குகிறார்? மஹாபுருஷர் கட் டளையின்படி தாம் கோவிந்தராஜர் வ்யாக்யான பங்க்தியைக்கோ டிட்டுப்பிரித்துக் காட்டிவிட்டதாகச்சொல்லிவிட்டால் வாசகர்கள் அனைவரும் பகவதபசாரமோ பாகவதாபசாரமோ வந்துவிடும் என்று பயந்து தம் திருத்தத்தை அப்படியே சிரஸாவஹிப்பார்கள் என்று திருவுள்ளம்போலும். இதனின் மிக்கோர் அயர்வுண்டே!

கனவிற் கண்டது பலிக்குமோ? எவர்க்கேனும் அனுபவமுண் டோ? நினைவிற்கண்டது கிடைக்காதிருக்க கனவிற்கண்டது பிராப்த மாமோ? ஊமனார்கண்டகனவிலும் பழுதாயல்லவாஒழியும்? ஸ்வப் நலப்ததனம்யதாஅல்லவோ? ஏன்? இவர் நாதமுனிகள்போல் யோக திசையில் பிராப்தமென்று சொல்லலாமே. இவரிடம் எவர்க்கும் விப்ரதிபத்தி இல்லையே. இவர்யுக்தியை அனைவரும் பின்பற்றினால் என்னவாகும். பூர்வீக கிரந்தங்களுக்கல்லவோ யோகம்வந்து விடும். பதிப்புக்கள் பலபல பெருகுமே. அச்சுக்கூட முதலாளிகளுக்கு அதிர்ஷ்டந்தான்!

விமர்சம் 10.

"இத்தை" என்பதை "இற்றை" எனவும் "முடித்தல்" என்பதை "முடிதல்" எனவும் திருத்தித் தமிழ் இலக்கணத்திற்குப் பொருந்தச் செய்தல்:—

"பரிசிஷ்டம்" 148-வது பாராவில் "இற்றைமுடிதல்" என்கிற உக்தி தமிழ் இலக்கணத்துக்குச் சேராதென்று சிலர் சங்கித்தார்கள். இன்று என்கிற சொல் உண்டேயல்லது "இற்றை" என்கிற சொல் தனியே கிடையாதாம். இன்று என்னும் சொல் ஐகாரச் சாரியைபெற்று விசேஷணத்வாம்சத்தை யடையுமே யல்லது இன்று என்னும் பொருளில் இற்றையென்று தனியே வாராதாம். அந்தோ! இது இலக்கண இலக்கியங்களில் ஆராய்ச்சி யில்லாதாருடைய பேச்சேயாகும். "ஐயீற்றுடைக்குற்றுகரமுமுளவே" என்ற நன்னூற் சூத்திரம் இப்பிரயோகத்தை நன்கு நிலைநாட்டும். அங்குப் பழைய உரையில் "ஐயீற்றுடைக்குற்றுகரமென்று உடைமை யாக்கிக்கூறினமையின் வருமொழிப்புணர்ச்சியானன்றி இற்றை, அற்றை, ஒற்றை, இரட்டை, வேட்டை, ஆட்டை என ஒரு மொழியாய் நின்று ஐகாரம் பெறுதலுங்கொள்க" என்று ஸ்பஷ்டமாகவே யுள்ளது. தமிழ்ப் பெயராகராதியிலும் (இற்றை-இன்று) என்றுள்ளது "இற்றைப்பறை கொள்வான்" என்ற திருப்பாவையிலும் இற்றையென்பதற்கு இன்று என்கிற அர்த்தமே மூவாயிரப்படியிலும் ஆறுயிரப்படியிலும் உள்ளது. விசேஷணமாக உரைக்கப்படவில்லை. "அவனேட்டைச் சேர்த்தி" என்பது போலவே "அவனேட்டை வந்தான்" என்கிற பிரயோகமும் உண்டென்பதை நம்பிள்ளை தாமே தம் ஈட்டில் காட்டியருளினர். விரிப்பிற் பெருகுமென்று நிற்கிறேம்." என்று பேசுகிறது.

மேற்கண்ட உக்திகளை ஆராய்வோம். இங்கு "ஐயீற்றுடைக் குற்றுகரமுமுளவே" என்ற நன்னூற்சூத்திரம் ஆதாரமாக எடுத்துக்காட்டப்படுகிறது. இந்த சூத்திரம் எழுத்ததிகாரத்தில் புணரியலில் உயிரீற்றுப் புணரியலில் புணர்ச்சி விதிகளைக்கூறும் சூத்திரங்களுள் ஒன்று. ஒரு மொழியைத் தனிமொழி என்று நிர்ணயிப்பதற்குப் புணர்ச்சி விதியை எங்கேனும் ஆதாரமாய்க் கையாள்வ

துண்டோ? புணர்ச்சியாவது நிலைமொழியும் வருமொழியும் இயல்பாயாவது விகாரமாயாவது புணர்வது. உயிரீற்றுப் புணரியல் உயிரெழுத்துக்களை இறுதியில் உடைய நிலைமொழிகளோடு வருமொழி புணரும் முறைகளைப்பற்றிக் கூறும். இங்கு 'இற்றை' என்பது 'இன்று' என்பதன் விகாரமாயின் புணர்ச்சியிலேயே பெறப்படும் என்று தெளிவாகிறது. இன்று என்னும் காலங்காட்டும் மென்றொடர்க்குற்றுகர இடைச்சொல் வினையோடு முடிந்தால் வலியும் மிகாமல், ஐகாரச்சாரியை பெறுமலும் வன்றொடாகமலும் அதாவது இன்றுப், இற்று, இற்றை என்று ஆகாமல் இயல்பாகவே புணரும். இன்று சொன்னான், அன்று கண்டான் என்றே ஆதல் காண்க. அல்லது, அன்று சொன்னான், அன்றைக்குச் சொன்னான் அற்றைக்குச் சொன்னான், இன்று வருவான், இன்றைக்கு வருவான் இற்றைக்கு வருவான், என்று கொடுப்பாய், என்றைக்குக் கொடுப்பாய், எற்றைக்குக் கொடுப்பாய் என்ற பிரயோகங்கள் உண்டு. இவ்வுதாரணங்களில் இன்று அன்று என்று என்னும் பதங்கள் குவ்விகுதிபெற்றே ஐகாரச்சாரியையும் அடைந்து வன்றொடராகவும் விகாரமடைதல் காண்க. ஆதலால் இயல்பாயாவது, விகாரமாயின் குவ்விகுதி பெற்றுவது வினையோடு முடியும் என்று தெளிவாகிறது. இங்ஙனமின்றி இன்றைச்சொன்னேன் இற்றைச் சொன்னேன், அன்றைக்கண்டான், அற்றைக்கண்டான் என்ற பிரயோகங்களை ஒரு தமிழனும் காணமாட்டான். ஆதலின் 'இற்றைக்குச் செய்யுமதுக்கு மேற்படவில்லை' என்ற பிரயோகம் பொருந்துமேயொழிய, 'இற்றை செய்யுமதுக்கு மேற்படவில்லை' என்ற பிரயோகம் பிழையேயாம்.

ஆனல் பெயரோடு புணருங்கால் (1) வலிமிகும், (2) ஐகாரச்சாரியை பெறும் (3) வன்றொடராகவும் மாறும். அன்று கூலி— அன்றைக்கூலி, அற்றைக்கூலி, என்பவை காண்க. "மென்தொடர் மொழியிற் சில வேற்றுமையில் தம்மினவன்றொடராகா மன்னே" சில வன்றொடராம் என்றதனல் அல்வழியினும் சிறுபான்மை வன்றொடராதலும் உண்டு என்னும் கருத்து அமையும். இன்று கூலி— இற்றைக்கூலி, இன்று நாள்—இற்றைநாள் என வருதல் காண்க. அன்று, இன்று என்பன அற்றை இற்றை என்பனவாதற்கு விதியாக 'ஐயீற்றுடைக்குற்றுகரமுமுளவே' என்று கூறப்படுகிறது. அன்று ஐ—அன்றை என்று ஈற்றில் ஐகாராச்சாரியை பெற்று

வருகிற குற்றியலுகரமும் உண்டு என்று பொருள். பண்டு காலம்-பண்டைக்காலம், இன்று நாள்—இன்றைய நாள்—இற்றை நாள், இன்று கூலி—இன்றைக்கூலி—இற்றைக்கூலி, அன்று அழகு—அன்றைய அழகு—அற்றை அழகு என்ற உதாரணங்கள் காட்டப்படுகின்றன. இதனால் இன்று அன்று என்னும் காலங்காட்டும் இடைச்சொற்கள் புணர்ச்சியிலேயே ஐகாரச்சாரியை பெற்றும் வன்றொடராகவும் மாறுகின்றன. மேலும் இவை வருமொழிப் பெயர்ச் சொற்களுக்கு விசேஷணமாகவே புணர்கின்றன என்பதையும் குறிக்க. பெயரோடு புணர்ந்தால் விஷேணமாகவும், வினையோடு முடிந்தால் இன்றைக்கு இற்றைக்கு என்று குவ்விகுதி பெற்றும் மாறுவதைக் காண்க. ஆகையால் "இற்றை செய்யுமதுக்கு மேற்படவில்லை" என்னும் திருத்தம் பிழையேயாம்.

மேலும் இலக்கணங்களில் இற்றை என்பது தனிமொழியாக உதாரணங் காட்டப்படவில்லை. உலக வழக்கிலும் 'இற்றைக்கண்டேன், அற்றைச் சொன்னேன்' என்னும் பிரயோகம் காணப்படாமையாலும் தனிமொழி என்று சொல்வது பொருந்தாது. இத்தகைய பிரயோகங்கள் இலக்கியங்களில் மலிந்து கிடக்குமே. "இற்றைப்பறை கொள்வான்" என்னும் ஒரு உதாரணம் தானா அகப்பட வேண்டும்? மற்றும் பல காட்டலாமே. பூர்வாசாரியர்கள் இற்றை என்று பிரயோகிப்பது வழக்கமாயின் பற்பல விடங்களில் பிரயோகித்திருப்பர்களே! அவ்வித உதாரணங்களையும் காட்டவில்லையே!

ஆயினும் வருமொழிப் புணர்ச்சியை நோக்காமலே ஒன்று—ஒற்றை, இரண்டு—இரட்டை, வேடு—வேட்டை, ஏறு—ஏற்றை என்பன ஐகாரச்சாரியை பெற்றும் வன்றொடராக மாறியும் தனிமொழியாக வருகின்றன என்று உதாரணமாகக் காட்டப்படுகின்றன. இவ்வுதாரணங்களெல்லாம் பெயர்ச்சொல்லா யிருத்தல் குறிக்க. இடைச்சொல் காட்டப்படவில்லை. ஒற்றை என்பதுபோல இற்றை, அற்றை என்பன தனிமொழி உதாரணங்களில் காட்டப்படவில்லை. இருப்பின் இலக்கணக்காரர்கள் எடுத்துக்காட்டி யிருக்க மாட்டார்களா? ஒற்றை, இரட்டை, வேட்டை என்பன செய்யப்படு பொருளாகவும், அடை மொழியாகவும் வினைமுற்றாகவும் வருதல் காண்க. வேட்டை ஆடினான், இரட்டைப் பிள்ளைகள், ஒற்றை மனிதன், இக்குழந்தைகள் இரட்டை என்பன காண்க. மேலும் இத்தனி

மொழிகள் பெயர்ச்சொற்களாதலால், ஒற்றையை, ஒற்றையால், வேட்டையால், வேட்டையினின்றும்—என்று வேற்றுமை உருபு ஏற்றுக்கொள்ளுதல் காண்க. இன்று அன்று என்பவை இடைச் சொற்களாதலால் பெயரோடு புணருங்கால் இற்றை அற்றை என்று விசேஷணமாக மாறியும், வினையோடு முடியுங்கால் இற்றைக்கு அற் றைக்கு என்று குவ்விகுதிபெற்று மாறுமேயன்றி, வேற்றுமை உருபு ஏற்கவேமாட்டா. எங்காவது இற்றையால் இற்றையினின்றும் என்ற பிரயோகங்களை எவரேனும் கண்டதுண்டா கேட்டதுண்டா? இவர் ஒன்று என்பது ஒற்றையென்று தனிமொழியாய் வருதலால் இன்று என்பதும் இற்றையென்று தனிமொழியாய் வருமென்று உறுதிகொண்டு விட்டார் போலும். குதிரைக்குக் குர்ரம் என்றால் ஆனைக்கும் அர்ரம் என்றதுபோலல்லவா ஆகிறது. அந்தோ! இவர் பிறர்க்குக்காட்டும் பரிதாபம் இவர்க்கேயாம்!

இத்துடன் நிறுத்தவில்லையே இவர். தமிழ் அகராதியையும் ஆதாரம் காட்டுகிறாரே. தமிழ் அகராதியிலுள்ள ஆயிரக்கணக்கான பதங்களெல்லாம் தனி மொழியென்றே நினைவுகொண்டார் போலும். இந்த, அந்த, உந்த, ஓர், ஒரு, முதலியன தொடர் மொழியாகவா எடுத்து உரை எழுதப்படுகின்றன. மேற்கண்ட விசேஷண பதங்கள்போல இற்றை என்ற விசேஷணபதமும் உரை யிடப்பட்டிருக்கும். தனித்தனியாக எடுத்துக் காட்டப்பட்டிருப் பதால் தனிமொழி என்று கருதுகிறார்போலும். இதனில் மிக்கோர் அயர்வுண்டே!

இன்னும் இவர் திருப்பாவையும் வலிக்கின்றாரே. செய்யுட் பிரயோகத்தை வசனநடைப் பிரயோகத்திற்கு உதாரணமாகக் காட்டலாமோ? செய்யுள் வழக்கு, செய்யுள்விகாரம் என்னும் ஏகபோக உரிமைகள் செய்யுட்கு உளவே. வேற்றுமை மயக்கம் உருபுமயக்கம், வழுவமைதி முதலியனவும், "வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல் விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண் டுழி" என்று பிரத்யேக விகாரங்களும் உளவே. இவையெல்லாம் செய்யுள் வழக்கேயன்றி வசனவழக்கு என்று சொல்வாரில்லையே. உலகவழக்கில் நெடுங்காலமாகப் பிரயோகிக்கப்பட்டு வந்த சொற் களில் தவிர, வசனநடையில் வேற்றுமை மயக்கம், வழுவமைதி, விகாரங்கள் முதலியன வரும்படி எழுதினால் அவை குற்றங்க ளாகவே கொள்ளப்படும்.

மேற்கண்ட செய்யுள் விகாரவிதிப்படி 'இற்றைக்கு' என்னும் சொல் குவ்விகுதிகெட்டு கடைக்குறையாய்'இற்றை'என்று கு, என்ற எழுத்துமிகையால் தளைக்குற்றம் வாராமற்படி காத்து நிற்கிறது.

இவர் காட்டிய திருப்பாவைப்பாசுரம், வெண்டளையில் நாற் சீரடிகள் தனித்து வரும் பாவினத்தைச் சேர்ந்தது. மாமுன் நிரையும், காய் முன்நேரும், விளமுன் நேரும் வரவேண்டும். எற் றைக்கு மேழ்—தேமாங்காய் நேர் நேர்—என்று வந்தது போல முன்னடியில் இற்றைக்கு என்றால் நேரசை வரவேண்டும், ஆனால் பறை என்று நிரையசையே உள்ளது. ஆதலின் காய்ச்சீர் எடுக் கப்படவேண்டும். தேமா—இற்றை என்று நின்றது காண்கவும். ஆகவே 'எற்றைக்கு' என்பது போன்ற 'இற்றைக்கு' என்னுஞ் சொல் குவ்விகுதிகெட்டு கடைக்குறையாய் 'இற்றை' என்று தளைக் குற்றத்தைத் தவிர்க்கைக்காகவே விகாரம் பெற்று நின்றதே யொழிய, தனி மொழியாய் நிற்கவில்லை. இவர் ஆராய்ந்து பார்த் திருந்தால் நன்கு புலப்பட்டிருக்கும். மேலும் ஆண்டாள் 'இற்றை' என்று தனி மொழியாய் பிரயோகித்திருந்தால் அடுத்த அடியில் 'எற்றைக்கு' என்று பிரயோகிக்காமல் 'எற்றை' என்றே பிரயோகித் திருப்பாள். ஆதலின் 'எற்றைக்கு' என்று பிரயோகித்ததனால் 'இற் றைக்கு' என்று தவிர 'இற்றை' என்று தனி மொழி கிடையாது என்று வெள்ளிடை மலைபோல் தோன்றவில்லையா?

இன்னமும் வேடுவேட்டை என்பதுபோல் ஒடு ஒட்டை என்று யிற்று என்று கருதப்படுகின்றது. வேடு வேட்டை என்பன தனி மொழிப்பெயர்ச்சொற்கள். ஒடு ஒட்டை என்பன மூன்றும் வேற் றுமை உருபுகள். வேற்றுமை உருபுகளைக்கூடத்தனிமொழி என்று இவர் மருள்வதை என்னென்று சொல்வது? அவன் ஒட்டைச் சேர்த்தி என்றால் அவனோடுள்ள சம்பந்தம் என்று சேர்த்திக்கு விசேஷணார்த்தத்தில் உடனிகழ்ச்சிப்பொருளில் வந்த மூன்றும் வேற்றுமை உருபாய் நின்றது. அவனோட்டை வந்தான் என்றாலும் உடனிகழ்ச்சிப்பொருளில் வந்த மூன்றும் வேற்றுமை யுருபேயாம். ஒட்டை என்ற தனிமொழிக்கு துவாரம் என்றல்லவோ பொருள். அவனோட்டைச்சேர்த்தி, அவனோட்டை வந்தான் என்பவற்றில் ஒட்டை என்பதற்குத்துவாரம் என்று பொருள் சொன்னால் என்ன அர்த்தமாகும்? ஆகவே இவர் கூறிய உதாரணங்களுள் ஒன்றேனும்

இற்றை என்பதற்கு ஆதாரமாகப்பொருந்தவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக வில்லையா ?

இற்றை என்பது தனிமொழியல்லவென்பதற்கும் விசேஷண பதமான தொடர்மொழியே என்பதற்கும் நிரூபணமாகக் கம்பராமாயணத்திலிருந்து கீழக்கண்ட செய்யுளைக்காட்டுவோம்.

" இற்றைநாளளவும் யாருமிருடிகளிமையோர்ஞான
முற்றினர் அன்புபூண்டார் வேள்விகள் முடித்துநின்றூர்
மற்றுமாதவருமெல்லாம் வாளெயிற்றிலங்கை வேந்தன்
பெற்றதார் பெற்றூரென்று வியந்தனர் பெரியோரெல்லாம். "

என்ற இச்செய்யுளில் 'இற்றை' என்பது நாள் என்பதற்கு விசேஷணமாகவே உபயோகப்படுத்தப் பட்டிருப்பதைக்குறிக்கவும்.

இன்னமும் "விஜயத்வஜம்" பக்கம் 11, 12-ல் பேசுகிறதாவது திருநாராயணபுரம் ஸம்ஸ்க்ருத கலாசாலைப்புத்தகாலயத்தில் 137-ம் நம்பர் ஏட்டுப்பிரதியில் "இத்தை முடித்தல் ஸாகரத்தைக் கடத்தல்" என்கிற பாடம் காணப்படுகிறதென்றும், ஆனல் 147-ம் நம்பர் தாளகோசத்தில் "இத்தை முடித்தல் கடத்தல்" என்கிற பாடந்தான் காணப்படுகிறதென்றும், முந்தின பாடத்தில் 'சாகரத்தை' என்றிருப்பதால் 'இத்தை' என்பது 'இற்றை' என்று இருந்தால்தான் பொருந்தும் என்றும் சொல்லித்தன் ஆராய்ச்சியே வெற்றிபெற்றது என்று வெகு விரைவில் வெற்றிக்கொடி நாட்டுகிறது.

இதையும் இங்கு ஆராய்வோம். மேற்கண்ட தாளகோச விளக்கத்தால் ஒன்று திடமாகத்தெரிகிறது. அதாவது ஒரு ஏட்டுப்பிரதியிலாவது 'இத்தை முடித்தல்' என்று தவிர 'இற்றை முடிதல்' என்ற பாடமே கிடையாது என்று விளங்குகிறது. அக்காலத்தில், ஏடு எழுதினவர்கள் அனைவருமே 'இற்றை' என்பதை 'இத்தை' என்று மருண்டா எழுதினூர்கள் ? ஒருவர்கூட விவேகத்துடன் எழுதவில்லை என்றுதானே 'விஜயத்வஜம்' பேசுகிறது. இதுவே இதன் மனப்பான்மை.

'இத்தை முடித்தல் ஸாகரத்தைக் கடத்தல்' என்ற பாடத்தில் சாகரத்தை என்று இருப்பதால் இத்தை என்பது--இற்றை என்று இருக்கவேண்டும் என்கிற பேச்சும் விரஸமேயாம். இங்கு இத்தை

என்று தெளிவாக எழுதியிருப்பதால் இதைத்தவறுகவே கருத வேண்டாம். 'இத்தை' 'இந்த உபாஸனையை' என்று பொருள் கொண்டு இத்தை முடித்தல்—நான் செய்யப்புகும் இந்த உபாஸனையை முடித்து பிறகு எவ்வகையானும் கடலை வற்றடித்தாயினும் கடத்தல் செய்யுமதுக்கு மேற்படவில்லை என்று பொருள் கூறலாம். ஆனல் 'இத்தை முடித்தல் கடத்தல்' என்றே எல்லா ஏட்டுப் பிரதிகளிலும் இருத்தலால் இந்தப்பாடமே நாம்போற்றத்தக்கது. எனினும் 'விஜயத்வஜத்தை' வீழ்த்து வதற்காகவும், ஆகையால் இப்பாடத்தாலும் 'இற்றை' என்றிருக்கவேண்டுமென்று ஊகிப்பதற்கு ப்ரஸக்தியேயில்லை என்று நிரூபித்துக்காட்டவும், 137-நெம்பர் ஏட்டுப்பிரதிப் பாடத்தையும் பொருத்திக்காட்டினேம்.

இனி இவர் திருத்தத்தின்படி ஏற்படும் வாக்யத்தில் உள்ள குற்றங்களை வெளிப்படுத்துவோம். இவர் திருத்தப்படி வாக்யமாவது "இற்றை முடிதல் கடத்தல் செய்யுமதுக்கு மேற்படவில்லை" என்பது. முடிதல் என்பதால் இராமமரணம் சந்தர்ப்ப விருத்தமானது என்றும் தீரோதாத்தநாயகனது இயல்புக்கும் கதையின் பின் நிகழ்ச்சிக்கும் பொருந்தாது என்றும் பற்பலதடவை பற்பலபடியாக நிரூபித்துள்ளோம். இவர் நம்பிள்ளை ஹாவஸாணியில் எழுதுகிறர் என்று சொல்லுகிறர். அத்ய என்பதற்கு மாத்திரம் இற்றை என்று பொருள் எழுதுவானேன்? ஹாவஸாணியாயின் ப்ராயோபவேசப் பொருள்படும்படி பிரதம கோடியில்வைத்து எழுதமாட்டார். இற்றை என்பது செய்யுமதுக்கு என்னும் வினையோடு முடிவதால் 'இற்றைக்குச்செய்யுமதுக்கு' என்று தவிர 'இற்றைசெய்யுமதுக்கு' என்ற பிரயோகம் வழக்கத்தில் இல்லை யென்றும் பிழையென்றும் நிரூபித்தோம். கடத்தல் என்ற செய்யப்படுபொருள் குன்றுத் தொழிற்பெயருக்குத்தகுதியாக முடித்தல்என்றே இருக்கவேண்டும். முடிதல் என்பது தகுதியல்ல. இராமமரணவாதி சொல்லுகிற அர்த்தம் நம்பிள்ளைக்குத் திருவுள்ளமாயின் "இற்றைக்கு நான் கடப்பேன் இன்றேல் முடிவேன்" அல்லது "இற்றைக்கு நான் கடத்தற்கு, இன்றேல் முடிவதற்கு மேற்படவில்லை" என்றுவது சாதித்திருப்பர். இங்ஙனன்றி இராமமரணவாதியின் திருத்தவாக்யப்படி அருளியிருக்கவே மாட்டார். ஆதலால் 'இத்தைமுடித்தல்' என்ற பூர்வீகபாடமேபொருந்துமே யொழிய எவ்விதத்திருத்தமும் தேவையில்லை.

இன்னமும் "இத்தை முடித்தல் கடத்தல் செய்யுமதுக்கு மேற் படவில்லை" என்பது ஹாவஸரணியில் மாத்திரம் சொல்லப்பட வில்லை. ப்ரதிபதார்த்த வியாக்யான மென்றும் நிரூபிப்போம். ஈட்டில் உள்ளபாடப்படி "அஹ்யமே மரணம்வாபிதரணம் ஸாமரஸ்யவா" ஸாமரஸ்யவா என்பதில் ஸாமரஸ்ய என்ற கர்மணி ஷஷ்டியின் பொருள் இத்தை என்பது, மரணம் என்பதன் பொருள் முடித்தல், தரணம் என்பதன்பொருள் கடத்தல். அஹ்ய என்பதின் பொருள் செய்யுமதுக்கு மேற்படவில்லை என்ற சொற்களின் அர்த்தத்தில் தொக்கிநிற்கிறது. செய்யுமதுக்கு என்ற வினையின் கர்த்ராகாங்க்ஷை யில் மே என்ற அஸ்மத் சப்தார்த்த ப்ரதமைக வசனமாகிய அஹம் என்பது தெளிவாகின்றது. "இத்தை முடித்தலால் (முடித்தாயினும்) கடத்தல் செய்யுமதுக்கு மேற்படவில்லை" என்று பொருள் தெளி வாக எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே நம்பிள்ளைக்கு ஸாமரமாரண ப்ரதிஞ்ஞாவிஷயமே இந்த ச்லோகத்தின் உண்மையான உள்ளுறை பொருள் என்று கருத்தென்றும் மே மரணம் இல்லையென்றும் குன் றின் மேல் விளக்குப்போல் தோன்றவில்லையா? விவேகிகள் கவ னிக்கவும்.

இராமமரணவாதிக்கு தன் அர்த்தத்திற்குச்சேரவில்லையென்று வியாக்யான பங்க்திகளைத்திருத்துவதும், தனக்கு அர்த்தமாகாவிட் டால் சிலவாக்யங்கள் விடுபட்டுப்போயினவென்று தன் சொந்த வாக்யங்களை நுழைப்பதும் வழக்கமாய் விட்டது. "வாளுளும்" பாசுர ஆராய்ச்சியிலும் இன்னும் சில இடங்களிலும் காணலாம், "ஆச்சாரியர்" என்பது சரியான பிரயோகம் என்று வீணே நிர்வகிக் கிறார். இவற்றை விமர்சிக்கில் பெருகும் என்று விடுத்தனம். இவர் உரைகளில் காட்டிய இலக்கணக்குறிப்புகள் பிழையின்றி இருக்க வில்லை. இத்தகைய ஆராய்ச்சியாளர் நம்பூர்வாசாரியர்கள் இலக்கண நடையைத்தழுவி எழுதவில்லை என்று சொல்வது வியப்பினும் வியப்பே! இனியாவது தம் ஆராய்ச்சியை விடுவாராக.

விமர்சம் 11

யானொட்டி யென்னும் பாசுரத்தின் ஈட்டில் திருஷ்டாந்தமாக எடுத்த "அத்யமே" ச்லோகம் ஸாமர மாணத்துக்குத் திருஷ்டாந்தமாகச் சிறிதும் பொருந்தாது என்பது:—

"தத்வப்ரதிஷ்டை" பாரா 73-ல் "நம்பிள்ளைபோன்றவர்கள் அரிய பெரிய அர்த்தத்தை அருளிச்செய்யக் கோலினால் விளக்கமாக அருளிச் செய்வார்களேயன்றி நாம் போராடவேண்டும்படியான நிலைமையில் மயங்கவைத்து அருளிச் செய்யார்கள்" என்று பேசுகிறது. நம்பிள்ளை தெளிவாகவே உரைத்திருக்க தன் அர்த்தத்திற்குச் சேரவில்லை என்று தான் மயங்கினால் நம்பிள்ளை என் செய்வார். இருபதாவது நூற்றாண்டில் இந்த ச்லோகத்திற்கு இத்தனை அநர்த்தம் நேரப்போகிறது என்று நம்பிள்ளை கனவிலும் கருதவில்லையே !

இனி பாசுரநயத்தில் சிறிது ரஸிப்போம். ஆழ்வார் சொல்வதாவது 'ஸமஸ்த கல்யாணகுணோ பேதனான எம்பெருமானாகிற தூயவமுதைப் பருகிப்பருகி என் மாயப்பிறவி மயர்வறுத்தேன். அதுவும் என்னாலாகுமோ, எம்பெருமான் தானே என் மயர்வறுத்து என் மனத்தேமன்னினான். மன்னித் தன்னுடைய பரம போக்யமான ஸம்ச்லேஷத்தை எனக்குக் கொடுத்தான். இனி அதை நான் எப்படியாலும் இழக்க இசையேன். ஒரு படியாலும் அதற்கு ஒழிவும் நேராது. அவன்தான் அகலிலும் நான் ஒருக்காலும் இசையேன். அவனும் என்னைவிட்டு அகலான்" என்கிறார். எங்ஙனேயெனில் 'யானொட்டி' யென்று சாதிக்கிறார். அதாவது "எம்பெருமான் என் இசைவின்றிக்கே தானேவந்து வலியப்புகுந்தான். ஏன்? என் ஆத்மானுபவ போக்யதையின் நசையாலே வந்துட்புகுந்தான். இங்ஙனம் ருசிகண்ட அவன் என்னை விட்டகல இசையுமோ" என்கிறார். "எவ்விதம் என் ஆத்மாவைக் கிட்டினான் என்பீரேல் சொல்லுகிறேன்" என்கிறார். "எம்பெருமான் முதலில் என்னைக்கிட்டி 'ஆழ்வீர் நாமும்முடைய பாடே (பக்கத்திலே-உம்முடன் ஸம்ச்லேஷித்து) யிருப்போம்' என்றார். அதற்கு நான் ஆழ நெடுங்கடல் போன்ற என் அகாதமான நெஞ்சின் சகவாச

தோஷத்தால் 'ஒய் உமது சகவாசம் எனக்குவேண்டாம் காணும்' என்றேன். அவ்வளவு தான் தாமதம். வந்துவிட்டது கோபம். ஏன்? என் ஆத்மஸம்ஸர்க்கவிருப்பம் தன்னால் விலக்கவொண்ணாததா யிருந்தது போலும். உடனே 'ஆகில் இங்கே இருக்கக்கடவேன். ஒகோ! உம்மிசைவை எதிர்பார்த்துத்தான் நான் கார்யங்கொள்ள வேண்டுமோ? நான் தர்மப்பிரியனாகையால் முதலில் உம் இசைவு இல்லாமல் உட்புகுதல் கூடாது என்று நான் முன்னம் கடலரசனை வேண்டிநின்றதுபோல் வேண்டி நின்றேன். நீர் உமது நெஞ்சின் இறுமாப்பால் ஒட்டேன் என்கிறீரே. ஸாகரம்ஶோஷயிஷ்யாமி, ஸர்வயாஸூஸமர்யோஸ்மி என்றவன் அல்லனோ நான். 'இத்தை முடித்தல் கடத்தல்' செய்து என்று, எனக்கு இடைச்சுவராயிருக்கும் இந்நெஞ்சை இல்லை செய்துவிட்டு அதாவது அதன் இசையாமையை மாற்றி இசையச்செய்து உமது ஆத்மாவைக்கிட்டுகிறேன் பாரும், என்றல்லவோ பிரதிஞ்ஞை பண்ணி என்னுட்புகுந்தான். தன்னாலும் திருத்தவொண்ணாத என் தனிநெஞ்சை வஞ்சித்து (மாற்றி)ப்புகுந்தான். பின்னர் என் அழுக்குடம்பையும் போக்ய மாகக்கொண்டு என் ஆத்மாவோடு கலந்து நின்றான். இப்படி நின்றவன் இனி அகல இசையுமோ" என்கிறார்.

தத்வபிரதிஷ்டையில் பாரா 81-ல் "கடலரசனுடைய ஸ்தானத்தில் ஆழ்வாரும் இராமபிரானுடைய ஸ்தானத்தில் எம்பெருமானுமாகக்கொள்ளவேணும், கொண்டு "அத்யமே மரணபவா" என்கிற சுலோகத்திற்கு சமுத்திரத்தை முடிக்கவாவது அதைக்கடக்கவாவது வேண்டும் என்பதாக பொருள் உரைத்தால் தார்ஷ்டாந்திகத்தில் "ஆழ்வாரைக்கொல்லவாவது" என்பதாக பிரதிஞ்ஞையின் ஆகாரம் கூறவேண்டும். இஃது எங்ஙனே பொருந்தும்" என்கிறார்.

இவர் உட்புகுந்து ஆராயாமல் மேலெழுந்தவாறாகக் கவனித்துவிட்டு இராமனைக்கொன்றது போதாதென்று ஆழ்வாரையும் கொல்ல முயல்கிறார்.

இனி இத்திருஷ்டாந்தம் எவ்வளவு அழகாக அமைந்திருக்கிறது என்பதை நிரூபிப்போம். முதலில் இவர் உவமித்தபடி ஆழ்வாரைக்கடலரசனாகவே கொள்வோம். இராமன் முதலில் கடலரசனை இரந்து நின்றான். கடலரசன் தன் ஆழநெடுங்கடலுடை

மையின் இருமாப்பால் இசையவில்லை. இதுபோல எம்பெருமான் ஆழ்வாரை முதலில் "ஆழ்வீர் நாம் உம்பாடேயிருப்போம். என்று வேண்டிநிற்கின்றான். ஆழ்வார் தனது ஆழநெடுங்கடல்போன்ற அகாதமான தனி நெஞ்சின்சகவாசதோஷத்தால் விளைந்த இருமாப் பால் இசையவில்லை. இராமன் "தன் சரணுபாயம் பலிக்காததால் இனி இவன் இருமாப்புக்குக்காரணமாகிய இக்கடலைவற்றடித்தலே சரி என்று ஆரம்பிக்க அதனால் கடலரசன் இசைகிறான். அவனை யும் வாழ்வித்து தன்னையும் வாழ்வித்துக்கொள்கிறான். இதுபோல ஆழ்வாருடைய கடல்போன்றதனி நெஞ்சைகுணங்களாகிற பாணங் களால் வஞ்சித்து (வற்றடித்து - அதாவது இசையாமையை மாற்றி) ஆழ்வாரது ஆத்மாவைக்கிட்டி தன்னுடைய பரமபோக்யமான ஸம் ஶ்லேஷத்தை ஆழ்வாருக்குக்கொடுத்து வாழ்வித்து, பரமபோக்ய மானதும் தான் மிகவும் விரும்பினதுமான ஆழ்வாரது ஆத்மாவின் ஸம்ஶ்லேஷத்தைப்பெற்றுத் தன்னையும் வாழ்வித்துக்கொள்கிறான். இதுவன்றோ திருஷ்டாந்த விளக்கமிருக்கிறபடி. இப்போது நாம் ஆழ்வாரைக்கொன்றோமோ, அல்லது இராயணையாவதுகொன்றோ மோ ? இல்லையே.

மற்றுமோர் விதத்தால் இத்திருஷ்டாந்தத்தை விளக்கிக்காட்டு வோம். இராவணனால் சீதைப்பிராட்டி அபஹரிக்கப்பட்டாள் இராக்ஷஸிகள் காவல். தர்ஜன பர்ஜனாதிகளால் ஹிம்சிக்கிறார்கள். இராமனுக்கு இராவணனைக்கொன்று சீதையை மீண்டும் அடைய வேண்டும் அதற்காக வானரப்படை பலத்தோடு வில்லுங்கையுமாய் இலங்கைக்கும் தனக்கும்குறுக்கே பெருந்தடையாயிருக்கும்கடலின் கரையை அடைகிறான். முதலில் கடலரசனை வேண்டுகிறான். இசை யாததால் அழிக்கப்புகுந்து, கடந்துசென்று இராவணவதம்செய்து சீதையை அடைகிறான். இதைப்போலவே ஆழ்வாருடைய ஆத்மா. வாகிய சீதை ஸ்வதந்திர மென்கிற தீயநினைவாகிய இராவணனால் அபஹரிக்கப்பட்டாள். காம, குரோத, லோப, மத, மாச்சரியமாகிய இராக்ஷஸஸ்திரீகளால் அலைக்கப்பட்டு வெருட்டப்படுகிறாள். எம் பெருமானுக்கு ஆழ்வாரது ஆத்மாவாகிய சீதையைமீண்டும் அடைய வேண்டும் இராமன் தன் பூர்ணபடைபலத்துடன் கடற்கரையை அடைந்ததுபோல எம்பெருமானும் தனதுஸமஸ்தகல்யாண குணங் களாகிறபடைபலத்தோடு ஆழ்வாரை நெருங்குகிறான். இடையில் இருக்கிறது ஆழநெடுங்கடல்போன்ற ஆழ்வாரது அகாதமான

நெஞ்சு. இராமனைப்போல முதலில் எம்பெருமானும் ஆழ்வாரைப் பிரார்த்திக்கிறான். நெஞ்சின் ப்ரபாவத்தால் ஆழ்வார் இசையவில்லை, நெஞ்சுகடலை எவ்வாறு ஒக்கும் எனில் கடலும் ஆழமுடைத்து நெஞ்சும் ஆழமுடையது. "கடலாழம் கண்டாலும் நெஞ்சாழம் காணமுடியாது" என்ற பழமொழியே சான்று. கடல் கருநிறம் வாய்ந்தது. நெஞ்சும் அஞ்ஞான இருளால் கருநிறம் பெற்றது. நெஞ்சில் ஆசையாகிற அலை, விஷயாந்தரங்களாகிற மத்ஸ்ய மகர திமிங்கலாதிகள். இத்தகைய பிரபாவத்தையுடைய நெஞ்சைக்கடக்க வேண்டும். பிரார்த்தனையோ பலிக்கவில்லை. (இங்கு ஆழ்வாரைச் சீதையாக ஒப்பிட்டிருக்கும்போது ஆழ்வாரைப்பிரார்த்தித்தலாவது சீதையையே பிரார்த்திப்பது போலல்லவா அர்த்தமாகும் என்று நினைக்க இடமிருக்கிறது. ஆனால் நாம் ஆழ்வாரது ஆத்மாவையே சீதையாக ஒப்பிட்டோம்.) ஆழ்வாரது ஆத்மா எனில் பிரகிருதி சம்பந்தமற்ற சுத்த ஆத்மா. ஆழ்வார் எனில் பிரகிருதி சம்பந்த முள்ள ஆழ்வார் என்று வழங்கப்படுகிற சேதனன் என்று கடலர சன் ஸ்தானத்தில் கொள்ளவேண்டும். எம்பெருமான் தன் குணங்க ளாகிற படை பலத்தால்தானே வசமாக்க வேண்டும். தன்னுடைய சிலாதி குணங்களாலும் வடிவழகாலும் ஆழ்வாரது நெஞ்சைத் தனக்கு விதேயமாம்படி செய்கிறான். பின்னர் சீதையாகிற ஆழ் வாரது ஆத்மாவைக்கிட்டி அனுபவித்து க்ருதார்த்தனாகிறான்.

இங்ஙனம் உவமையைப்பரக்க அழகாக விளக்காமல் கடலர சனை உவமையாக்கி, உவமையைவிளக்க மாட்டாமல் ஆழ்வாரைக் கொல்லப்புகுவானேன். இதை வாசகர்களே உய்த்துணரவேண்டும். ஆக 'இத்தை' (கடல்போன்ற நெஞ்சை) முடித்தல் கடத்தல் என்று சாகரமாணமே பொருந்தும் என்று தெளிவாக நிரூபிக்கப்பட்டது.

ஆனால் இராம மாணவாதி சொல்லுகிறபடி "மேமரணம்" என்று இராமமரணம் சொன்னால் திருஷ்டாந்தத்தை விளக்கிக்காட் டவே முடியாது. ஏனெனில் இவர் ஸாகரஸ்ய என்பதற்கு கடல் என்று பொருள் கொள்ளாமல் கடலரசன் என்று பொருள் கொண்டு கடலரசன் ஸ்தானத்தில் ஆழ்வாரை வைத்துப்பேசுகிறார். சாமோபாயத்திற்கு ஆழ்வார் இசையவில்லை. இனி தண்டோபாயத் தால் முடிவது ஆழ்வார்தானே. இதிலும் ஆழ்வாரை முடித்தல் அல்லதுதான் முடிதல் என்று தானே தேறும். எம்பெருமான் ஸர்வ சக்தனாகையால் ஆழ்வாரே முடிந்துபோவர். முடியாவிடில் தான் முடிவதாக எம்பெருமான் திருவுள்ளமாயின் எம்பெருமானுக்கும் தனது ஸர்வசக்தித்வத்தில் சந்தேகம்போலும். ஆகவே ஸாகரமா ணம்தவிர இராமமரணம்திருஷ்டாந்தத்திற்குசற்றும்பொருந்தாது.

மேலும் இப்பாசுரத்தில் ஆழ்வார், ஏற்கனவே தன்னுள் எம்பெருமான் புகுந்த பிரகாரத்தைச் சொல்லுகிறார். எவ்விதம்

புகுந்தார்? தனி நெஞ்சை வஞ்சித்துப்புகுந்தார். ஆக "இத்தை முடித்தல் கடத்தல்" என்ற பிரதிஞ்ஞையில் இத்தை என்பது நெஞ்சைக்காட்டுகிறது. நெஞ்சு கடலுக்கு உவமையானால் இத்தை என்பதற்கு விஷயம் கடல்தானே. கடலை முடித்துக் கடத்தல் என்று தானே தெளிவாகத்தேறுகிறது. ஆதலின் நம்பிள்ளை இத்தை என்று எழுதினது கடலைக் குறித்துத்தான் என்பதில் சந்தேகமேயில்லை. "இத்தை முடித்தல் கடத்தல்" என்ற பிரதிஞ்ஞைபோல இசையாத இந்நெஞ்சை முடித்துக்கடத்தல் என்று பிரதிஞ்ஞைசெய்தார். இது பற்றியே இவ்வகையானும் எவ்வகையானும் 'இத்தை முடித்தல்கடத்தல்' என்பதே பொருந்தும். விவேகிகள் ஆலோசித்துப் பார்த்தால் இம்முடிவுக்கே வருவார்கள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

முடிவுரை

இக்கட்டுரையின் முடிவான தேற்றத்தைச்சுருக்கமாகவும்தெளிவாகவும் அறியப்படுத்துவோம். கோவிந்தராஜருக்கும் நம்பிள்ளைக்கும் ஸாகரமரணார்த்தந்தான் திருவுள்ளமென்று பரக்கநிரூபிக்கப்பட்டிருக்கிறது. இராமாயணப்புத்தகங்களில் உள்ளபாடப்படி— "அத்யமே மரணம்வாபி தரணம் ஸாகரஸ்யவா" "அத்யமே தரணம் ஶரண ஸாய்யம்ஹவது அயவாஸாகரஸ்யமரண(மாரண) ஸாய்யம் வாஹவது" என்று பொருள் ஆகும்.

நம்பிள்ளை ஈட்டில் உள்ளபாடப்படி—அத்யமே மரணம்வாபி தரணம் ஸாகரஸ்யவா—என்பதின் அர்த்தத்தில் இரண்டுயோஜனைகள் உள. (1) அத்யமே மரணம்வாபி ஸாகரஸ்ய தரணம் ஏவ ஹவேத்—இப்போது எனக்கு மரணம் நேர்வதாயினும் (மரணபர்யந்தம் பார்த்தாவது) ஸாகர தரணமே ஆகவேண்டும் (ஆனால் இராம மரணவாதி சொல்லுகிறபடி அநந்தரஹாவியான ஸ்வகர்த்ருக ஸ்வ மரணம் (தற்கொலை) அல்ல. (2) அத்யஸாகரஸ்ய மரணம்வாபி மே தரணமேவஹவேத்—இப்போது (என் சரணம் பலிக்காவிட்டால்) கடற்கொலையாலாவது (வற்றடித்தலாலாவது) எனக்குத்தரணம் ஆகட்டும் என்று பொருள். இவ்விரண்டு யோஜனைகளில் இரண்டாவது யோஜனையே ப்ரகரணத்துக்கும், கதையின் பின் நிகழ்ச்சிக்கும், இராமப்ரக்ருதிக்கும், ஸந்தர்ப்ப ஔசித்யத்துக்கும்' பொருந்தும் என்று நம்பிள்ளை "இத்தை முடித்தல் கடத்தல்' என்று வியாக்யானித்திருக்கிறார். இதையே அரும்பத உரைகாரரும் "இத்தை முடித்தலித்யாதி மேல் 'சாபமாநய'. இத்யாதிப்படியைக்கடாக்ஷித்து இப்படி யோஜித்தது" என்கிறார். இங்ஙனம் 'சாப

மாநய—இப்படி யோஜித்தது' என்ற இருபதத்தொடர்களையும் ஸமன்வயப்படுத்தி அர்த்தங்கொண்டால், நம்பிள்ளைக்கு இரண்டாவது யோஜனையே திருவுள்ளம் என்று தெரிவிக்கிறதாகத்தேறும்.

'இராமன் வருணனை வழிபட்டது ஸாமோபாயாநுஷ்டானம். உபாஸனை அதன் ப்ரகாரம். வருணன் தேவனாகையால் உபாஸித்து ப்ரஸந்நமாக்கிக்கொள்ளவேண்டும். அஞ்சலி, அதிசயன, மௌநாதி நியமங்கள் அதன் அங்கங்கள். தண்டோபாய ப்ரயோகமாகிய ஸாமுர ஶோஷணத்துக்குச்சேர இதை ஸாமோபாயாநுஷ்டானம் என்று தான் சொல்லவேண்டும். ப்ரபத்தியநுஷ்டானம் என்றால் உடனே நடந்ததண்ட ப்ரயோகத்தோடு விரோதிக்கும். எங்கேனும் கதியின்றிச்சரண்புகுந்தவன் தண்ட ப்ரயோகம் செய்யமுடியுமா? செய்தால் ப்ரபத்தியாமா? ப்ரபத்தியென்றால் எவரேனும் தன்மரண பலத்திற்காக ப்ரபத்தி செய்ததுண்டோ ? ஆகிலும் ப்ரதிஜ்ஞைகூடுமோ ? இராமன் அநதிகாரியாகையாலும் வருணன் ஜ்ஞானஹீநனாகையாலும் பலிக்கவில்லை. மேற்கண்ட மௌநாதி உபாஸனா நியமங்கள் ப்ரபத்திக்குவேண்டா. அஞ்சலி ஒன்றேபோதும். ப்ரபத்தியின் முக்கிய லக்ஷணம் ஒன்றுமில்லாததால் ப்ரபத்தியென்று சொல்வதற்கில்லை. ஆதலால் ராஜநீதிக்குச்சேர்ந்த ஸாமோபாயாநுஷ்டானமே.

நம்பிள்ளை போல்வார் அர்த்தம் எழுதப்புகுந்தால் நம்போன்ற சாமான்யர்களுக்குத்தோன்றும் அர்த்தத்தைவிட்டு அதிமனோஹரமான அர்த்தத்தையே அருளிச்செய்வர் என்பதில் எவர்க்கும் விப்ரதிபத்தி இல்லையே. இங்ஙனமிருக்க இராமமரணவாதி தனக்குத்தோற்றும் அர்த்தத்திற்குப்பொருந்தவில்லை என்று ஈட்டுப்பங்க்தியைத்திருத்தப்புகுவது குல்லாய் பொருந்தவில்லை என்று தலையைத் திருத்துவது போலிருக்கிறது. அன்வயத்தை மாற்றமனமின்றி அர்த்தஸ்வாரஸ்யத்தைக் கை விடுவாருண்டோ ?

எம்பெருமான் ஆழ்வார் விஷயத்தில் செய்த ப்ரதிஜ்ஞாரீதி தோற்ற நம்பிள்ளை அஃயமே சுலோகத்தைத் திருஷ்டாந்தித்து 'இத்தை முடித்தல் கடத்தல் செய்யுமதுக்கு மேற்படவில்லை' என்கிறார். இத்தை—கடல் போன்ற ஆழமுள்ள இத்தனிநெஞ்சை முடித்தல்—(கடலைவற்றடித்து) இதன் இசையாமையை முடித்து (மாற்றி) என்று பொருள். சிலர் 'கடத்தல் முடித்தல்' என்றிருக்க வேண்டுமென்று சொல்வதும் தவறு. ஏனெனில் கடத்தலாவது முடித்தலாவது என்று பலத்தில் விகல்பமாய் விடும். 'இறையோ விரக்கினும், என்கிற பாசுரவ்யாக்யானத்தில் பெரியவாச்சான்பிள்ளை சரணமரணங்களுக்கே விகல்பமிட்டார். இப்பாசுர வ்யாக்யான பங்க்தி விஷயமாக ஆஸூரிஸ்வாமி 'பரித்ராணத்தில்' வெகு அழகாயும் விஸ்தாரமாயும் அருளியிருக்கிறபடியால் நாம் விரிவாய் எழுதாமல் விடுத்தனம். இராமனுக்கு உத்தேச்யபலன் கடத்தல் தவிரமுடித்த

ஷில்லையே, முடித்தல் உபாயந்தானே. அது தோற்றவே நம்பிள்ளை "முடித்தல் கடத்தல்" முடித்தலால் (முடித்தாயினும்) கடத்தல் என்கிறார்.

ஆகவே இராமமரணவாதி சொல்லுகிறபடி இராமன் தன் தண்டோபாயமாகிய ஸாமரஸோஷணமும் பலியாவிடில் சிதையைப் பிரிந்து வாழமனமின்றித் தற்கொலைசெய்துகொண்டு மாள்வதாக ப்ரதிஜ்ஞைசெய்தான் என்ற அர்த்தம் எவ்வகையானும் பொருந்தாது என்று அடியேனால் பரக்க நிரூபிக்கப்பட்டிருக்கிறது. வாசகர்கள் ஆலோசித்துப்பார்க்கவும். இக்கட்டுரை மிகவும் பெருகியதைப் பற்றி வாசகர்கள் க்ஷமிக்கவும்

ஸ்ரீவாலயந்வி குருராட் பதபங்கஜஸங்கிநா
தாஸேந ஸ்ரீநிவாஸேந விமர்சோயம் வ்யரச்யத

அடியேன் செய்யும் விண்ணப்பம்.

"தத்வப்ரதிஷ்டையின்" ஆசிரியர் எத்துணைச்சிறந்த பண்டிதரேனும் எட்டுணையும் பூர்வாசாரியர்களுக்கு ஒப்பிலர். ஆயினும் அவர்கள் அருளிச்செயல்களை இவர் ஆராய்வது எந்த நியாயத்தைக் கொண்டோ அதே நியாயத்தைக்கொண்டே அடியேனும் மிகச்சிறு மதியனாயினும் இவ்விமர்சம் எழுதத்துணிந்தனன். இவர் எதையாவது எழுதிக்கொண்டு கண்டன ப்ரதிகண்டனமென்று க்ரந்தவிஸ்தரம்செய்துகொண்டேபோனால் தம் ப்ரதிவாதிகள் தாங்களாகவே சிறிது காலத்தில் அயர்ந்து விடுவார்கள், அப்போது வெற்றி தமதே யாம் என்ற முறையைக்கையாண்டு வருகின்றனர். இதில்யாதும் பயனில்லையென்று தெளிவாராக. இவர் இந்த ச்லோகார்த்த விஷயத்தில் தமது வாதங்களையெல்லாம் ஏற்கனவே சொல்லி முடித்துவிட்டனர். அடியேனும் எனது ப்ரதிவாதங்களை இவ்விமர்சத்தில் பரக்க எழுதியிருக்கிறேன். அர்த்த நிச்சயம் பண்ணுவதில் அடியேனுடைய வாதங்கள் சிறந்தனவா அல்லது இவரது வாதங்கள் சிறந்தனவா என்று நிர்ணயம் செய்யவேண்டுமானால் உபயபாஷா வல்லமையும் மத்யஸ்த த்ருஷ்டியும் உள்ள சாஸ்த்ர பண்டிதர்களிடம் அடியேனது விமர்சத்தையும் இவரது க்ரந்தங்களையும்ஸமர்ப்பித்து அவர்களாலேயே நிர்ணயிக்கப்படவேண்டுமேயாழிய தாமும் தமவர்க்கமும் ஹேரீநாதம் செய்வதில் யாதும் பயனில்லை. இதுவன்றி விஷயசம்பந்தமில்லாத ஆத்மோத்கர்ஷப்ரகடனபர, அந்யாபகர்ஷ ஹாஷணமய வாக்விஜ்ரும்பண பூரிதலேகனங்கள் விஷயீகரிக்கப்படமாட்டா என்று அடியேன் ஸவிநயம் விண்ணப்பம்செய்து கொள்கிறேன்.

தாஸன்

வ. சே. (V. S.) ஸ்ரீநிவாஸன்.

செல்வரங்கன் பிரஸ், சென்னை:—(7—7—1937)

இப்புத்தகம் கிடைக்குமிடம் :—

K. A. நாராயணய்யங்கார்,

22, சந்திரப்ப முதலிதெரு,

ஜி. டி. மதராஸ்.